بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8 | இதழ் 20-21

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 ஷவ்வால் 27-துல்கஅதா 4★ஹிஜ்ரி ஷம்ஸி-1402 ஹிஜ்ரத் 18-25 ★ மே 18-25 2023


**அல்லாஹ்வின் கட்டளை**

وَعَدَ اللّٰہُ الَّذِیۡنَ اٰمَنُوۡا مِنۡکُمۡ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَیَسۡتَخۡلِفَنَّہُمۡ فِی الۡاَرۡضِ کَمَا اسۡتَخۡلَفَ الَّذِیۡنَ مِنۡ قَبۡلِہِمۡ

**பொருள் :**
அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப் பூமியில் அவர்களை கலீஃபாவாக ஆக்குவதாக வாக்குறுதி வழங்கியுள்ளான்.
(அந்நூர் : 56)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# கிலாஃபத் சிறப்பிதழ்

**அந்த இரண்டாம் வல்லமையை காண்பதும் உங்களுக்கு அவசியம் ஆகும்**
**மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும்**
**அதன் தொடர் மறுமை வரை அறுந்துவிடாது. நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன்**
**மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் இருப்பார்கள். அவர்கள் இரண்டாம் வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள்**

## ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியின் மேற்கோள்

எனவே அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகின்றான். எனவே இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டுவிட்டு சாத்தியமில்லை. எனவே நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனெனில், அந்த இரண்டாம் வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்றுவிட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பாராஹீனே அஹ்திய்யாவில் (குறிப்பிடப்பட்டு) உள்ளது. மேலும், அவ்வாக்குறுதி என்னைப் பற்றி அல்ல ; மாறாக, உங்களைப் பற்றியதாகும். நான் உம்மைப் பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வரவேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையானவனும், நன்றியுள்ளவனும் உண்மையாளனுமாவான். அவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்கு பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்று கூடி துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டவாது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமை மிக்க இறைவன் என்பதை உங்களுக்கு காட்டட்டும். உங்கள் மரணத்தை அருகில் இருப்பதாகக் கருதுங்கள். அந்தநேரம் எப்போது வரும் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.

தூய மனதை கொண்ட ஜமாஅத்தின் சான்றோர் என் பெயரில் எனக்குப் பிறகு மக்களிடமிருந்து பைஅத் வாங்கட்டும். ஆசியா, ஐரோப்பா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும் பூமியிலுள்ள பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்ற எல்லா நல்ல ஆன்மாக்களையும் எல்லா நல்ல இயல்பு கொண்டவர்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து தனது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கவே இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனுடைய நோக்கமாகும். அதை நிறைவேற்றுவதற்காகவே நான் உலகத்தில் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் மென்மை, நல்லொழுக்கம், துஆக்கள் ஆகியவற்றில் அழுத்தம் கொடுத்து இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள். எனக்கு பிறகு யாராவது இறைவனிடமிருந்து பரிசுத்த ஆவியை பெற்று நிற்காத வரை நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்றுங்கள்.

(அல் வஸிய்யத் நூல் -தமிழாக்கம், பக்கம் 12 - 14)

* * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

# பதர் வார இதழ் காதியான்
## சிறப்பிதழ் : கிலாஃபத்

| | இந்த இதழில் | பக்கம் |
|---|---|---|
| 1 | தலையங்கம் | 2 |
| 2 | ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஜுமுஆ பேருரை (ஏப்ரல் 14, 2023) | 3 |
| 3 | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்கள், துஆக்களுக்காக அன்னார் வழங்கிய திட்டங்கள் மற்றும் அறிவுரைகள் | 12 |
| 4 | கிலாஃபத் பாதுகாப்பிற்கான அரண் | 18 |
| 5 | பிள்ளைகளின் தர்பிய்யத்தும் அஹ்மதி தாய்மார்களின் பொறுப்புகளும் & இறைநேசம் & தொழுகை & திலாவத் & கிலாஃபத்தின் மீதான நேசம் & உயர்ந்த ஒழுக்கம் | 22 |

مَنْ خَرَجَ مِنَ الْجَمَاعَةِ قِيْدَ شِبْرٍ
فَقَدْ خَلَعَ رِبْقَةَ الْإِسْلَامِ مِنْ عُنُقِهِ

**ஜமாஅத்திலிருந்து சிறிதளவேனும் எவர் விலகினாரோ அவர் இஸ்லாத்திலிருந்து வெளியேறிவிட்டார்**

முஹம்மதிய்ய சமுதாயத்தில் இறுதிகாலத்தில் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவார் என்பது ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப இக்காலத்தின் முஜத்தித், மஸீஹ் மற்றும் மஹ்தி நானே ஆவேன் என்று ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் வாதம் செய்தார்கள். தாம் உம்மத்தி நபியாக இருப்பதாக அன்னார் (அலை) வாதம் செய்தார்கள். எனக்கென்று எதுவும் கிடையாது. (என்னிடம்) என்னவெல்லாம் இருக்கின்றதோ அவை அனைத்தும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடையதாகும் என்று அன்னார் (அலை) கூறினார்கள். தமக்கென்று எதுவும் கிடையாது. மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்)அவர்களை பின்பற்றியதன் விளைவாகவே தமக்கு அனைத்தும் கிடைத்தது என்பதே தாம் உம்மத்தி நபியாக இருப்பதாக அன்னார் (அலை) கூறியதன் பொருள் ஆகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திலிருந்து இறங்கும்போது அன்னார் (அலை) ஓர் உம்மத்தி நபியாக இருப்பார்கள் என்று நமது அஹ்மதி அல்லாத முஸ்லிம் சகோதரர்களும் ஒப்புக் கொள்கின்றனர். ஆக, ஒருவகையில் உம்மத்தியின் வருகையை அவர்களும் ஒப்புக் கொள்கின்றனர். ஆனால், திருக்குர்ஆன் பல இடங்களில் அன்னாரது மரணத்தை அறிவிக்கின்றது என்பதே சிக்கலாகும். எனவே எந்த ஈஸாவின் வருகைக் குறித்து செய்தி வழங்கப்பட்டிருந்ததோ உண்மையில் அவர் இதே உம்மத்திலிருந்து வரவேண்டியது இருந்தது. ஆனால், அவர் ஈஸா மஸீஹின் மறுவருகையாக வர வேண்டியது இருந்தது. எனவே அவருக்கு மஸீஹ் என்ற பெயர் சூட்டப்பட்டது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு 1908 ஆம் ஆண்டிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பு நிலைபெற்றுள்ளது. இந்த கிலாஃபத்தைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னரே செய்தி வழங்கியிருந்தார்கள். ஆக, ஒரு நீண்ட ஹதீஸில் இஸ்லாத்தின் பல்வேறு காலகட்டங்களை குறிப்பிட்ட பிறகு ثُمَّ تَكُوْنُ خِلَافَةٌ عَلٰى مِنْهَاجِ النُّبُوَّةِ என்று கூறினார்கள். அதாவது, நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும். பின்னர் அன்னார் (ஸல்) மௌனமாக இருந்தார்கள். மேலும், கூடுதலாக வேறு எந்த காலக்கட்டத்தையும் குறிப்பிடவில்லை. இதிலிருந்து இந்த நபித்துவ வழியில் அமையப் பெற்ற கிலாஃபத் கியாமத் வரை நிலைபெற்றிருக்கும் என்பது நிரூபணமாகின்றது. எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் 115 ஆண்டுகளாக நிலைபெற்றுள்ளது. இந்த கிலாஃபத்தின் உண்மைத்துவத்திற்கு இதுவே போதுமான ஒரு சான்றாகும். அதாவது மற்ற முஸ்லிம்களின் கிலாஃபத் அழிந்து விட்டது; கலீஃபத்துல் முஸ்லிமீனாக ஆக வேண்டும் என்று ஆசைபட்டவர்கள் அழிந்துவிட்டனர்;ஆனால் உண்மையான கிலாஃபத் 115 ஆண்டுகளாக எந்த கருத்துவேறுபாடுமின்றி நிலையாக நிலைபெற்றுள்ளது.

அதன் மகிமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அதனை அழிப்பதற்கு ஆசை கொண்டவர்கள் அழிந்து விட்டனர். ஆனால், இது அழியவுமில்லை; எதிர்காலத்தில் ஒருபோதும் அழியப்போவதுமில்லை.

அல்லாஹ் சூரா அன்நூரில் முஹம்மதிய்ய சமுதாயத்தில் கிலாஃபத் நிலைபெறுதல் தொடர்பாக வாக்குறுதி வழங்கியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۪ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِي ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْـًٔا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ

பொருள்: அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியதுபோன்று இப் பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்பாடதவர்களாவார்கள். ( அன்நூர்: 56)

இங்கு “மின்கும்” என்பதற்கு ஸஹாபிகள் மட்டுமே பொருள்படுவர்; மேலும் அவர்களிடம் வாக்குறுதிக்கேற்ப கிலாஃபத் நிலைபெற்றுவிட்டது என்று எவரும் கருத வேண்டாம். மாறாக உண்மையென்னவென்றால் ஸஹாபிகள் மூலமாக முழு முஹம்மதிய்ய சமுதாயத்திடமும் கூறப்பட்டுள்ளது. மேலும் இது முஹம்மதிய்ய சமுதாயத்தில் அல்லாஹவின் நிரந்தரமான வாக்குறுதி ஆகும். மேலும் மேலே கூறப்பட்டுள்ளதுபோன்று அவன் தனது வாக்குறுதிக்கேற்ப முஹம்மதிய்ய சமுதாயத்தில் நிரந்தரமான கிலாஃபத்தை நிலைநாட்டி விட்டான். அல்ஹம்துலில்லாஹ் அலா தாலிக்.

முஹம்மதிய்ய சமுதாயத்தில் நிரந்தரமான கிலாஃபத்திற்கான நற்செய்தியை வழங்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த மனிதனுக்கும் நிரந்தரமான வாழ்க்கையில்லை. எனவே முழு உலகின் இருப்புகளை விடவும் கண்ணியமிக்க மற்றும் உயர்வான படைப்புகளாகிய தூதர்களின் இருப்பை நிழல் வடிவில் கியாமத் வரை நிலை பெறச் செய்ய வேண்டும் என்று இறைவன் எண்ணம் கொண்டான். எனவே இதே நோக்கத்திற்காக இறைவன் கிலாஃபத்தை தேர்ந்தெடுத்தான். ஏனெனில் உலகம் எக்காலத்திலும் நபித்துவத்தின் அருட்களிலிருந்து இழப்பிற்குரியதாக இருக்கக்கூடாது என்று அவ்வாறு செய்தான். எனவே எந்த நபர் கிலாஃபத் வெறும் முப்பது வருடங்களுக்கானது மட்டுமே என்று நம்புகின்றாரோ அவர் தனது அறியாமையால் கிலாஃபத்தின் அவசியத்தை அலட்சியம் செய்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு முப்பது வருடங்கள் வரை மட்டுமே நபித்துவ அருட்களை கலீஃபாக்களின் வடிவில் நிலைபெறச் செய்வது அவசியம் ஆகும்;பின்னர் உலகம்

இதன் தொடர்ச்சி : 17ஆம் பக்கம்

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த மேற்கோள்களின் ஒளியில் தூய கலிமாவில் இடம் பெற்றுள்ள ஏகத்துவத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மை மிக்க நபித்துவத்தின் குறிப்புகளைப் பற்றிய ஜுமுஆ பேருரை**

**எவர் தனது தூய உள்ளத்துடன் அல்லது தனது தூய மனத்துடன் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்ற கலிமாவை ஒப்புக் கொண்டிருப்பாரோ அவர் கியாமத் நாளன்று எனது பரிந்துரையின் அடிப்படையில் மக்கள் அனைவரிலும் மிகவும் நற்பேறு பெற்றவராக இருப்பார்.**

**அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். அதாவது, அல்லாஹ் நமக்கு இக்காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஒப்புக் கொள்வதற்கு நற்பேறை வழங்கியுள்ளான். அன்னார் (அலை) இஸ்லாமிய கட்டளைகளை மிகவும் தெளிவாக்கி அவற்றின் ஆழிய ஞானங்கள் மற்றும் நுட்பத்தை நமக்கு கற்றுத் தந்துவிட்டார்கள். எங்கு நமக்கு لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதை பற்றி கூறியுள்ளார்களோ அங்கு مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه என்பதன் அந்தஸ்து தொடர்பாகவும் நமக்கு கூறியுள்ளார்கள்.**

**மனிதன் தோன்றியது முதல் அழிந்துவிடும் வரை இறைவனின் இயற்கைச் சட்டம் இதுவே ஆகும். அதாவது இறைவன் எப்போதும் ஏகத்துவத்திற்கு உதவி செய்கின்றான்.**

**மக்கா வெற்றி சந்தர்ப்பத்தின்போது ஆயிரக்கணக்கான சிலை வணங்கிகள் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதன் மேன்மையைக் கண்டனர்.**

**எந்தவொரு விஷயத்தில் எந்த மாற்றமும் இல்லையோ அது لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه ஆகும். அசல் விஷயம் இதுவே ஆகும். மற்றவை அனைத்தும் இதனை முழுமைப்படுத்தக்கூடிய விஷயங்கள் ஆகும்**

**எந்த நபர் தனது சகோதரரின் உரிமையை பறிக்கின்றாரோ அல்லது நம்பிக்கை துரோகம் செய்கின்றாரோ அல்லது வேறு வகையான தீமைகளிலிருந்து விலகுவதில்லையோ அத்தகைய நபரை ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவராக நான் நம்பவில்லை. ஏனெனில், அது ஒரு எப்படிப்பட்ட அருட்கொடை என்றால், அதை அடைந்த உடனேயே மனிதனிடத்தில் ஒரு அசாதாரண மாற்றம் ஏற்பட்டுவிடுகின்றது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 ஏப்ரல் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **14ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பது எப்படிப்பட்ட கலிமா என்றால் அது ஏகத்துவத்தின் அடித்தளமாகும். எவர் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்று ஓதினாரோ நிச்சயமாக அல்லாஹ் அவருக்கு நெருப்பை (அதாவது நரகத்தை) ஹராமாக்கிவிட்டான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் அல்புகாரி, கிதாபுஸ் ஸலாத், ஹதீஸ் எண்: 425)

எனவே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவனது கவனத்தை விரும்பியவாறு, அவன் பக்கம் குனிந்தவாறு, தனது கவனத்தை அல்லாஹ்வின் பக்கம் மட்டுமே ஆக்கிக் கொண்டவாறு மனிதன் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்று கூறுகின்றான் என்றால், பின்னர் அல்லாஹ் அவருக்கு நெருப்பை ஹராமாக்கி விட்டான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதுபோன்று அந்த நபர் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாகிவிடுகின்றார். (ஸஹீஹ் அல்புகாரி, கிதாபுர் ரிகாக், ஹதீஸ் எண்: 6423)

மேலும் அல்லாஹ் நரகத்தின் நெருப்பை அவருக்கு ஹராமாக்கிவிட்டான் என்று அன்னார் (ஸல்) ஓரிடத்தில் கூறினார்கள். இந்த போதனையையே அனைத்து நபிமார்களும் கொண்டு வந்திருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் கூறினார்கள்: நானும், எனக்கு முந்தைய அனைத்து நபிமார்களும் கூறிய மிகச் சிறந்த கலிமா لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ ஆகும். (முஅத்தா இமாம் மாலிக், கிதாபுஸ் ஸலாத், ஹதீஸ் - 501, மக்தபா அல்புஷ்ரா, கராச்சி - 536)

ஆக, இதுதான் அனைத்து நபிமார்களின் போதனை ஆகும். ஆனால், துரதிஷ்டவசமாக எந்த நபிமார்களின் சமுதாயங்களுக்கு இந்த போதனை வழங்கப்பட்டிருந்ததோ அந்த சமுதாயங்கள் இந்த போதனையை நேரடியாகவோ மறைமுகமாகவோ மறந்துவிட்டு இணை வைப்பிற்கான வழிமுறையாக ஆக்கிக் கொண்டன.

நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். அதாவது, அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயத்தில் இணைத்து எப்படிப்பட்ட முழுமையான போதனையை நல்கியுள்ளான் என்றால், அது இணை வைத்தலை முற்றிலுமாக ஒழித்துவிட்டது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்திற்கான உண்மையான போதனையை வழங்கி நமது இம்மை மற்றும் மறுமையை சீர்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாட்டை செய்துவிட்டார்கள்.

ஆக, தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான போதனையின்படி எவர் அமல் செய்வாரோ மேலும், இறைவனின் ஏகத்துவத்தை எவர் தூய உள்ளத்துடன் ஒப்புக் கொள்வாரோ அவரே அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாகவும் ஆக முடியும். மேலும், அவரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரையிலிருந்தும் பங்கு பெறுவார். அது தொடர்பாக ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் தனது தூய உள்ளத்துடன் அல்லது தனது தூய மனதுடன் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்ற கலிமாவை ஒப்புக் கொண்டிருப்பாரோ அவர் கியாமத் நாளன்று எனது பரிந்துரையின் அடிப்படையில் மக்கள் அனைவரிலும் மிகவும் நற்பேறு பெற்றவராக இருப்பார். (ஸஹீஹ் அல்புகாரி, கிதாபுல் இல்ம், ஹதீஸ் எண்: 99)

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரையைப் பெறுவதற்காக தூய உள்ளத்துடன் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதை எவர் ஒப்புக் கொள்வாரோ மேலும் எவரிடம் உலகின் கலப்படம் இருக்காதோ அவரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரையில் பங்குதாரராக இருப்பார்.

அல்லாஹ்வால் ஷஃபாஅத் எனும் பரிந்துரைக்கான அதிகாரம் வழங்கப்பட்ட இறுதி மற்றும் முழுமையான நபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னார் (ஸல்) மீதான ஈமானும் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப அவசியமாகும். தமது அந்த உயர் அந்தஸ்தைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்: கூறினார்கள்: உண்மையான உள்ளத்துடன் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه என்று ஒருவர் சாட்சியம் வழங்கி பின்னர் அல்லாஹ் அவருக்கு நெருப்பை ஹராமாக்கி

விடாத எந்த நபரும் இல்லை. (ஸஹீஹ் அல்புகாரி, கிதாபுல் இல்ம், ஹதீஸ் 128)

ஓரிடத்தில் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்று மட்டும் உள்ளது. மற்றோரிடத்தில் مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه என்பதும் அடங்கியுள்ளது. ஆக, தற்போது ஏகத்துவத்திற்கான ஒப்புதலும், அறிவிப்பும் அல்லாஹ்வின் இறுதி மற்றும் முழுமையான நபியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒப்புக் கொள்ளாத வரை சாத்தியமேயில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே தமது சமுதாயத்தில் ஷிர்க் எனும் இணை வைத்தலை முற்றிலுமாக அழிப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். மேலும், எந்த நபர் ஏதாவது ஒரு வடிவில் சிறிதளவு இணை வைத்தலைக் கூட வெளிப்படுத்துவாரோ அவர் மீது அல்லாஹ்வும் அவனது தூதரும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால், அவ்வாறிருந்தும் கூட இதுபோன்ற மறைமுகமான இணை வைத்தலில் ஈடுபடக் கூடிய மக்கள் முஸ்லிம்களிலும் தோன்றிவிட்டனர். ஆனால் அதுபோன்ற இணை வைத்தலை அல்லாஹ்வும், அவனது தூதரும் கடுமையாக தடுத்துள்ளார்கள்.

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். அதாவது, அல்லாஹ் நமக்கு இக்காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஒப்புக் கொள்வதற்கு நற்பேறை வழங்கியுள்ளான். அன்னார் (அலை) இஸ்லாமிய கட்டளைகளை மிகவும் தெளிவாக்கி அவற்றின் ஆழிய ஞானங்கள் மற்றும் நுட்பத்தை நமக்கு கற்றுத் தந்துவிட்டார்கள். எங்கு நமக்கு لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதை பற்றி நமக்கு கூறியுள்ளார்களோ அங்கு مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه என்பதன் அந்தஸ்து தொடர்பாகவும் நமக்கு கூறியுள்ளார்கள்.

தற்போது நான் இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன். அவை இந்தக் கருத்தின் மீது மகவும் அழகாக ஒளிபாய்ச்சுகின்றது. நாம் இந்தக் கருத்தின் ஆழத்தை புரிந்தவாறு நாம் நம்மை எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்று நமக்கும் கவனமூட்டுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள்:

اَلْيَوْمَ اَكْمَلْتُ என்ற தனது கூற்றின் விளக்கத்தை அல்லாஹ் சுயமே விளக்கிவிட்டான். அதாவது அதில் மூன்று அடையாளங்கள் இருப்பது முற்றிலும் அவசியமாகும்.

அன்னார் (அலை) அடையாளங்களை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்கள். அதில் اَصْلُهَا ثَابِتٌ என்பது முதலாவது அடையாளமாக இருந்தது. பொருள்: அதன் வேர்கள் வலிமையுடன் நிலைபெற்றிருக்க வேண்டும். (இப்ராஹீம்: 25) இரண்டாவது அடையாளம் فَرْعُهَا فِي السَّمَآءِ என்பதாகும். பொருள்; அதன் கிளைகள் விண்ணின் உயரத்தை எட்டியுள்ளன. (இப்ராஹீம்: 25). மூன்றாவது அடையாளம் تُؤْتِيْٓ اُكُلَهَا كُلَّ حِيْنٍ என்பதாகும். பொருள்: எல்லா நேரமும் புத்தம் புதிதாக கனிகளை கொடுக்கும். (இப்ராஹீம்: 25) ஆக, இஸ்லாம் என்ற மார்க்கம் மட்டுமே இந்த தரத்தை முழுமை செய்கின்றது.

எவ்வாறு இருப்பினும், اَصْلُهَا ثَابِتٌ என்ற முதல் அடையாளத்திற்கு விளக்கமளித்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஈமானியத்தின் விதிமுறை என்பது முதல் அடையாளமாகும். அதன் பொருள் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்ற கலிமா ஆகும். அதாவது اَصْلُهَا ثَابِتٌ என்பதை நிரூபணம் செய்ய் வேண்டுமென்றால் பின்னர் அதன் முதல் அடையாளம் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதாகும். கூறினார்கள்: அது எந்த அளவிற்கு விரிவாக எடுத்துக்கப்பட்டுள்ளதென்றால் நான் அனைத்து ஆதாரங்களையும் எழுதினால் பின்னர் பல பாகங்களில் கூட அது நிறைவடையாது. நூல்கள் எழுதப்படும். ஆயினும் அவற்றில் சிறிதளவு உதாரணமாக கீழே எழுதுகின்றேன்.

உதாரணமாக, ஓரிடத்தில் அதாவது சூரா பக்கராவில் அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّ فِيْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ
وَالنَّهَارِ وَالْفُلْكِ الَّتِيْ تَجْرِيْ فِي الْبَحْرِ بِمَا يَنْفَعُ النَّاسَ وَمَآ
اَنْزَلَ اللّٰهُ مِنَ السَّمَآءِ مِنْ مَّآءٍ فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا
وَبَثَّ فِيْهَا مِنْ كُلِّ دَآبَّةٍ وَّتَصْرِيْفِ الرِّيٰحِ وَالسَّحَابِ الْمُسَخَّرِ
بَيْنَ السَّمَآءِ وَالْاَرْضِ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ

பொருள்: வானங்களையும், பூமியையும் படைத்ததிலும் இரவு, பகல் மாறி மாறி வருவதிலும், மக்களுக்குப் பயனளிப்பவற்றுடன் கடலில் செல்லும் கப்பல்களிலும், மேகத்திலிருந்து அல்லாஹ் நீரை இறக்கியதன் மூலம் பூமியை அதன் இறப்பிற்குப் பின்னர் உயிர்ப்பித்து, அதில் எல்லா வகையான உயிரினங்களையும் பரவச் செய்ததிலும், காற்றுகளை இங்குமங்குமாக வீசச் செய்வதிலும், விண்ணிற்கும் மண்ணிற்குமிடையில் பணிபுரிய ஏவப்பெற்ற மேகங்களிலும் நிச்சயமாக சிந்திக்கும் மக்களுக்குப் பல அடையாளங்கள் உள்ளன. (அல்பக்கரா: 165)

இவை அனைத்தும் இறைவனின் இருப்பிற்கும் அவனது ஏகத்துவம், அவனது இல்ஹாம் மற்றும் அவனது திட்டமிடப்பட்ட எண்ணம் ஆகியவற்றிற்கான அடையாளங்கள் ஆகும்.

கூறினார்கள்: தற்போது பாருங்கள்! இந்த வசனத்தில் கம்பீர மிக்க அல்லாஹ் தனது இந்த ஈமானிய விதிமுறைகளைக் குறித்து எவ்வாறு தனது இயற்கைச் சட்டத்திலிருந்து சான்றுகளை வழங்கியுள்ளான்!

لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதை நிரூபணம் செய்துள்ளான். இயற்கைச் சட்டத்திலிருந்து இந்த சான்றை பகர்ந்துள்ளான். அதாவது தனது படைப்புகளான வானம் மற்றும் பூமியில் காணப்படுகின்றவற்றிலிருந்து இந்த சான்றை வழங்கியுள்ளான். அவற்றை பார்ப்பதன் மூலம் இந்த இறை வசனத்திற்கு ஏற்ப நிச்சயமாக இந்த உலகத்தின் ஒரு பழமையான படைத்தவனும், முழுமையானவனும், ஈடு இணையற்ற தனித்தவனும், திட்டங்களை வகுக்கக் கூடியவனும், தனது தூதர்களை உலகில் அனுப்பக் கூடியவனும் இருக்கின்றான் என்ற விஷயம் தெள்ளத் தெளிவாக தெரிய வருகின்றது. அதற்கான காரணம் இதுவாகும். அதாவது, இந்த உலகம் சுயமாகவே உருவாகிவிடவில்லை. மாறாக, இதனை படைத்தவன் ஒருவன் இருக்கின்றான். அவன் ரஹ்மானாகவும், ரஹீமாகவும், சர்வ வல்லமை பொருந்தியவனாகவும், ஏகனாகவும், ஈடு இணையற்றவனாகவும், ஆதியும், அந்தமாகவும், முறையான திட்டங்களுடன் எண்ணம் கொண்டவனாகவும், எல்லா வகையான நற்பண்புகளின் முழுமையான பண்புகளைக் கொண்டவனாகவும், வஹீயை இறக்கக்கூடியவனாகவும் அவன் இருப்பது அவசியமாகும் என்ற விஷயத்தை நமது கண்களுக்கு முன்னால் இருக்கின்ற இறைவனின் இந்த அனைத்து படைப்புகளும் மிகத் தெளிவாக கூறிக் கொண்டிருக்கின்றன.

(ஜங்கே முகத்தஸ், ரூஹானீ கஸாயின், தொகுதி 6, பக்கம் 123 -125)

எனவே لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதில் ஒரு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றான் என்ற சிந்தனை மட்டுமே உள்ளத்தில் தோன்றுவதில்லை. மாறாக, நமது இறைவன் எப்படிப்பட்ட இறைவன் என்றால் அவன் ஏகன் ஆவான். அவனே ஆதியும், அந்தமும் ஆவான். எல்லாப் படைப்பினங்களையும் படைத்தவன் ஆவான். மேலும் அவனது கட்டளைக்கேற்பவே இந்த அனைத்து அண்டத்தின் அமைப்பு இயங்கிக் கொண்டிருக்கின்றது. மேலும், எல்லாத் தேவைகளுக்காகவும் நாம் அவன் முன்பே குனிய வேண்டும் என்ற எண்ணத்தை உள்ளத்தில் வலிமையாக நிலை பெறச் செய்கின்றது; நிலை பெறச் செய்ய வேண்டும். எனவே இந்த நிலை ஈமானிய நிலையாக ஆகிவிடும்போது பின்னர் அது முழுமையான ஈமானாக இருக்கும். அதில் இணை வைத்தலின் எந்த கலப்படமும் இருக்கவே முடியாது. மேலும் இதே ஈமானைப் பற்றியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: களங்கமற்றவர்களாக திகழ்ந்து لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதன் மீது ஈமான் கொள்ளக்கூடியவர்களுக்கு நெருப்பு ஹராம் ஆகும்.

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மையில் உதவி செய்வதற்கான உரிமை அல்லாஹ்விற்கே உள்ளது என்ற விஷயத்தை உதவியைப் பெறுதல் தொடர்பாக நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது உதவி வேண்டப்படுவதற்கோ அல்லது உதவி செய்யக் கூடிய ஒருவன் இருக்கின்றான் என்றால் பின்னர் அல்லாஹ் மட்டுமே அதற்கான தகுதியைப் பெற்றுள்ளான். அதாவது முழுமையான இருப்பாகிய அல்லாஹ்விடம் மட்டுமே உதவி வேண்டப்பட வேண்டும். வேறு எவரும் அதற்கான அதிகாரத்தை பெற்றிருக்கவேயில்லை. அவரிடம் (அதற்கான) ஆற்றலும் கிடையாது. மேலும் திருக்குர்ஆன் இதன் மீதே அழுத்தம் கொடுத்துள்ளது.

ஆக, அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்: إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

முதலில் ரப், ரஹ்மான், ரஹீம், மாலிகி யவ்மித்தீன் என்ற இறைப் பண்புகளை திருக்குர்ஆன் வெளிப்படுத்தியுள்ளது. பின்னர்,

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

என்று கற்றுத் தந்துள்ளது. அதாவது நாங்கள் உன்னையே வணங்குகின்றோம்; உன்னிடமே உதவியும் தேடுகின்றோம். உதவியும் கூட அந்த இறைவணக்கத்தை செய்வதற்காக உன்னிடமே வேண்டுகின்றோம்.

உனது உதவியின்றி எங்களால் இறை வணக்கம் செய்ய முடியாது. இதிலிருந்து உண்மையில் உதவி செய்வதற்குரிய உரிமை அல்லாஹ்விற்கே உரியது என்பது தெரிய வருகிறது. எந்தவொரு மனிதனுக்கோ விலங்கிற்கோ, பறவைக்கோ செடிகளுக்கோ, சுருக்கமாக வானத்திலும், பூமியிலும் எந்தவொரு படைப்பினத்திற்கும் அந்த உரிமை கிடையாது. ஆயினும், இரண்டாம் நிலை படித்தரமாக நிழல் வடிவில் இந்த உரிமை இறை அடியார்கள், இறையாட்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் கட்டளையினால் அவர்களின் துஆக்களினால் உதவியும் செய்யப்படுகின்றது.

அன்னார் (அலை) கூறினார்கள்: நாம் நம் புறமிருந்து ஏதாவது ஒரு விஷயத்தை உருவாக்கிக் கொள்ளுதல் கூடாது. இன்னும் கூறப்போனால், அல்லாஹ்வின் கூற்று மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்குள்ளேயே இருக்க வேண்டும். அதன் பெயரே ஸிராத்தே முஸ்தகீம் ஆகும். மேலும் இந்த விஷயத்தை لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُولُ اللّٰهِ என்பதிலிருந்தும் மிகவும் சிறப்பாக புரிந்து கொள்ள முடியும். மனிதனின் நேசனும், இறைவனும், தேவையும் அல்லாஹ்வாகவே இருக்க வேண்டும் என்பது அதன் முதல் பகுதியிலிருந்து தெரிய வருகின்றது. மேலும் இரண்டாவது பகுதியில் முஹம்மதிய்ய நபித்துவத்தின் உண்மைத்துவத்தின் வெளிப்பாடு உள்ளது. (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 53 -54, 1984 ஆண்டு பதிப்பு)

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: மனிதன் தோன்றியது முதல் அழிந்துவிடும் வரை இறைவனின் இயற்கைச் சட்டம் இதுவே ஆகும். அதாவது இறைவன் எப்போதும் ஏகத்துவத்திற்கு உதவி செய்கின்றான்.

அவன் அனுப்பிய அனைத்து தூதர்களும் இதற்காகவே தோன்றினர். அதாவது, மனிதர்களையும், மற்ற படைப்பினங்களையும் வணங்குதலை அகற்றி இறை வழிபாட்டை உலகில் நிலைநாட்டுவதற்காகவே அவர்கள் தோன்றினர். அவர்கள் ஆற்றிய தொண்டு என்னவாக இருந்ததென்றால் لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்ற கருத்து வானத்தில் ஒளி வீசுவதுபோன்று பூமியில் ஒளிவீசியது. ஆக, இந்தக் கருத்தை மிகவும் ஒளிவீசச் செய்தவரும், பொய் தெய்வங்களின் பலவீனங்களை நிரூபணம் செய்தவருமே அவர்கள் அனைவரிலும் மிகவும் பெரியவர் ஆவார். மேலும் அனைத்தையும் நிரூபணம் செய்துவிட்டப் பிறகு அந்த மாபெரும் வெற்றியின் நிரந்தர நினைவாக

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُولُ اللّٰهِ

என்ற கலிமாவை விட்டுச் சென்றுள்ளார். அவர் ஆதாரமின்றி, வெறும் வாதத்திற்காக لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்ற கலிமாவைக் கூறவில்லை. மாறாக, அவர் முதலில் ஆதாரத்தைக் கொடுத்து விட்டு, மேலும் பொய்யை பொய்யென காட்டிவிட்டு பின்னர் மக்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார். அதாவது, பாருங்கள்! எந்த இறைவன் உங்களது அனைத்து ஆற்றல்களையும் முறித்துவிட்டானோ மேலும் உங்களது அனைத்து ஆணவத்தையும் அழித்துவிட்டானோ அந்த இறைவனைத் தவிர வேறு எந்த இறைவனும் கிடையாது. எனவே, இந்த நிரூபணமான விஷயத்தை நினைவூட்டுவதற்காக,

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُولُ اللّٰهِ

என்ற இந்த அருளுக்குரிய கலிமாவை நிரந்தரமாகக் கற்றுத் தந்துள்ளார். (மஸீஹ் இந்துஸ்தான் மேன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 15, பக்கம் 65)

மக்கா வெற்றி சந்தர்ப்பத்தின்போது ஆயிரக்கணக்கான சிலை வணங்கிகள் لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்பதன் மேன்மையைக் கண்டனர்.

இன்னும் உமக்கு لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்பதன் உண்மைத்துவம் தெளிவாகவில்லையா? என்று அபூஸுஃப்யானிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் இவ்வாறு பதில் வழங்கினார்:

அதாவது, அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை. அவ்வாறு இருந்திருந்தால் பின்னர் நிச்சயமாக எங்களுக்கு ஏதாவது உதவி செய்திருக்கும். இதோ நாங்கள் இந்த முந்நூற்று அறுபது சிலைகளை வைத்திருக்கின்றோம். அவற்றில் நாங்கள் வணங்குகின்ற ஏதாவது சில சிலைகளாவது எங்களுக்கு உதவி செய்திருக்கும். இதை நான் முற்றிலும் புரிந்துவிட்டேன். (அஸ்ஸீரத்ன் நபவிய்யா லி இப்னி ஹஷ்ஷாம், பக்கம் 739, இஸ்லாம் அபீ ஸுஃப்யான், பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001) (ஸஹீஹ் அல்புகாரி, கிதாபுல் மஸாலிம், ஹதீஸ் எண்: 2478)

ஓர் எதிரியின் ஆட்சேபனைக்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُولُ اللّٰهِ

என்று கூறுவதால் பாவங்கள் தொலைந்து விடுகின்றன என்பதே ஹஸ்ரத் முகத்தஸ் நபியின் போதனை ஆகும் என்று அன்னார் (அலை) கூறுவது முற்றிலும் உண்மை ஆகும். மேலும் இதுவே உண்மையில் சரியானதாகும். பாவங்கள் முடிந்துவிடுகின்றன என்று நீங்கள் கூறுவது சரிதான்.

எவர் இறைவனை மட்டுமே ஏகனாகவும், இணையற்றவனாகவும் அறிகின்றாரோ மேலும், முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை அந்த வல்லமை மிக்க ஏக இறைவனே அனுப்பியுள்ளான் என்று எவர் நம்புகிறாரோ பின்னர் நிச்சயமாக இந்த கலிமாவின் நிலையிலேயே அவரது முடிவு இருக்குமென்றால் அவர் இரட்சிப்பு பெற்றுவிடுவார் என்பது முற்றிலும் உண்மையாகும். வானங்களுக்கு கீழ் எவருடைய தற்கொலையாலும் இரட்சிப்பு இல்லை. ஒருபோதும் இல்லை. ஒருவரின் மரணத்தால் இரட்சிப்பு கிடைப்பதில்லை. ஒருவர் உங்களுக்காக மரணித்தாலும் இரட்சிப்பு கிடைக்காது. ஆனால் கலிமாவின் மூலமாக இரட்சிப்பு பெறுவார்.

அன்னார் (அலை) கூறினார்கள்: கலிமாவின் மூலமாக இரட்சிப்பு பெற முடியாது என்று கருதுபவரை விட பெரிய பைத்தியக்காரர் வேறு எவர் இருப்பார்?

எனினும் இறைவனை ஏகனாகவும், இணையற்றவனாகவும் கருத வேண்டும். இதனை சிந்தித்து பாருங்கள். இதனை simple ஆக கூறிவிடுவதும், எளிதான வடிவில் கூறிவிடுவதும் போதுமானதல்ல. ஆனால், இறைவனை ஏகனாகவும், இணையற்றவனாகவும் கருதுவதுடன் அவனை எப்படிப்பட்ட கருணையாளனாக கருத வேண்டும் என்றால் அவன் மிகவும் அதிகமாக கருணை செய்து உலகத்தை வழிகேட்டிலிருந்து வெளியேற்றுவதற்காக முஹம்மது (முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) என்ற பெயர் கொண்ட தனது தூதரை அனுப்பினான். இது எப்படிப்பட்ட ஒரு கொள்கை என்றால், இதன் மீது நம்பிக்கை கொள்வதால் ஆன்மாவின் இருள் நீங்கி விடுகின்றது. மேலும் மனயிச்சைகள் அகன்று அந்த இடத்தில் ஏகத்துவம் குடிபெயர்ந்து விடுகின்றது. இறுதியில் ஏகத்துவத்தின்

மாபெரும் உணர்வு உள்ளம் முழுவதும் சூழ்ந்து கொண்டு இதே உலகில் சொர்க்க வாழ்க்கை ஆரம்பமாகிவிடுகின்றது.

لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதன் பொருள் என்ன? مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه என்பதன் பொருள் என்ன? என்பதன் உண்மைத்துவத்தை அறிய வேண்டும். பின்னர் சொர்க்கம் இவ்வுலகிலேயே ஆரம்பமாகிவிடுகின்றது.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஒளி வந்துவிட்ட பிறகு இருள் நிற்கவே முடியாததை நீங்கள் பார்ப்பதைப் போன்று لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்ற ஒளிவட்டம் உள்ளத்தில் படும்போது பின்னர் மனயிச்சைகளின் உணர்ச்சிகள் செயலிழந்து விடுகின்றன. அழிந்துவிடுகின்றன. பாவத்தின் உண்மை நிலை என்பது இதனைத் தவிர வேறு எதுவுமில்லை. அதாவது, வரம்பு மீறுதலின் கலப்படத்தால் மனயிச்சைகளின் உணர்வுகள் கிளர்ந்தெழுவது ஆகும். அதனை பின்பற்றுகின்றன நிலையில் ஒரு நபரின் பெயர் பாவம் செய்தவர் என்று வைக்கப்படுகின்றது. மேலும், لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதன் பொருள் அரபு அகராதியின் பயன்பாட்டு வழக்கிலிருந்து தெரிய வருகின்றது. அகராதியில் அதன் பெரும்பாலான பொருள் இதுவாகும். அதாவது لَا مَطْلُوْبَ لِيْ وَلَا مَحْبُوْبَ لِيْ

وَلَا مَعْبُوْدَ لِيْ وَلَا مُطَاعَ لِيْ اِلَّا اللّٰهُ

என்பதாகும். பொருள்: அல்லாஹ்வைத் தவிர எனக்கு எந்தத் தேவையும், எந்த நேசனும், எந்த வணக்கத்திற்குரியவனும் இல்லை. (நூருல் குர்ஆன் எண்: 2, ரூஹானீ கஸாயீன், தொகுதி 9, பக்கம் 418 -419)

இந்த நிலை உருவாகிவிட்டால் பின்னர் நிச்சயமாக வாழ்க்கை சொர்க்கமாக ஆகிவிடும். மன்னிப்பிற்கான ஏற்பாடுகள் இவ்வுலகிலேயே ஆரம்பமாகிவிடுகின்றன.

பின்னர், கலிமா لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதற்கு விளக்கமளித்தவாறு மேலும் கூறினார்கள்:

அசல் விஷயம் என்னவென்றால், அல்லாஹ் ஏராளமான கட்டளைகளை வழங்கியுள்ளான். அவற்றில் சில எப்படிப்பட்டவையென்றால், அவற்றை நிறைவேற்றுவது அனைவருக்கும் வாய்ப்பில்லை. உதாரணமாக ஹஜ் ஆகும். எவருக்கு ஆற்றல் இருக்குமோ அந்த நபர் மீதே அது கடமையாகும். அதாவது அனைவரின் மீதும் அது கடமையல்ல. பின்னர் வழிப்பாதையில் அமைதி நிலவ வேண்டும். இது ஹஜ் செய்வதற்கு அவசியம் ஆகும். பின்னால் இருக்கும் சம்பந்தப்பட்டவர்களின் வாழ்விற்கான பொருத்தமான ஏற்பாடும் இருக்க வேண்டும். பின்னால் விட்டுச் செல்கின்ற குடும்பத்தினர்களின் உண்பதற்கும், குடிப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அவர்களை பசியுடனும், தாகத்துடனும் விட்டு விட்டு ஹஜ் செய்வதற்கு சென்றுவிடுதல் கூடாது. மேலும் இதுபோன்ற நிபந்தனைகளை பூர்த்திசெய்தால் மட்டுமே ஒருவர் ஹஜ் செய்ய முடியும். ஸக்காத்தும் இதேபோன்றதுதான். எவர் குறிப்பிட்ட கணக்கின் அடிப்படையில் செல்வம் படைத்திருக்கின்றாரோ அவரே ஸக்காத் கொடுக்க முடியும். எவர் மீது கடமையோ அவர் மீது ஸக்காத் கண்டிப்பானதாகும். அதேபோன்று தொழுகைகளிலும் மாற்றங்கள் உருவாகி விடுகின்றன. சிலநேரம் பயணத்திலும், நோயிலும் (தொழுகை) கஸர் செய்யப்பட்விடுகின்றது. ஜமுவும் செய்யப்பட்டுவிடுகின்றது. ஆனால், எந்தவொரு விஷயத்தில் எந்த மாற்றமும் இல்லையோ அது

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه

ஆகும்.

அசல் விஷயம் இதுவே ஆகும். மற்றவை அனைத்தும் இதனை முழுமைப்படுத்தக்கூடிய விஷயங்கள் ஆகும் ஆகும்.

இறை வணக்கம் செய்யப்படாத வரை ஏகத்துவம் முழுமையடைவதில்லை. நீங்கள் இறைவணக்கங்களை மேற்கொள்ளாவிட்டால் ஏகத்துவம் முழுமையடையாது. لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதற்குரிய உரிமை செலுத்தப்பட மாட்டாது. அதன் பொருள் இதுவேயாகும். அதாவது لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه என்று கூறக்கூடியவர் உண்மையில் அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த நேசனும், தேவையும், நோக்கமும் இல்லை என்பதை உண்மையான முறையில் செயல் ரீதியில் நிரூபித்துக் காட்டுகின்ற அந்த நேரத்தில் தனது வாக்கு மூலத்தில் அவர் உண்மையாளராக இருக்கின்றார்.

எனவே இது ஈமானிற்கான முதல் நிபந்தனை ஆகும். வெறும் வாயளவிலான கூற்றால் அல்ல. لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்று கூறினார் என்றால் பின்னர் தனது செயலால் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்து, அவனுக்குரிய இறை வணக்கங்களை மேற்கொண்டு, அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்தி நிரூபணம் செய்ய வேண்டும். ஏனெனில், இவை அல்லாஹ்விற்குரிய கட்டளை ஆகும். மேலும், தனது நேசனுக்காகவும் மேலும் எவனை அடைவது நோக்கமாக உள்ளதோ அவனுக்காகவும், மேலும் எவன் தேடப்படுகின்றானோ அவனுக்காகவும் அதாவது அல்லாஹ்விற்காக அவனது கட்டளைகளின்படி அமல் செய்வது அவசியமாகும். அப்போதுதான் ஒரு மனிதர் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதன்படி உண்மையாக செயல்படக்கூடியவராக இருக்கின்றார். அதன்படி அமல் செய்யக்கூடியவராக ஆகின்றார்.

கூறினார்கள்: ஒருவரது நிலை இவ்வாறு ஆகின்றபோதும் உண்மையிலேயே அவரது ஈமானிய மற்றும், செயல் நிலை அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கின்றபோதும், அவர் இறைவனின் சன்னிதானத்தில் அந்த வாக்குமூலத்தில் பொய்யர் கிடையாது.

இந்த விஷயம் ஏற்பட்டுவிட்டால் பின்னர் அது மிகப் பெரிய விஷயம் ஆகும். பின்னர் அவர் பொய்யர் இல்லை.

அந்நிலையில் அனைத்து பௌதீக விஷயங்களும் எரிந்துவிட்டன. மேலும் அவருடைய ஈமானில் ஓர் அர்ப்பணிப்பு வந்துவிட்டது. لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்று கூறுவதால் அனைத்து பௌதீக விஷயங்களும் அழிந்துவிடுகின்றன. அல்லாஹ் மட்டுமே தேவையாகவும், நோக்கமாகவும், நேசனாகவும் ஆகிவிடுகின்றான்.

அந்நிலையில் இந்த ஈமானியத் தன்மை வந்துவிட்டது என்று பொருள்.

அப்போது அந்த لَا اِلٰهَ اِلَّا اللّٰه வாயிலிருந்து வெளிப்படுகின்றது. மேலும், مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه என்பது அதன் இரண்டாம் பகுதியாகும். அது உதாரணத்திற்காக அமைந்துள்ளது. ஏனெனில் முன்மாதிரி மற்றும் உதாரணத்தால் எல்லா விஷயமும் எளிமையாகிவிடுகின்றது. நபிமார்கள் முன்மாதிரி(யை வெளிப்படுத்துவதற்)க்காக வருகின்றனர். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அனைத்து சிறப்பம்சங்களின் முன்மாதிரியின் தொகுப்பாவார்கள். ஏனெனில், அனைத்து நபிமார்களின் முன்மாதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒன்றுகூடியுள்ளன. ( மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 82 -83, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதன் உண்மையான பொருளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புரிந்தார்கள். அல்லாஹ்வின் கட்டளைகள் மீது சரியான முறையில் அமல் செய்தார்கள். மேலும், அவற்றிற்கான விளக்கத்தையும், அவற்றின் விரிவுரையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கினார்கள். மேலும் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதை முழுமை செய்து காட்டிய முழுமையான முன்மாதிரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். மேலும் அதன் மீதான செயலை அன்னார் (ஸல்) முழுமை செய்து காட்டினார்கள்.

அடுத்து, நமக்கு அறிவுரை செய்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பைஅத் சடங்கு ரீதியிலான நன்மை பயப்பதில்லை. அதுபோன்ற பைஅத்தில் பங்குதாரராக இருப்பது கடினமாகும். தமது இருப்பை விலக்கிக் கொண்டு நேசம், களங்கமற்றத் தன்மையுடன் முற்றிலும் அவருடன் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும்.

எவரிடம் பைஅத் செய்துள்ளாரோ அவருடன் முழுமையான அன்பு மற்றும் களங்கமற்றத் தன்மையுடன் இணைந்து கொள்ள வேண்டும்.

கூறினார்கள்: நயவஞ்சகர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உண்மையான தொடர்பு இல்லாததன் காரணமாக இறுதியில் ஈமான்

அற்றவராக ஆகினர். அவர்களும் வெளிப்படையான பைஅத்தை வெளிப்படுத்தியிருந்தனர். (ஆனால்) அவர்களிடத்தில் உண்மையான நேசமும், தூய்மையும் உருவாகியிருக்கவில்லை. எனவே வெளிப்படையான لا إله إلا الله என்ற கலிமா அவர்களுக்கு பயனளிக்கவில்லை.

எனவே இந்த தொடர்புகளை அதிகரிப்பது மிகவும் அவசியமான விஷயம் ஆகும். அந்த தொடர்புகளை (சீடராகிய) அவர் அதிகரிக்கவில்லையென்றால், முயற்சி செய்யவில்லையென்றால் பின்னர் முறையீடும், ஏக்கமும் பயனற்றதாகும். அன்பு மற்றும் தூய்மையின் தொடர்பு அதிகரிக்க வேண்டும். எந்த அளவிற்கு இயலுமோ அந்த நபருடன் அதாவது தலைவருடன் இணைந்து கொள்ள வேண்டும்; வழிமுறைகளிலும், கொள்கையிலும் இணைந்து கொள்ள வேண்டும்.

கூறினார்கள்:

மனித உள்ளம் நீண்ட ஆயுளுக்கான வாக்குறுதிகளை கொடுக்கின்றது. நானோ தற்போது இளைஞனாகவே இருக்கின்றேன். இன்னும் எனக்கு நீண்ட ஆயுள் இருக்கின்றது என்று மனிதன் சிந்தித்துக் கொண்டிருக்கின்றான். இது மோசடியாகும். வாழ்க்கைக்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. உண்மை மற்றும் இறை வணக்கத்தின் பக்கம் விரைவாக குனிய வேண்டும். மேலும் காலை முதல் மாலை வரை கணக்குப் பார்க்க வேண்டும். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 5, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

நான் என்ன செய்கின்றேன்? எந்த அளவிற்கு நான் لا إله إلا الله என்பதன் கீழ் அமல் செய்துள்ளேன் என்று தம்மை கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

அடுத்து ஓரிடத்தில் لا إله إلا الله என்பதை புரிவதற்கும், அதற்குரிய உரிமையை செலுத்துவதன் பக்கமும் கவனமூட்டியவாறு அன்னார் (அலை) கூறினார்கள்: முஸ்லிம்கள் சோம்பேறி ஆகிவிடவேண்டும் என்பது ஒருபோதும் எனது விருப்பம் அல்ல. கலிமா ஓதிவிட்டால் பின்னர் சோம்பேறி ஆகிவிடுங்கள் என்பதல்ல. இஸ்லாம் எவரையும் சோம்பேறி ஆக்குவதில்லை. தனது வியாபாரத்திலும், பணிகளிலும் மும்முரமாக இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் இறைவனுக்காக எந்த நேரமும் கொடுக்காமல் இருப்பதையும் நான் விரும்பவில்லை. لا إله إلا الله என்று கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அல்லாஹ்விற்குரிய உரிமையை செலுத்த வேண்டும் என்றால் அவர்களுக்கு நேரமே கிடைப்பதில்லை. அந்த அளவிற்கு அவர்கள் உலகில் மும்முரமாக இருக்கின்றனர்.

ஆயினும், வியாபாரத்திற்குரிய நேரத்தில் வியாபாரம் செய்யுங்கள். மேலும் அல்லாஹ்வின் மீதான அச்சம் மற்றும் பயத்தை அந்த நேரத்தில் கருத்தில் கொள்ளுங்கள். ஏனெனில், அப்போதுதான் அந்த வியாபாரமும் அவர்களின் இறை வணக்கத்திற்கான வடிவம் பெறும். தொழுகைக்கான நேரத்தில் தொழுகைகளை விட்டுவிடக் கூடாது. எல்லா விவகாரங்களிலும், அது எதுவாக இருந்தாலும் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பது அவசியம் ஆகும். நாம் நமது (பைஅத்) உடன்படிக்கையில் உலக விவகாரங்களில் உலகத்திற்கு எதிரில் நாங்கள் மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்போம் என்றும் உறுதி மொழி செய்கின்றோம்.

கூறினார்கள்: உலகம் வாழ்வின் நோக்கமாக இருத்தல் கூடாது.

வாழ்வின் நோக்கமாக உலகம் இருத்தல் கூடாது. அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். பின்னர் உலகப் பணிகளும் மார்க்கப் பணிகளாகவே இருக்கும். ஸஹாபிகளைப் பாருங்கள். அவர்கள் கடினமான நேரத்திலும் இறைவனை விட்டுவிடவில்லை. போர் மற்றும் வாள் ஏந்துகின்ற நேரம் எப்படிப்பட்ட அபாயகரமானதாக இருக்கும் என்றால், மனிதன் அதனை எண்ணிப் பார்க்கும்போதே பதற்றமடைந்து விடுகின்றான். ஆக்ரோஷம் மற்றும் கோபத்தின் நேரமாக இருக்கும் அந்த நேரத்திலும், அந்த நிலையிலும் அவர்கள் இறைவனிடமிருந்து கவனமற்றவர்களாக ஆகிவிடவில்லை. தொழுகைகளை விட்டுவிடவில்லை. துஆக்களின் மூலம் செயல்பட்டனர். தற்போது துர்பாக்கியம் என்னவென்றால், மக்கள் பொதுவாக எல்லா ரீதியிலும் அழுத்தம் கொடுக்கின்றனர். பெரும் பெரும் சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றனர். لا إله إلا الله என்பதைப் பற்றிய விஷயங்களைப் பேசுகின்றனர். முஸ்லிம்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று கூட்டங்கள் நடத்துகின்றனர். ஆனால், மக்கள் மறந்தும் கூட இறைவன் பக்கம் கவனம் செலுத்தாத அளவிற்கு இறைவனிடமிருந்து கவனமற்றவர்களாக இருக்கின்றனர். பின்னர் அதுபோன்ற நிலையில் அவர்களின் முயற்சிகள் விளைவுகளைத் தரக்கூடியதாக இருக்கும் என்று எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்? ஏனெனில் அவர்களின் அனைத்து முயற்சிகளும் உலகத்திற்கானதாக மட்டுமே இருக்கின்றன. உலகத்திற்காக முயற்சிகள் செய்து கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்களின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கின்றனர். அல்லாஹ்வின் மார்க்கத்தின் பெயரை பயன்படுத்தி வருகின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நினைவிற் கொள்ளுங்கள்! لا إله إلا الله என்பது உள்ளத்திலும், உயிரிலும் கலந்து விடாத வரையிலும், இருப்பின் ஒவ்வொரு அணுவிலும் இஸ்லாமிய ஒளியும், ஆட்சியும் இருக்காத வரையிலும் ஒருபோதும் முன்னேற்றம் ஏற்பட முடியாது.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 158 -159, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால் பின்னர் لا إله إلا الله என்பதன் பொருளை புரிந்து கொள்ள வேண்டும். உலகத்தை அல்லாமல் அல்லாஹ்வை வாழ்வின் நோக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

அடுத்து, தூய கலிமாவின் உண்மைத்துவம் மற்றும் அதன் பொருளை எடுத்துரைத்தவாறும், எவ்வாறு நாம் அதனை புரிந்து அதன்படி அமல் செய்ய வேண்டும் என்பதை எடுத்துரைத்தவாறும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நாங்கள் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றோம். மேலும் لا إله إلا الله என்பதை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதில் மட்டுமே நீங்கள் மகிழ்ச்சியடையக் கூடாது என்று நான் பலமுறை வெளிப்படுத்திவிட்டேன். அல்லாஹ் வெறும் வாய்ப்பேச்சுகளால் ஒருபோதும் திருப்தி கொள்வதில்லை;மேலும் செயல் நிலை சரியாக இருக்காத வரை வெறும் வாய் பேச்சுக்களால் எந்த சிறப்பும் மனிதனடத்தில் உருவாக முடியாது என்பதை எந்த மக்கள் திருக்குர்ஆனை ஓதுகின்றனரோ அவர்கள் நன்றாக அறிகின்றனர். வாய்ப்பேச்சுக்கள் ஒரு பொருட்டே கிடையாது. அசல் விஷயம் செயல் ஆகும். செயல்நிலை சரியாக இருக்காத வரை எதுவும் ஆகாது. யூதர்களிடத்திலும் இப்படிப்பட்ட ஒரு காலம் வந்தது. அதாவது, அப்போது அவர்களிடத்தில் வெறும் வாய்ப்பேச்சுக்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. மேலும், அவர்கள் வெறும் வாய்ப்பேச்சுக்களில் மட்டுமே திருப்தி கொண்டுவிட்டனர். அவர்கள் நாவால் ஏராளமானவற்றை கூறிவந்தனர். ஆனால்,

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

உள்ளத்தில் வகை, வகையான தீய எண்ணங்களும், நச்சுக்கருத்துக்களும் நிறைந்திருந்தன. இதன் காரணமாகவே அந்த சமுதாயத்தின் மீது அல்லாஹ் பலவகையான தண்டனைகளை இறக்கினான். மேலும், அவர்களை பல்வேறு வகையான துன்பங்களில் ஆழ்த்தினான். மேலும் இழிவுபடுத்தினான். எதுவரை என்றால், அவர்களை பன்றிகளாகவும், குரங்குகளாகவும் ஆக்கிவிட்டான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: தற்போது இது சிந்திக்க வேண்டிய இடமாகும். அவர்கள் தவ்ராத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தார்களா என்ன? நிச்சயமாக அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர். மேலும் நபிமார்களையும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாக இருந்தனர். ஆனால், அவர்கள் வெறும் நாவினால் ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தனர். அவர்களின் உள்ளம் நாவுடன் உடன்படாமல் இருப்பதையும் அல்லாஹ் விரும்பியிருக்கவில்லை. வாயினால் அவர்கள் கூறியிருக்க கூடும். ஆனால், அவர்களின் நாவு கூறிக் கொண்டிருந்ததன்படி உள்ளம் செயல்படாமல் இருந்தது.

அன்னார் (அலை) கூறினார்கள்: நன்றாக நினைவிற் கொள்ளுங்கள்! நான் அல்லாஹ்வை ஏகனாகவும், ஈடு இணையற்றவனாகவும் ஏற்றுக் கொள்கின்றேன். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் நபித்துவத்தின் மீது நம்பிக்கை கொள்கின்றேன். மேலும் அதேபோன்று ஈமானிய காரியங்களை ஒப்புக் கொள்கின்றேன் என்று ஒருவர் நாவினால் கூறுகின்றார் என்றால், உள்ளத்திலிருந்து அந்த ஓசை வராத வரை வாயினால் கூறிவிடுவது போதுமானதல்ல. மனிதனின் உள்ளம் ஈமான் கொள்ளாத வரை அதன் மூலம் இரட்சிப்பு கிடைக்க முடியாது. அவர் தனது செயல் நிலையில் அந்த காரியங்களை வெளிப்படுத்துவதே அவர் ஈமான் கொள்வதன் பொருளாகும். அதுவரை எந்த விஷயமும் ஆகுவதில்லை. செயல் நிலை என்பது என்ன? திருக்குர்ஆனில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ள அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வதாகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நான் உண்மையாக கூறுகின்றேன். எல்லாவற்றையும் விட்டுவிட்டு இறைவனின் பக்கம் கவனம் இருக்கும்போதும், உண்மையில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுக்கும்போதுதான் அசல் நோக்கத்தை அடைய முடியும். வெறும் (பைஅத்) உடன்படிக்கை செய்வதால் மட்டும் ஒன்றும் நடக்காது. செயல் ரீதியாக உலகைத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நினைவிற் கொள்ளுங்கள்! மனிதன் படைப்பினங்களை ஏமாற்றி விட முடியும். மேலும், ஒருவர் ஐவேளை தொழுகின்றார் என்பதையோ அல்லது நன்மை செய்கின்றார் என்பதையோ பார்த்து மக்கள் ஏமாற்றமடைந்து விடக் கூடும். மக்கள் வெளிப்படையானதைப் பார்க்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஒருவரின் செயலை, தொழுகையை பார்த்து, பள்ளிவாயிலுக்கு வருகை தந்து தொழுவதை பார்த்து இவர் பெரும் ஐவேளை தொழுகையாளி ஆவார்: இவர் பள்ளிவாயிலுக்கு வருகின்றார். இன்னும் பல நன்மைகளை செய்கின்றார். சந்தாக்கள் கொடுத்து வருகின்றார். மிகவும் நல்ல மனிதர் ஆவார் என்று மக்கள் கூறலாம். ஆனால் அந்நிலையில் மக்கள் ஏமாற்றமடைந்து விடுகின்றனர். ஆனால், இறைவன் ஒருபோதும் ஏமாற மாட்டான். எனவே அமல்களில் ஒரு சிறப்பான தூய்மை இருக்க வேண்டும். செய்யப்படுகின்ற அமல்களிலும் ஒரு சிறப்பான தூய்மை இருக்க வேண்டும். மேலும், முற்றிலும் அல்லாஹ்விற்காக அமைகின்ற செயல்களே தூய்மையான அமல்களாக இருக்கும். இந்த ஒரு விஷயமே அமல்களில் திறமையையும், அழகையும் உருவாக்கி விடுகின்றது.

அன்னார் (அலை) கூறினார்கள்: தற்போது நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது நாம் ஒவ்வொரு நாளும் கலிமா ஓதுகின்றோம். அதன் பொருள் என்ன? கலிமாவின் பொருள் என்னவென்றால், தனது வணக்கத்திற்குரியவனும், நேசனும், நோக்கமும் அல்லாஹ்வைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை மனிதன் நாவினால் ஒப்புக் கொள்வதும், உள்ளத்தால் ஆமோதிப்பதும் ஆகும்.

ஏற்கனவே கூறப்பட்டது போன்று அன்னார் (அலை) கூறினார்கள்: இலாஹ் என்ற சொல் நேசன், அசல் நோக்கம் மற்றும் இறைவன் ஆகியவற்றிற்காக வருகின்றது. அனைத்தையும் விட அதிக நேசம் அவன் மீது இருக்க வேண்டும். மேலும், அவனை அடைவதே மனிதனின் நோக்கமாக இருக்க வேண்டுமே தவிர உலகியல் பொருட்களை அடைவது நோக்கமாக இருக்கக் கூடாது. மேலும், இறைவணக்கம் அவனுக்காக மட்டும் செய்யப்பட வேண்டும். மேலும் எந்த மறைமுக இணை வைத்தலும் அதில் இருத்தல் கூடாது.

கூறினார்கள்: இலாஹ் என்ற சொல் நேசர் மற்றும் அசல் விருப்பம் மற்றும் இறைவன் ஆகியவற்றிற்காக வருகின்றது. இந்த கலிமா திருக்குர்ஆனின் அனைத்து போதனைகளின் சுருக்கமாகும். அது முஸ்லிம்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் ஒரு பெரிய மற்றும் பரந்துபட்ட நூலை நினைவில் வைப்பது எளிதல்ல.

முழுத் திருக்குர்ஆனை நினைவில் கொள்வது என்பது எளிதான காரியம் அல்ல. எனவே எல்லா நேரமும், மனிதன் இஸ்லாமிய போதனைகளின் சாறை கருத்தில் கொண்டிக்க வேண்டும் என்பதற்காக இந்த கலிமாக கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் (அந்த) சாறு என்ன? அது لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ ஆகும். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை. அவனே எனது தேவை ஆவான். அவனே எனது இலக்கு ஆவான். அவனே எனது நேசன் ஆவான்.

இந்த உண்மைத்துவம் மனிதனுக்குள் உருவாகி விடாத வரை உண்மை என்னவென்றால், இரட்சிப்பு இல்லை. எனவேதான்

مَنْ قَالَ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ دَخَلَ الْجَنَّةَ

என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவர் உண்மையான உள்ளத்துடன் لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்பதை ஏற்றுக் கொண்டுவிட்டாரோ அவர் சொர்க்கத்தில் நுழைந்துவிட்டார்.

மக்கள் ஏமாற்றம் அடைகின்றனர். என்பதன் விளக்கத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

கிளியைப் போன்று சொற்களை கூறிவிடுவதால் மனிதன் சொர்க்கத்தில் நுழைந்துவிடுகின்றான் என்று அவர்கள் கருதுகின்றனர் என்றால், மேலும் அதனுள் இவ்வளவு உண்மைத்துவம் மட்டுமே இருக்குமென்றால் பின்னர் அனைத்து செயல்களும் வீணானதாகவும், பயனற்றதாகவும் ஆகிவிடும். வெறும். لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்று கூறுவதால் சொர்க்கத்தில் நுழைந்து விடுவீர்கள் என்றால் பின்னர் அனைத்து செயல்களும் முடிந்துவிட்டன. மேலும், (அந்நிலையில்) திருக்குர்ஆனில் உள்ள இவ்வளவு பெரும் கட்டளைகளுக்கான அவசியம் என்ன இருக்கும்? மேலும் (அல்லாஹ் நம்மை காப்பானாக) ஷரீஅத் வீணானதாக ஆகிவிடும். மாறாக, அதன் உண்மைத்தவம் என்னவென்றால், அதில் வைக்கப்பட்டுள்ள கருத்து செயல் ரீதியில் மனிதனின் உள்ளத்தில் நுழைந்துவிட வேண்டும். لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்பதன் இந்த உண்மைத்துவத்தை மனிதன் புரிந்து கொள்ளும்போது பின்னர் அவன் சொர்க்கத்தில் நுழைந்துவிடுகின்றான். மரணத்திற்கு பிறகு மட்டும் அல்ல. மாறாக, இவ்வுல வாழ்க்கையிலேயே அவர் சொர்க்கத்தில் இருக்கின்றார்.

மற்றோரிடத்தில் அன்னார் (அலை) ஒரு சபையில் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சில பத்திரிகைகள் அதனை கூடுதல் விளக்கத்துடன் இவ்வாறும் எழுதியுள்ளன:

அன்னார் (அலை) கூறினார்கள்: இறைவன் சொற்களுடன் தொடர்பு வைப்பதில்லை. அவன் உள்ளத்துடன் தொடர்பு வைக்கின்றான்.

இதன் பொருள் என்னவென்றால், எந்த மக்கள் இந்த கலிமாவின் பொருளை தனது உள்ளத்தில் இடம் நுழையச் செய்துவிடுகின்றனரோ மேலும் இறைவனின் மகத்துவத்தை முழுமையான வடிவத்துடன் உள்ளங்களில் அமரச் செய்துவிடுகின்றனரோ அவர்கள் சொர்க்கத்தில் நுழைந்துவிடுகின்றனர்.

ஒரு நபர் உண்மையான முறையில் கலிமாவை ஏற்றுக் கொண்டுவிடும்போது பின்னர் இறைவனைத் தவிர்த்து வேறு எவரும் அவருடைய அன்பராக இருப்பதில்லை. உண்மையான முறையில் கலிமா ஓதிவிட்டால் பின்னர் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அன்பராக இருக்கவே முடியாது. இறைவனைத் தவிர வேறு எவரும் அவரது வணக்கத்திற்குரியவராக இருக்க முடியாது. மறைமுகமாக வணங்கத்திற்குரிய வேறு எவரும் இருக்கவே முடியாது. மேலும், இறைவனைத் தவிர அவருக்கு வேறு எந்த தேவையும் எஞ்சியிருக்காது. அவர் வேண்டக்கூடிய வேறு எந்தப் பொருளும் இருக்காது. அவர் அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே தேடக்கூடியவராக இருக்கின்றார். لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதன் மீது உள்ளத்தால் ஈமான் கொண்டவாறும் அதன் உண்மையான பொருளின்படி அமல் செய்தவரும் இருப்பதே அப்தால் என்ற அந்தஸ்தும், குதுப் என்ற அந்தஸ்தும் ஆகும்.

எவ்வாறு இருப்பினும், அடுத்து இதன் தொடர்ச்சியாக அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: இது உண்மையான விஷயமாகும். மேலும் இது விரைவில் புரிந்துவிடுகின்றது. அதாவது, அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த நேசனும், நோக்கமும் மனிதனுக்கு இல்லாதிருந்தால் பின்னர் எந்த ஒரு துன்பமோ அல்லது வேதனையோ அவனை துன்புறுத்த முடியாது.

எனது வேதனைகளும் இறைவனுக்காகவே என்பதை மனிதன் புரிந்து கொண்டால் பின்னர் அவை அவனை துன்புறுத்த முடியாது. அந்த வேதனைகளால் மனிதன் கவலைக்குள்ளாக மாட்டான். அல்லாஹ் தனது நேசரின் உதவிக்காக உடனடியாக வந்துவிடுவான் என்பது அவருக்கு தெரியும். மேலும், அவருக்கு சில நிலைமைகளில் இன்னும் கூறப்போனால், பெரும்பாலான நேரங்களில் அவருக்கு அமைதியான உள்ளத்தையும் அல்லாஹ் வழங்கிவிடுகின்றான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இது எப்படிப்பட்ட அந்தஸ்து என்றால், அது அப்தால் மற்றும் குதுப்களின் அந்தஸ்து ஆகும். இறைவனின் இருப்பு நோக்கமாக இருக்குமென்றால் இறைவனை அடைவது நோக்கமாக இருக்குமென்றால் மேலும் உலகியல் விஷயங்கள் நோக்கமாக இல்லையென்றால் பின்னர் கவலை இருக்காது. ஸஹாபிகள் இந்தக் கருத்தை புரிந்து கொண்டனர். குதுப், அப்தால் மற்றும் சிறப்பான மக்களுக்கு மட்டும்தான் இவை கிடைக்கும் என்பது கிடையாது. ஸஹாபிகள் இந்த அந்தஸ்தை பெற்றிருந்தார்கள். இந்த கருத்தை புரிந்து கொண்டிருந்தனர். எனவே அல்லாஹ் அந்த ஸஹாபிகளை நமக்கு முன்மாதிரியாக ஆக்கிவிட்டான்.

அடுத்து, இதைக் கூறிய பிறகு, பெரும் அந்தஸ்து சாதாரண மனிதர்களுக்கும் உள்ளது என்றும் அன்னார் (அலை) கூறிவிட்டார்கள். அன்னார் (அலை) கூறினார்கள்: நாங்கள் எங்கே சிலைகளை வணங்குகின்றோம்? எனவே எங்களுக்கு இதுவே போதுமானதாகும் என்று நீங்கள் எண்ணம் கொள்ளாதீர்கள்.

நாங்களும் அல்லாஹ்வைத் தானே வணங்குகின்றோம் என்று கூறிவிடுவது போதுமானது எனக் கருதாதீர்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நினைவிற் கொள்ளுங்கள். மனிதன் சிலைகளை வணங்கக் கூடாது என்பது சிறிய அந்தஸ்திற்குரிய விஷயம் ஆகும். உண்மைத்துவத்தைப் பற்றி எதனையும் அறியாத இந்துமத மக்கள் கூட தற்போது சிலை வணக்கத்தை கைவிட்டு வருகின்றனர். அதாவது ஏகத்துவத்தின் உண்மைத்துவத்தைப் பற்றி அவர்களுக்கு எந்த அறிவும் இல்லை. ஆனாலும் அவர்கள் சிலை வணக்கத்தை கைவிட்டு வருகின்றனர். இணைவைத்தல் என்பதன் பொருள் மனித வணக்கம் அல்லது சிலை வணக்கம் என்பது வரை மட்டும் கிடையாது. மனிதன் மனிதனை வணங்காமல் இருப்பதும் அல்லது சிலைகளை வணங்காமல் இருப்பதும் மட்டும் இறைவணக்கம் என்பதன் பொருள் அல்ல. இன்னும் வணங்கப்படும் விஷயங்கள் உள்ளன. இவற்றை தவிர்த்து இன்னும் பல பொய் தெய்வங்கள் உள்ளன. அதாவது இந்த வெளிப்படையான சிலைகள் மட்டும் இல்லை.

இதையே திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது மனயிச்சைகளும், ஆசைகளும் சிலைகள் ஆகும். மனதின் ஆசைகளும், விருப்பங்களும் சிலைகளாகி விடுகின்றன. அவை அல்லாஹ்விற்கெதிரில் வந்துவிடும்போது அவை சிலைகளாகிவிடுகின்றன. மேலும் அவை لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதிலிருந்து மனிதனை விலக்கிக் கொண்டு செல்லும்போது சிலைகளாகி விடுகின்றன. அன்னார் (அலை) கூறினார்கள்: எந்த நபர் மனயிச்சையை வணங்குகின்றாரோ அல்லது தனது மனயிச்சைகளுக்கு கட்டுப்படுகின்றாரோ மேலும் அதற்காக மரணிக்கின்றாரோ அவரும் சிலை வணங்கி மற்றும் இணை வைப்பாளர் ஆவார்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இது மறுத்தல் வகையான لَا மட்டும் அல்ல. மாறாக, எல்லா வகையான பொய் தெய்வங்களையும் ரத்து செய்கின்றது. அதாவது, لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்று கூறுவதில் வெறும் வெளிப்படையான சிலை வணக்கம் மட்டும் ரத்து செய்யப்படவில்லை. ஒரு பௌதீக விஷயத்தை மட்டும் மறுக்கவில்லை. மாறாக, அல்லாஹ்விற்கு எதிரில் எந்த விஷயத்தைக் கொண்டு வந்தாலும் அதனையும் இந்த கலிமா மறுக்கின்றது. மேலும் அது இந்த விஷயத்தையும் அறிவித்துக் கொண்டிருக்கின்றது. அதாவது, அத்தகைய மனிதன் அல்லாஹ்வை ஏற்கவில்லை என்று பொருள்.

எனவே அன்னார் (அலை) கூறினார்கள்: உள்ளத்தில் ஒளிந்திருக்கும் சிலைகளாக இருக்கட்டும்; அல்லது வெளிப்படையான சிலைகளாக இருக்கட்டும் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பது எல்லா வகையான பொய் தெய்வங்களையும் ரத்து செய்கின்றது என்று புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒரு நபர் முற்றிலும் காரணிகளின் மீது மட்டுமே நம்பிக்கை வைக்கின்றார் என்றால் பின்னர் அதுவும் ஒரு வகை சிலையாகும். இவ்வகையான சிலை வணக்கம் காசநோயைப் போன்றதாகும். அது உள்ளுக்குள்ளேயே இருந்து கொண்டு அழித்து விடுகின்ற டிபி நோயைப் போன்றதாகும். வெளிப்படையான சிலைகள் உடனடியாக அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்றன. மேலும் அவற்றிலிருந்து விடுதலை பெறுவதும் எளிதாகும். நான் பார்க்கின்றேன். லட்சக்கணக்கான, ஆயிரக்கணக்கான மனிதர்கள் அவற்றிலிருந்து விலகி இருக்கின்றனர். மேலும் விலகிக் கொண்டு வருகின்றனர். இந்த நாடு இந்துக்களால் நிறைந்த நாடாக இருந்தது. முஸ்லிம்கள் அனைவரும் அவர்களிலிருந்தே வெளிப்படவில்லையா? முஸ்லிம்களாகியுள்ள இவர்களும் முதலில் சிலை வணங்கிகளாகத்தானே இருந்தனர். அவ்வாறிருக்க அவர்கள் சிலை வணக்கத்தை கைவிட்டனரா? கைவிடவில்லையா? நான் முன்னரே கூறியது போன்று தற்போது சிலை வணக்கம் செய்யாத பிரிவுகள் இந்துக்களிலும் சுயமே உருவாகியுள்ளன.

ஆனால், இந்த அளவில் மட்டுமே சிலை வணக்கத்தின் பொருள் இல்லை. பெரும் சிலை வணக்கத்தை கைவிட்டுவிட்டனர். ஆனால், இன்னும் ஆயிரக்கணக்கான சிலைகளை மனிதன் கக்கத்தில் ஏந்திக் கொண்டு திரிகின்றான். மேலும், தத்துவவாதிகள் மற்றும் தர்க்கவாதிகள் என்றழைக்கப்படுகின்ற அந்த மக்களும் இருக்கின்றனர். அவர்களும் இவற்றை உள்ளேயிருந்து வெளியேற்ற முடியாது. தத்துவ ஞானிகள் மற்றும் தர்க்கவாதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். பெரும் தத்துவங்களை எடுத்துரைக்கின்றனர். பெரும் பெரும் சான்றுகளை முன்வைக்கின்றனர். ஆனால், அவர்களின் உள்ளங்களில் சிலைகள் உள்ளன. தமது அறிவின் தலைவர்கள் ஆவர். அவைகளே அவர்களுக்கு சிலைகளாக ஆகியுள்ளன. அவர்களின் கருத்துகள் உள்ளன. அவையே அவர்களின் சிலைகளாக ஆகியுள்ளன. அவர்களால் அவற்றை வெளியேற்ற முடியாது.

அன்னார் (அலை) கூறினார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வின் அருளின்றி இந்தப் புழுக்கள் உள்ளே இருந்து வெளியேற முடியாது.

அவை மிகவும் நுட்பமான புழுக்கள் ஆகும். மேலும், இந்தப் புழுக்கள் மிக அதிகமான துன்பத்தையும், பாதிப்பையும் தரக்கூடியவை ஆகும். எந்த மக்கள் மனயிச்சைகளின் உணர்ச்சிகளின் தாக்கத்திற்கு ஆளாகி அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய கடமைகள் மற்றும் அல்லாஹ்வின் எல்லைகளை விட்டு வெளியேறி விடுகின்றனர். மேலும், இவ்வாறு படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் பறித்து விடுகின்றனர். அவர்கள் ஒன்றும் எழுதப்படிக்கத் தெரியாத நபர்கள் அல்ல. மாறாக, அவர்களில் ஆயிரக்கணக்கான மவ்லவி ஃபாஸில்களையும், ஆலிம்களையும் காண்பீர்கள். மேலும் மார்க்கச் சட்ட வல்லுநர்கள் மற்றும் சூஃபிகள் என்றழைக்கப்படுபவர்களும் இருப்பார்கள். ஆனால், அதன் பிறகும் இந்த விவகாரங்களில் அவர்களும் அந்த நோய்களால் பாதிக்கப்பட்டு இருப்பார்கள். அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு உரிய உரிமைகளை வழங்காவிட்டால் அந்நிலையிலும் அவர்கள் لَا إِلٰهَ إِلَّا اللهُ என்பதன் பொருளை மறந்து விடுகின்றனர். அந்த சிலைகளிலிருந்து விலகியிருப்பதே வீரம் ஆகும். பெரும், பெரும் மனிதர்களை நீங்கள் மிகவும் நல்லவர்கள் என்று கருதுவீர்கள். ஆனால் அவ்வாறு இல்லை. அவர்களுக்கு உள்ளேயும் சிலைகள் உள்ளன.

அந்த சிலைகளை விட்டு விலகுவதே வீரமாகும். முழுமையான முறையில் அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்க வேண்டும். முழுமையான முறையில் அடியார்களுக்கு உரிய உரிமையை வழங்க வேண்டும். அப்போதுதான், لَا إِلٰهَ إِلَّا اللهُ என்பதன் சரியான பொருள் தெரிய வருகின்றது. மேலும், இதுவே வீரம் ஆகும்.

அவற்றை அடையாளம் காண்பதே உயர்வான ஞானமும், புத்திசாலித்தனமும் ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இந்த சிலைகளின் காரணமாகவே பரஸ்பரம் நயவஞ்சகம் உருவாகின்றது. மேலும் ஆயிரக்கணக்கான கொலைகளும், இரத்தம் சிந்துதலும் நிகழ்ந்து விடுகின்றன. ஒரு சகோதரர் மற்றொரு சகோதரரின் உரிமையை பறிக்கின்றார். மேலும், இதேபோன்று ஆயிரக்கணக்கான தீமைகள் அவற்றின் காரணமாகவே நிகழ்கின்றன. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் நிகழ்கின்றன. மேலும் இறைவனை வெறும் ஒரு செயலிழந்த அங்கமாக அவர்கள் ஆக்கி வைத்துள்ளனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஏகத்துவத்தின் அசல் பொருளை மிகக் குறைவான நபர்களே புரிந்துள்ளனர். அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டால், நாங்கள் முஸ்லிம்கள் இல்லையா?; நாங்கள் கலிமா கூறவில்லையா? என்று உடனடியாக கூறிவிடுகின்றனர். ஆனால், வேதனை என்னவென்றால், வாயால் கலிமாவை ஓதிவிட்டோம்: அது போதுமானது ஆகும் என்று மட்டுமே அவர்கள் புரிந்து வைத்துள்ளனர். நான் நிச்சயமாக கூறுகின்றேன். அதாவது மனிதன் தூய கலிமாவின் உண்மைத்துவத்தை அறிந்து கொண்டு விட்டால் மேலும், செயல் ரீதியில் அதன்படி பேணத் தொடங்கிவிட்டால், பின்னர் அவன் பெரும் முன்னேற்றத்தை அடைய முடியும். மேலும் இறைவனின் பல விநோதமான வல்லமைகளை காண முடியும்.

இந்த விவகாரத்தை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். அதாவது, இந்த இடத்தில் நிற்கும் நான் சாதாரண அறிவுரையாளர் என்ற அந்தஸ்தில் நிற்கவில்லை. மேலும் கதைகளை கூறுவதற்காக நிற்கவில்லை. மாறாக, நான் சாட்சியம் வழங்குவதற்காக நிற்கின்றேன். அல்லாஹ் எனக்கு வழங்கிய தூதுச் செய்தியை நான் எட்ட வைத்து விடவேண்டும். ஒருவர் அதனை செவிமடுக்கின்றாரா? இல்லையா? ஏற்கின்றாரா? ஏற்கவில்லையா? என்பதை பற்றி எனக்கு கவலையில்லை. அதற்குரிய பதிலை நீங்கள் கொடுப்பீர்கள். நான் அறிகின்றேன். ஏராளமான மக்கள் எனது ஜமாஅத்தில் இருக்கின்றனர் தான். மேலும் ஏகத்துவத்தை ஒப்புக் கொள்ளவும் செய்கின்றனர். ஆனால், நான் வேதனையுடன் கூறுகின்றேன். அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

எந்த நபர் தனது சகோதரரின் உரிமையை பறிக்கின்றாரோ அல்லது நம்பிக்கை துரோகம் செய்கின்றாரோ அல்லது வேறு வகையான தீமைகளிலிருந்து விலகுவதில்லையோ அத்தகைய நபரை ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவராக நான் நம்பவில்லை. ஏனெனில், அது ஒரு எப்படிப்பட்ட அருட்கொடை என்றால், அதை அடைந்த உடனேயே மனிதனிடத்தில் ஒரு அசாதாரண மாற்றம் ஏற்பட்டுவிடுகின்றது. உள்ளுக்குள் இருக்கும் ஆணவம், சுயநலம், பகட்டு, பகைமை, காழ்ப்புணர்ச்சி, பொறாமை, கருமித்தனம், நயவஞ்சகம், உடன்படிக்கை மீறுதல் போன்ற அந்த சிலைகள் அகன்றுவிடுகின்றபோதுதான் இந்த மாற்றம் நிகழ்கின்றது. மேலும், அப்போதுதான் அவர் உண்மையான ஏகத்துவவாதியாக ஆகுகின்றார். எதுவரை உள்ளுக்குள் இந்த சிலைகள் இருக்குமோ அதுவரை لَا إِلٰهَ إِلَّا اللهُ என்று கூறுவதில் அவர் எவ்வாறு உண்மையாளராக திகழ முடியும்?

எனவே இந்த ரமலானில் நம்மில் ஒவ்வொருவரும் இந்த முயற்சியை செய்ய வேண்டும். அதாவது, அந்த சிலைகளிலிருந்தும் தன்னைத் தானே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் لَا إِلٰهَ إِلَّا اللهُ என்பதன் உண்மையான பொருளை புரிந்து கொள்ள முடியும். மேலும் அதன் மீது நம்பிக்கை கொள்ளக் கூடியவர்களாக இருக்க முடியும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இதில் இந்த விஷயம் மிக உறுதியானதாகும். அதாவது, நான் இறைவனை ஏகனாகவும், ஈடு இணையற்றவனாகவும் நம்புகின்றேன் என்று வெறும் வாயளவில் மட்டும் கூறிவிடுவதால் எந்த பயனும் ஏற்பட முடியாது. தற்போது வாயளவில் கலிமா ஓதுகின்றார். அதேநேரம் ஏதாவது விஷயம் தனது இயல்பிற்கு எதிரானதாகக் கண்டால் பின்னர் கோபத்தையும், ஆத்திரத்தையும் இறைவனாக்கிக் கொள்கின்றார்.

நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது இந்த மறைவான பொய் தெய்வங்கள் இருக்கின்ற வரை நீங்கள் ஒருபோதும் இதனை எதிர்பார்க்காதீர்கள். அதாவது ஓர் உண்மையான ஏகத்துவவாதிக்கு கிடைக்கின்ற அந்தஸ்து உங்களுக்கு கிடைத்துவிடும் என்று ஒருபோதும் நீங்கள் எதிர்பார்க்காதீர்கள். உதாரணமாக, பூமியில் எலிகள் இருக்கும் வரை பிளேக்கிலிருந்து பாதுகாப்பு பெற்று விட்டோம் என்று கருதாதீர்கள். அதேபோன்று, இந்த எலிகள் இருக்கும் வரை அதாவது தீமைகள் எனும் எலிகள் உள்ளுக்குள் இருக்கும் வரை ஈமான் அபாயத்தில் இருக்கும். நான் கூறுகின்ற விஷயங்களை எல்லாம் மிகவும் கவனத்துடன் கேளுங்கள். மேலும் அதன்படி அமல் செய்வதற்கு அடியெடுத்து வையுங்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: எனவே கலிமாவைக் குறித்த சுருக்கமான சொற்பொழிவு இதுவே ஆகும். அதாவது அல்லாஹ்வே உங்களது இறைவனாகவும், நேசனாகவும், இலக்காகவும் இருக்க வேண்டும். மேலும், எல்லா வகையான உட்புறத் தீமைகளிலிருந்தும் நீங்கள் தூய்மையாகிவிடும்போதும், உங்களது உள்ளங்களிலுள்ள அந்த சிலைகளை வெளியேற்றி விடும்போதும் தான் இந்த அந்தஸ்து கிடைக்கும். (மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 101 -108)

ரமலானின் இந்த எஞ்சிய நாட்களில் குறிப்பாக முயற்சியுடனும், துஆவுடனும் நம்மிடமிருந்து அனைத்து தீமைகளையும் வெளியேற்றக்கூடியவர்களாக நாம் திகழ்ந்திட அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக.

எல்லா வகையான மறைவிலும், மறைவான ஷிர்க்கிலிருந்தும் விலகியவர்களாக இருப்போமாக. எல்லா வகையான சிலைகளையும் வெளியேற்றக்கூடியவர்களாக இருப்போமாக. அல்லாஹ் மட்டுமே நமது இறைவனாகவும், விருப்பமாகவும், நேசனாகவும் ஆகிவிடட்டுமாக. لَا إِلٰهَ إِلَّا اللهُ என்ற கலிமாவின் உண்மைத்துவத்தை நாம் புரியக் கூடியவர்களாக இருப்போமாக. மேலும் நாம் لَا إِلٰهَ إِلَّا اللهُ என்பதை ஒப்புக் கொள்கின்றபோது பின்னர் நமது செயல் வாழ்க்கைக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்முன் நிலைநாட்டியுள்ள அழகிய முன்மாதிரியை பின்பற்றி நடக்க வேண்டும். மேலும், இந்த அனைத்து விஷயங்களும் அல்லாஹ்வின் அருளின்றி

நடைபெற முடியாது. மேலும் அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்காக நாம் ஒரு செயல்ரீதியிலான ஜிஹாதையும் ஆன்மிக ஜிஹாதையும் மேற்கொள்ள வேண்டும்.

ரமலானின் இறுதி பத்து நாட்களில் நாம் லைலத்துல் கத்ரைப் பற்றி பேசுகின்றோம். நாம் நமது அனைத்தையும், நமது ஒவ்வொரு சொல்லையும், செயலையும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ஆக்கிக் கொள்வதற்கு தயாராகிவிடும்போதும், அதன்படி அமல் செய்யக்கூடியவர்களாக இருக்கும்போதும், பின்னர் அதனை நிரந்தரமாக தமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ளும்போதும் தான் லைலத்துல் கத்ர் என்பது உண்மையில் கிடைக்கின்றது. லைலத்துல் கத்ர் கிடைப்பதற்கான உண்மையான அடையாளம் இவையே ஆகும்.

நாங்கள் ஒளியைப் பார்த்துவிட்டோம்; நாங்கள் இன்ன விஷயத்தை பார்த்துவிட்டோம்; இவ்வாறு நாங்கள் உணர்ந்தோம்; மழை வந்துவிட்டது; நறுமணம் வந்தது; இன்ன விஷயம் வந்தது என்பதெல்லாம் தற்காலிக அடையாளங்கள் ஆகும். இவையெல்லாம் தற்காலிக அடையாளங்கள் ஆகும். நமது உள்ளத்தில் என்ன புரட்சி உருவானது? என்பதே அசல் அடையாளம் ஆகும்.

நாம் களங்கமற்றவர்களாகத் திகழ்ந்து மூன்று நாட்கள் துஆக்கள் செய்தால் பின்னர் அல்லாஹ்வின் சிறப்பான அருள் வெளிப்பட முடியும். என்ற எனது கூற்றை கருத்தில் கொண்டவாறு சில ஜமாஅத்துகள் துஆக்களுக்காகவும் சிறப்பு நிகழ்ச்சிகளை உருவாக்கியுள்ளன. இந்த மூன்று நாட்களில் துஆக்களில் ஈடுபட வேண்டும். மேலும் உங்களது பழைய வாழ்க்கை முறைக்கு சென்றுவிட வேண்டும் என்பதற்காக நீங்கள் இந்த மூன்று நாட்களை குறிப்பாக நிர்ணயம் செய்திருக்கின்றீர்கள் என்றால், பின்னர் அதேநேரம் لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ என்பதன் உண்மையான நோக்கத்தை மறந்துவிட்டீர்கள் என்றால், பின்னர் அல்லாஹ் நமது உள்ளங்களின் நிலையை நன்கு அறிந்தவன் ஆவான். அவன் நமது எண்ணங்களையும் அறிந்துள்ளான். அவனிடமிருந்து எந்த விஷயம் மறைந்திருக்கவில்லை என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். (கலிமாவின் பொருளை மறந்துவிட்ட) அந்நிலையில் அதனால் எந்த பயனும் இருக்காது.

எனவே அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இந்த நாட்களை துஆக்களில் கழிக்க விரும்புகின்றீர்கள் என்றால், பின்னர் இனி இந்த நாளை எங்களது வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக நாங்கள் ஆக்கிக் கொள்வோம் என்ற உறுதி மொழியுடன் இந்த நாட்களை நீங்கள் கழிக்க வேண்டும். பின்னர் எதிரிகள் நமக்கு கொடுத்து வரும் துன்பங்களை அகற்றுவதற்காக அல்லாஹ் தனது சிறப்பான ஆதரவையும், உதவியையும் வழங்குவான். இன்ஷாஅல்லாஹ். மேலும் நாம் அல்லாஹ்விற்காக ஆகிவிடும்போது தனது வாக்குறுதிக்கேற்ப அல்லாஹ் நமது நண்பனாகிவிடுவான். எவ்வாறு இருப்பினும், எந்த விதிவிலக்கும் இல்லாமல் ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தன்னிடத்தில் அப்படிப்பட்ட நிலையை உருவாக்கிக் கொண்டால் பின்னர் இந்த புரட்சி ஏற்படும் என்றும் நான் கூறியிருந்தேன்.

எனவே நினைவிற் கொள்ளுங்கள். இந்த நிலை உருவாகவில்லையென்றால் பின்னர் மூன்று நாட்களுக்கு பிறகு இவ்வாறு புரிந்து கொள்ளாதீர்கள். அதாவது, நவூதுபில்லாஹ் அல்லாஹ் எங்களது துஆக்களை கேட்பதில்லை என்றோ அல்லது எந்த புரட்சியும் உருவாகாது என்றோ அந்த நிகழ்ச்சியை வடிவமைத்தவர்கள் கருதிக் கொள்ள வேண்டாம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் அன்னாரின் ஜமாஅத்திற்கும் நான் விரைவாகவோ அல்லது சில காலம் கழித்தோ வெற்றிகளை வழங்குவேன் என்று அல்லாஹ் அன்னாரிடம் வாக்குறுதி வழங்கியுள்ளான். ஆயினும், நாம் நமது நிலைகளில் மாற்றங்களை உருவாக்கிக் கொண்டால் மேலும், لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ என்பதன் உண்மைத்துவத்தை புரிந்தவாறு தமது இறைவனாகவும், நோக்கமாகவும், நேசனாகவும் அல்லாஹ்வை மட்டுமே ஆக்கிக் கொண்டால், உலகத்தை விட அதிகமாக அல்லாஹ்வின் மீது நேசம் இருக்குமென்றால், அவனை அடைவதே நமது இலக்காக இருக்குமென்றால் பின்னர் இந்த புரட்சி விரைவாக வந்துவிடக் கூடும்.

அல்லாஹ் தேவையற்றவன் ஆவான். அவனது கூற்றுகளில் நிபந்தனைகளும் இருக்கின்றன. எனவே நாம் நமது நிலைகளில் நிரந்தரமான மாற்றங்களை உருவாக்கிக் கொள்வதற்கு உறுதி மொழி எடுக்க வேண்டும். ரமலானின் இறுதி பத்து நாட்கள் நரகத்திலிருந்து இரட்சிப்பு பெறுவதற்கான பத்து நாட்கள் ஆகும் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஆகும். (அல்ஜாமிஃ லிஷஃப் அல்ஈமான், பாகம் 5, பக்கம் 223 - 224, ஹதீஸ் எண்: 3336, மக்தபத்துர் ருஷ்துர் ரியாழ், 2003)

மேலும், அடுத்து, ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று அன்னார் (அலை) கூறினார்கள்:

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

என்ற கலிமாவை எவர் உள்ளத்தால் கூறினாரோ அவர் மீது நெருப்பும் ஹராமாகிவிட்டது. மனிதனின் அமல் அதற்கு அவசியம் ஆகும். மேலும் நிரந்தரமான அமல் அவசியம் ஆகும் என்பதன் பக்கம் இந்த அனைத்து விஷயங்களும் கவனமூட்டுகின்றன.

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

என்று கூறுவதுடன் அமல் செய்வதும் மிகவும் அவசியம் ஆகும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கூறியுள்ளார்கள். மேலும் அதன் விளக்கத்தை நான் எடுத்துரைத்துள்ளேன்.

எனவே இந்த இறுதி பத்து நாட்களிலிருந்து முழுமையான பயனடைவதற்காக, உண்மையான முறையில் லைலத்துல் கத்ரை பெறுவதற்காகவும்,

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

என்ற கலிமாவை நாம் நமது உள்ளம் மற்றும் மூளையின் குரலாக ஆக்கிக் கொள்ள நேரிடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று நமது ஒவ்வொரு செயலிலும் அதனை அமல்படுத்த வேண்டும்.

அல்லாஹ் நமக்கு அதற்கேற்ப நமது வாழ்க்கையை கழிப்பதற்கு நற்பேறு வழங்குவானாக.

இந்த நாட்களில் உலகின் பொது அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காகவும் துஆ செய்து கொண்டிருங்கள். அல்லாஹ் மனித குலத்தின் மீது கருணையும், அருளும் புரிவானாக.

தமிழாக்கம்:
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.
**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**
இந்த *TOLL FREE* எண்ணில்
ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

* * * * *

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்கள், துஆக்களுக்காக அன்னார் வழங்கிய திட்டங்கள் மற்றும் அறிவுரைகள்

(மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் லோன் சாஹிப், சதர் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் பாரத் & முதல்வர் ஜாமிஆ அஹ்மதியா காதியான்)

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱسْتَجِيبُواْ لِلَّهِ وَلِلرَّسُولِ إِذَا دَعَاكُمْ لِمَا يُحْيِيكُمْ ۖ وَٱعْلَمُوٓاْ أَنَّ ٱللَّهَ يَحُولُ بَيْنَ ٱلْمَرْءِ وَقَلْبِهِۦ وَأَنَّهُۥٓ إِلَيْهِ تُحْشَرُونَ

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் தூதராகிய) அவர் உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக அழைத்தால், நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் பதிலளியுங்கள். அல்லாஹ் மனிதனுக்கும் அவனது உள்ளத்திற்குமிடையில் சூழ்ந்திருக்கின்றான் என்பதையும், நீங்கள் (உயிர்பிக்கப்பட்டு) அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (திருக்குர்ஆன் அதிகாரம் 8: வசனம் 25)

கண்ணியத்திற்குரிய வாசகர்களே! என்னுடைய கட்டுரையின் தலைப்பு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்கள், துஆக்களுக்காக அன்னார் வழங்கிய திட்டங்கள் மற்றும் அறிவுரைகள் என்பதாகும்.

தூதர்களின் வருகையின் நோக்கம் என்பது ஆன்மிகமாக மரணித்தவர்களுக்கு உயிரூட்டுவதாகும் என்று நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வால் அனுப்பப்படுகின்ற தூதர்கள் பல வழிமுறைகளில் மக்களுக்கு உயிரூட்டுகின்றனர். அவற்றுள் ஒரு முக்கியமான வழிமுறை அவர் தம்மை ஏற்றுக் கொண்ட மக்களுக்காக செய்கின்ற துஆக்களாகும். அவற்றை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு அம்மக்கள் ஆன்மிக உயிர் பெறுதவற்காக பல வழிவகைகளை ஏற்படுத்துகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ما كانت النبوة قط الا تبعتها خلافة

(கன்ஸுல் உம்மால், பாகம் 1) உலகில் எப்போதெல்லாம் நபி தோன்றுகின்றாரோ அப்போதெல்லாம் அவரது பணிகளை முழுமைபடுத்துவதற்காக கிலாஃபத் அமைப்பு நிலைபெறுகிறது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களது மரணத்திற்குப் பிறகும் அல்லாஹ்வின் வாக்குறுதி மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப கிலாஃபத் அமைப்பானது அஹ்மதிய்யா ஜமாஅத்தில் நிலைபெற்றுள்ளது. கிலாஃபத்திற்கு கட்டுப்பட்ட மக்கள் இறைவனின் அருளிலிருந்து பலன் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆன்மிகமாக உயிர் பெற்றவர்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு இப்போது கிலாஃபத்தின் மூலம் உயிர் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களை எவ்வாறு ஒப்புக் கொள்ளப்பட்ட துஆக்கள் மூலமாக ஆன்மிகமான முறையில் உயிரூட்டினார்களோ அவ்வாறே அன்னாருக்குப் பிறகு அன்னாரைப் பின்பற்றி ஒவ்வொரு காலத்தின் கலீஃபாவும் உயிரூட்டிக் கொண்டிருந்தனர். இப்போதும் இந்த தொடரானது ஐந்தவாது கிலாஃபத்திலும் முழு மகத்துவத்துடன் நடந்து கொண்டுதான் உள்ளது.

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்கள் சிலவற்றை எடுத்துரைப்பதற்கு முன்னதாக, துஆவின் பலன்கள், அதன் முக்கியத்துவம் மற்றும் அதன் அருட்கள் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைக்கின்றேன். இக்காலகட்டத்தில் அன்னார் தான் துஆவுடன் தொடர்புடைய அனைத்து கருத்துக்களையும் விளக்கமாக எடுத்துரைத்த ஒரே நபர் என்பது மட்டுமின்றி ஒவ்வொரு அஹ்மதியின் மனதிலும் அதனை ஆழமாக பதிய வைத்தும் விட்டார்கள். இதனால் ஒவ்வொரு அஹ்மதியின் வாழ்க்கை முழுவதும் துஆவாகவே ஆகிவிட்டது. துஆ எனும் இந்த உணவைக் கொண்டுதான் தம் ஆன்மிக வாழ்விற்கான வழிவகைகளை அவர்கள் தேடிக் கொள்கின்றார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

துஆ என்பது மாபெரும் சக்திவாய்ந்த ஒன்று. அதன் மூலம் பெரிய. பெரிய கடினமான சிக்கல்கள் கூட எளிதில் தீர்க்கப்படுகின்றன. மிகவும் ஆபத்தான இலக்குகளைக் கூட மனிதன் மிக எளிதில் கடந்து விடுகின்றான். இறைவனிடமிருந்து வருகின்ற அருள் மற்றும் சக்தியை ஈர்க்கின்ற வடிகால் துஆ ஆகும். அதிகமாக துஆக்களில் மூழ்கியிருப்பவர் இறுதியில் அந்த அருளை ஈர்த்துக் கொள்கின்றார். இறைவனுடைய உதவியைப் பெற்றவராக தனது நோக்கத்தை அடைந்து விடுகின்றார். துஆ மாபெரும் செல்வம் என்பதை நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். துஆவை கைவிடாதவரின் ஆன்மிகத்திலும், பௌதீகத்திலும் ஒருபோதும் சிக்கல் வராது. அவர் நாலாபுறமும் ஆயுதம் ஏந்திய போர் வீரர்கள் எந்நேரமும் பாதுகாப்புக்காக நின்று கொண்டிருக்கும் பலம் வாய்ந்த கோட்டைக்குள் இருக்கின்ற மனிதரைப் போன்றவர் ஆவார். ஆனால் துஆவில் கவனமில்லாத நபர் நிராயுதபாணியாக இருக்கும் ஒருவருக்கு ஒப்பானவர் ஆவார். அவர் பலவீனமாகவும் இருக்கின்றார். அத்துடன் அவர் எல்லா புறமும் கொடிய மிருகங்களால் சூழப்பட்டு காட்டுக்குள் இருப்பவரைப் போன்றவர் ஆவார். அவருக்கு ஒருபோதும் பாதுகாப்பு இல்லை என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியும். ஒரே நொடியில் அவர் கொடூரமான விலங்குகளுக்கு இரையாகி விடுவார். அவரது எலும்பு கூட மிஞ்சாது. எனவே மனிதனுக்கு மாபெரும் நற்பேறு மற்றும் பாதுகாப்பிற்கான உண்மையான வழியே இந்த துஆதான். ஒருவர் எப்போதும் துஆ செய்வதில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பாரெனில் இந்த துஆவே அவரது அடைக்கலமாகி விடும். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 192 - 193, 1984 ஆம் ஆண்டு இலண்டன் பதிப்பு)

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான தன்மையை விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: துஆவின் தன்மை என்னவென்றால், நற்பேறு பெற்ற நல்லடியாருக்கும் அவரது இறைவனுக்குமிடையில் உள்ள உறவு துஆவாகும். அதாவது முதலில் இறைவனின் ரஹ்மானிய்யத் (கருணை எனும் பண்பு) நல்லடியாரை தன் பக்கம் ஈர்க்கின்றது. பின்னர், அந்த நல்லடியாரின் உண்மையின் ஈர்ப்பினால் இறைவன் அவருக்கு அருகில் வந்துவிடுகின்றான். துஆ செய்யும்போது இந்த உறவு ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்ததும் தன் அற்புதமான குணங்களை உருவாக்குகிறது. ஆகவே அடியார் மிகவும் கடினமான பிரச்சனைகளில் சிக்கிக் கொண்ட நிலையில் இறைவனிடம் முழுமையான நம்பிக்கை, முழுமையான விருப்பம், முழுமையான அன்பு, முழுமையான நன்றியுணர்வு மற்றும் முழுமையான தைரியத்துடன் குனிகின்றார். மேலும் உச்சபட்ச விழிப்புணர்வுடன் கவனமின்மையின் திரைகளை களைந்து அர்ப்பணம் என்ற களத்தில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருக்கின்றார் என்றால் அப்போது அவர் இணை ஏதுமில்லாத அந்த இறை சன்னிதியை தன் முன்னால் காண்கின்றார். அப்போது அடியாரின் ஆன்மா அந்த இறை சன்னிதானத்தில் தலையை வைத்துவிடுகின்றது. ஆன்மாவினுள் வைக்கப்பட்டுள்ள ஈர்ப்பு சக்தியானது இறைவனின் அருட்கொடைகளை தன் பால் ஈர்க்கின்றது.

அப்போது மகத்துவமுள்ள இறைவன் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்துகின்றான். அந்த அத்தியாவசியமான பௌதீகக் காரணிகளையும் ஏற்படுத்துகின்றான். அந்த துஆவின் விளைவின் காரணமாக அந்த நோக்கத்தை பெறுவதற்கான அனைத்து அத்தியாவசியமான பௌதீகக் காரணிகளையும் ஏற்படுத்துகின்றான். உதாரணமாக, மழைக்காக துஆ செய்தால், அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு, இயற்கையாக மழை பெய்வதற்கு அவசியமான அனைத்து காரணிகளும் அந்த துஆவின் விளைவால் உருவாக்கப்படுகின்றன. பஞ்சம் ஏற்படுவதற்காக சாபமிடப்படுகின்றதென்றால் அனைத்துக்கும் முழு ஆற்றல் பெற்ற வல்லமையுள்ள இறைவன் எதிர்மறையான காரணிகளை உருவாக்குகின்றான். முழுமையான நல்லடியாரின் துஆ கட்டளையின் தன்மையை தன்னுள் உருவாக்குகின்றது என்று ஆன்மிகத்தில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. அதாவது இறைவனின் அருளால் அந்த துஆ பௌதீக உலகிலும், ஆன்மிக உலகிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. காரண காரியங்கள், பிரபஞ்சங்கள், மற்றும் மனிதர்களின் உள்ளங்கள் போன்றவை எந்த நோக்கத்தை அடைவது துஆ செய்பவரின் நோக்கமாக உள்ளதோ அதன்பால் செலுத்தப்படுகின்றன. (பரக்காத்துத் துஆ, ரூஹானீ கஸாயின், தொகுதி 6, பக்கம் 9 -10)

கண்ணியத்திற்குரியவர்களே! இப்போது நான் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான எண்ணற்ற சம்பவங்களிலிருந்து நேரத்தின் அருமையைக் கருதி சிலவற்றை மட்டும் எடுத்துரைக்கின்றேன்.

**1.** அஹ்மதிய்யா கிலாஃபத் ஓர் அருட்கொடையாகும். அது தாகித்து இருக்கும் ஆன்மாக்களுக்கு தண்ணீர் கொடுப்பது மட்டுமின்றி தரிசு நிலத்தை பசுமையாக்குவதற்கான காரணிகளையும் உருவாக்குகிறது. 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் இரண்டாம் நாள் ஆற்றிய தமது உரையில் ஹுஸுர் அவர்கள் ஆஃப்ரிக்காவில் வெளிப்பட்ட நூற்றுக் கணக்கான அடையாளங்களில் ஓர் அடையாளத்தை பற்றிக் கூறுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

மாலியின் அமீர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: கடந்த வருடம் குறைவாக மழைப் பொழிந்ததால் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. அவர்கள் எனக்கும் துஆவுக்காக எழுதினார்கள். மழை வேண்டி தொழுங்கள் என்று நான் பதில் எழுதினேன். அல்லாஹ் அருள் புரிந்தான். நமது ஒரு முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்:

முஹம்மது தூரே ஸாஹிப் என்ற ஒரு பள்ளிக்கூட ஆசிரியர் வந்தார். தொடர்ந்து அஹ்மதிய்யா வானொலியை கேட்டு வருவதாகவும், ஆனால் ஜமாஅத்துடன் தொடர்பு ஏதும் கிடைக்கவில்லை என்றும் கூறினார். ஒருநாள் ஜமாஅத்தின் கலீஃபா இந்தப் பகுதியில் மழை பெய்ய வேண்டி துஆ செய்ததாக கேள்விப்பட்டார். மேலும், மாலி ஜமாஅத்தின் அமீர் அந்த பகுதிக்கு வருகை தருவதாகவும் கேள்விப்பட்டார். எனவே அவரை நேரில் சென்று சந்திக்க வேண்டும் என்று விரும்பினார். ஜமாஅத்தின் நிகழ்ச்சி நடக்கவிருந்த ஃபராகோ என்ற ஊருக்கு அவர் சென்றார். அங்கேயும் அமீர் ஸாஹிப் இந்த பகுதியில் மழை பெய்வதற்காக கலீஃபத்துல் மஸீஹ் துஆ செய்துள்ளதாகவும் மழைக்காக சிறப்புத் தொழுகை நடத்தியதாகவும் குறிப்பிட்டார்கள். எனவே இவ்வருடம் வழக்கத்திற்கு மாறாக மழை பெய்தால் அது துஆவின் காரணத்தால் தான் இருக்கும் என்று அவர் தன் மனதில் பதிய வைத்துக் கொண்டார். ஏனெனில், பல வருடங்களாக நல்ல மழை பெய்யவில்லை. மழை காலம் வந்ததும் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை கடுமையான மழை பெய்வதைக் கண்டார். கடந்த பத்து வருடங்களாக இவ்வாறு கனமழை பெய்யவில்லை என்பதற்கு அவரே சாட்சியாவார். அஹ்மதிய்யத்தில் அவர் நுழைய வேண்டும் என்பதற்காக அவர் இங்கு வந்திருக்கின்றார். ஏனெனில், இறைவன் கலீஃபாவுடன் இருக்கின்றான். அல்ஹம்துலில்லாஹ். இப்போது இந்த ஊரில் மக்கள் அதிகமாக பைஅத் செய்து வருகின்றனர். (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் ஆகஸ்ட் 3.2018 பக்கம் 18)

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: ஐவரிகோஸ்டின் நமது முஅல்லிம் ஸாஹிப் எழுதுகின்றார்: அங்கு ஒரு தூய அஹ்மதி அப்துல்லாஹ் ஸாஹிப் இருக்கின்றார். அவரைக் குறித்து எழுதுகின்றார்: அவர் கூறினார். எனது சகோதரனை போலீஸ் பிடித்துச் சென்று விட்டது. போதைப் பொருள் விற்றதாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றம் அவருக்கு இருபது ஆண்டுகள் சிறை தண்டனை அறிவித்துவிட்டது. இதனால் நான் மிகவும் கவலையுடன் இருந்தேன். அவர் குற்றவாளி கிடையாது. ஆனாலும், போலீஸ் பிடித்துக் கொண்டு போய்விட்டதே! என்று அவர் எனக்கு இங்கு இலண்டனுக்கு துஆவுக்காக கடிதம் எழுதினார்.

அவர் கூறுகின்றார். நான் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்காக கடிதம் எழுதியுள்ளேன். நானும் என் சகோதரனின் விடுதலைக்காக துஆ செய்ய ஆரம்பித்தேன். ஆனால், விடுதலைக்கான எந்த சூழ்நிலையும் தென்படவில்லை. அவர் தன் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். அதாவது, ஒரு நாள் நான் உங்களை கனவில் கண்டேன்.

அதாவது ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை கனவில் கண்டதாக கூறுகிறார்.

கவலைப்படாதே! பொறுமையுடன் இரு! உன் சகோதரர் விடுதலையாகிவிடுவார் என்று சொல்கிறீர்கள். காலையில் நான் எழுந்ததும் எனக்கு மிகுந்த மனநிம்மதி ஏற்பட்டது. மேலும் அல்லாஹ் ஓர் அற்புதத்தைக் காட்டுவான். இன்ஷாஅல்லாஹ் என் சகோதரர் விடுதலையாகி வந்துவிடுவார் என்று எண்ணினேன். ஆனால், இதற்கு மாற்றமாக சில நாட்களுக்குப் பிறகு எனது தாயார் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் அன்னாரை நகரத்தின் பெரிய மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டியதாயிற்று. அங்கு அன்னார் சேர்க்கப்பட்டார்கள். ஆதரவற்ற நிலையில் இருந்தேன். மிகவும் கவலையடைந்தேன். பிரச்சனைகள் தீவிரமடைந்து கொண்டே சென்றன. பிறகு நான் துஆ செய்துவிட்டு இரவில் தூங்கினேன்.

மீண்டும் அவர் என்னை கனவில் கண்டார். எழுந்து, கதவைத் திற என்று கனவில் நான் கூறினேன்.

அவர் கூறுகின்றார்: திடீரென விழிப்பு வந்தது. நான் கண்விழித்தேன். யாரோ வீட்டின் கதவைத் தட்டினார்கள். நான் சென்று கதவைத் திறந்தேன். அங்கே என் அண்ணன் நின்று கொண்டிருந்தார். போலீஸ் என்னை இன்று விடுதலை செய்துவிட்டனர் என்றார். இவ்வனைத்தும் அல்லாஹ்வின் அருளும் துஆவின் பரக்கத்தும் அற்புதமும் ஆகும். இது காலத்தின் கலீஃபாவுடனான தொடர்பினால் நிகழ்ந்த அற்புதமாகும். (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 27 மே 2022)

3. கேம்பியாவின் ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்:

உமர் ஸாஹிப் என்று ஒரு நண்பர் இருக்கின்றார். அவர் 2017 ஆம் ஆண்டில் குடும்பத்துடன் பைஅத் செய்தார். அவருடைய மனைவிக்கு கருப்பையில் புற்று நோய் ஏற்பட்டிருந்தது. ஏழு வருடங்களுக்கு முன் குழந்தை பிறந்தது. அதன் பிறகு புற்றுநோய் ஏற்பட்டது. இதற்கு சிகிச்சை இல்லை என்று மருத்துவர்கள் கூறினர். உனக்கு குழந்தை பிறப்பது இனி சாத்தியமே இல்லை என்றனர். அவரது மனைவி இதன் காரணமாக மிகுந்த கவலையில் இருந்தார். ஒன்று நோயால் அவதிப்பட்டார். அத்துடன் இனி குழந்தையும் பிறக்காது என்ற கவலை. வாழ்வா? சாவா? என்ற நிலையில் அவர் இருந்தார். வாழ்நாளை எண்ணிக்

கொண்டிருந்தார். சின்னஞ்சிறு குழந்தையும் இருக்கிறது. அதன் மகிழ்ச்சிகளை காண உயிருடன் இருப்போமா? இல்லையா? என்ற ஏக்கம்!

இந்நிலையில் அவர் கூறுகின்றார்: பைஅத் செய்த பின் அவரது மனைவி ஒரு லீஃப் லெட்டை எடுத்தார். அதில் என்னுடைய புகைப்படம் இருந்தது. அந்த படத்தை பார்த்ததும் என் மனதில் நிம்மதி ஏற்பட்டது. நான் துஆவும் செய்து வந்தேன். அல்லாஹ்விடம் மேன்மேலும் நிம்மதிக்காக வேண்டினேன். பிறகு அவர் எனக்கு கடிதம் எழுதினார். நோயை குறித்து எழுதியவுடன் பிள்ளைபேறு பெற தன் விருப்பத்தையும் தெரிவித்தார். அல்லாஹ்வின் அருளால் சிறிது நாட்களிலேயே அவர் கருவுற்றார். மருத்துவர்களும், செவிலியர்களும் பரிசோதனை செய்துவிட்டு மிகுந்த ஆச்சரியப்பட்டனர். நாங்கள் உங்களுக்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டோமே! இனி இந்தப் பெண்ணுக்கு குழந்தைப் பிறப்பது என்பது மருத்துவ ரீதியாக சாத்தியமற்றது என்று நாங்கள் நம்பிய ஒன்று; இப்போது நடந்திருக்காதே! உங்களுக்கு ஏற்பட்டிருந்த புற்று நோயும் குணமாகியிருக்கிறதே! நீங்கள் என்ன மருந்து சாப்பிட்டீர்கள்? என்று கேட்டனர்.

நான் காலத்தின் கலீஃபாவுக்கு துஆவுக்காக எழுதினேன். நானும் தொடர்ந்து துஆ செய்து வந்தேன். இது துஆவின் அருளாகும். இதுவே நான் எடுத்துக் கொண்ட சிகிச்சை. இதன் காரணமாக இறைவன் அருள்புரிந்தான் என்று அவர் கூறினார். (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 27 மே 2022)

4. மேற்கு வங்காளத்தின் மால்தா என்ற பகுதியைச் சேர்ந்த நமது முஅல்லிம் ஸாஹிப் இருக்கின்றார். அவருடைய சிறுநீரகங்கள் பழுதாகிவிட்டன. இது 2005 -ல் நடந்த சம்பவமாகும். மருத்துவர்கள் சிகிச்சை முயற்சி செய்தனர். எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. இனி ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிவிட்டனர். நான் 2005-ல் காதியானுக்கு சென்றிருந்தபோது அங்கு குடும்பத்துடன் என்னை சந்திக்க வந்திருந்தனர். அப்போது தன்னுடைய நோயை பற்றி என்னிடம் தெரிவித்தார். முஅல்லிம் ஸாஹிப் துஆ செய்யும்படி வேண்டினார். அதன் பின்னர் அவர் மீண்டும் பரிசோதனை செய்வதற்காக மருத்துவமனைக்குச் சென்றார். அசாதாரணமான முறையில் சிறுநீரகங்கள் சரியாக இருப்பதைப் பார்த்து மருத்துவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். அல்லாஹ்வின் அருளால் அவர் மிகவும் நலமாக இருக்கின்றார். சாத்தியமற்றதை சாத்தியமாக்க வல்லது துஆ! இது அல்லாஹ்வின் அருளாகும். (அல்ஃபஸ்ல், இன்டர்நேஷனல், 27 மே 2022)

5. மஹாராஷ்டிரா மாநிலம் சந்திரபூர் மாவட்டத்தின் முபல்லிஃக் இன்சார்ஜ் ஸாஹிப் எழுதுகிறார்: பிலார்பூர் ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு களங்கமற்ற தன்மை கொண்ட இளைஞர் முனவ்வர் அலி ஸாஹிப் இன்ஜினியர் ஆவார். வேலை தேடி பல கம்பெனிகளை அணுகினார். எங்குமே வெற்றி கிடைக்கவில்லை. அந்நாட்களில் ஹுஸுர் பைத்துல் ஃபுதூஹ் பள்ளவாசலை புதுப்பிக்க பொருள் தியாகம் செய்யும்படி அறிவிப்பு செய்தார்கள். அதற்காக அவர் ஒரு பெரிய தொகையை வாக்குறுதியாக கொடுத்தார். அவருக்கு அப்போது வரை வேலை ஏதும் கிடைக்கவில்லை. அத்துடன் அவர் ஹுஸுர் அவர்களுக்கு துஆவுக்காக எழுதி வந்தார். அல்லாஹ் நிச்சயமாக உதவி செய்வான் என்பதில் அவருக்கு திடமான உறுதி வந்தது. அவ்வாறே அல்லாஹ் அவருக்கு அருள் புரிந்தான். கத்தாரில் அவருக்கு வேலை கிடைத்துவிட்டது. அவர் எவ்வளவு தொகையை வாக்குறுதியாக அளித்தாரோ சரியாக அந்தத் தொகை அவருக்கு சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டது.

6. புர்கினோஃபாஸ் அமீர் ஸாஹிப் எழுதுகின்றார்கள். ஜயாலு அப்துர் ரஹ்மான் ஸாஹிப் புர்கினோஃபாஸ் ஜலஸா ஸாலானாவின் ஆஃபிஸர் ஆவார்கள். இந்த வருடம் ஹுஸுரை சந்தித்தார்கள். ஹுஸுரிடம் எங்களுடைய ஆண்டு மாநாடு நடக்கப்போகிறது. அங்கு பயங்கர வெப்பமாக உள்ளது. அதற்காக துஆ செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ஹுஸுர் அவர்கள், சரி! நீங்கள் என்ன எதிர்பார்க்கின்றீர்கள்? மழை பெய்ய வேண்டுமா? என்று கேட்டார்கள். ஆமாம்! ஹுஸுர்! என்றார். ஹுஸுரும் சரி என்றார்கள். ஆண்டு மாநாட்டின் முதல் நாள் 42 டிகிரி வெப்பம் இருந்தது. ஆனால், அஸருக்குப் பின் தட்பவெப்ப நிலை மாறியது. லேசான மழையும் பெய்தது. இரவு 11 மணிக்கு பிறகு மழை நின்றுவிட்டது.

காற்று வீசியதால் நனைந்த நிலம் காய்ந்தும் விட்டது. அதிகாலையில் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தஹஜ்ஜுத் தொழுகை நடைபெற்றது. நான் ஜமாஅத்திற்கு வந்து 20 வருடங்கள் ஆகின்றன. பழைய அஹ்மதிகளிடமும் கேட்டேன். ஒருபோதும் மாநாட்டின்போது மழை பெய்ததில்லை. இந்த மாதத்தில் இப்படி மழை பெய்வது அசாதாரண ஒரு சம்பவமாகும். ஆஃபீஸர் ஸாஹிப் ஹுஸுர் அவர்களை முன்னதாக சந்தித்து மழைக்காக துஆ செய்ய விண்ணப்பித்தது பற்றி அனைவரிடமும் தெரிவித்ததும் மாநாட்டின் சூழ்நிலை முற்றிலும் மாற்றமடைந்தது. அனைவருடைய மனதும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல், அஹ்மதிய்யத்தின் மீது அன்பு மற்றும் தூய்மை ஆகிய உணர்வால் நிறைந்துவிட்டது. தக்பீர் முழக்கத்தால் அந்த பகுதி வெகுநேரம் வரை எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

7. காங்கோ பராஸ்வீலின் பாய்ன்ட் நவார் என்ற பகுதியைச் சேர்ந்த முபல்லிஃக் எழுதுகிறார்: இங்கு 2015-ல் அஹ்மதிய்யா பிரச்சார நிலையம் அமையப் பெற்ற பின்னர் ஒரு நாள் பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு நண்பர் முஹம்மது இக்பால் என்பவரை சந்திக்க நேர்ந்தது. முதலில் அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் சந்தித்தார். ஃபோன் நம்பர் வாங்கினார். ஆனால், நான் அஹ்மதி என்று அவரிடம் சொன்ன உடன் அவரது நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டது. காலம் செல்ல செல்ல நான் அவரை நமது பிரச்சார நிலையத்திற்கு அழைக்கும் போதெல்லாம் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லிக் கொண்டே இருந்தார். 2017-ல் திடீரென்று அவருக்கு வேலை பறிபோய்விட்டது. மிகப் பெரிய தொகையும் மாட்டிக் கொண்டது. அத்துடன் அவரது பாஸ்போர்ட்டும் முடிவடைந்துவிட்டது. அவர் மிகவும் கவலைப்பட்டார். எல்லா இடங்களிலும் முயன்றும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. 2018 ஜனவரி மாதம் உச்சக்கட்ட நிலையில் ஒருநாள் அவரிடமிருந்து எனக்கு ஃபோன் வந்தது. நான் உங்களை சந்திக்க உங்கள் மிஷன் ஹவுஸுக்கு வருகின்றேன் என்றார். இங்கு வந்து தன் பிரச்சனையை சொன்னார். பாஸ்போர்ட் வேண்டுமென்றால் அஹ்மதிய்யா ஜமாஅத் தான் உங்களுக்கு உதவி செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். எனவே தனக்காக பாஸ்போர்ட்டிற்கான ஏற்பாடு செய்து தரும்படி விண்ணப்பித்தார். அதன்படி அவருக்காக ஆன்லைன் மூலம் பாஸ்போர்ட் விண்ணப்பிக்கப்பட்டது. சில நாட்களுக்குள் அவருக்கு பாஸ்போர்ட் கிடைத்துவிட்டது. பாஸ்போர்ட் கிடைத்ததும் அவருடைய குணத்தில் ஜமாஅத்திற்காக மிருதுவான தன்மை உருவானது. அவர் அடிக்கடி நமது மிஷன் ஹவுஸுக்கு வரத் தொடங்கினார். எங்களுடன் சேர்ந்து உணவும் அருந்தி வந்தார். 2018 காங்கோ ஆண்டு மாநாட்டிலும் கலந்து கொண்டார். அவருக்கு வேலை பறிபோய் இருந்ததுடன் மிகப் பெரியத் தொகையும் மாட்டிக் கொண்டது. அதனை பெறுவதற்கான எந்த வழிவகையும் தென்படவில்லை. இதே தடுமாற்றமான சூழ்நிலையில் 15 மாதங்கள் கழிந்துவிட்டன. அவருடைய பிரச்சனைகளோ நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தன. ஒருநாள் மிஷன் ஹவுஸில் மிகவும் சோர்வுடன் அமர்ந்திருந்தவர் உங்களுடைய கலீஃபா ஸாஹிபுக்கு எனக்காக துஆ செய்யும்படி கடிதம் எழுதுங்கள் என்று கேட்டுக் கொண்டார். மீண்டும்,மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். நான் கூறினேன்: உங்களுக்காக துஆ செய்ய ஹுஸுர் அவர்களிடத்தில் கடிதம் எழுதுவோம். ஆனால், ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அஹ்மதி ஆவதும் ஆகாமல் இருப்பதும் உங்கள்

விருப்பத்தைப் பொருத்தது. ஆனால், இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படுவது அல்லாஹ்வின் புறமிருந்து வழங்கப்படும் ஓர் அடையாளமாக இருக்கும். ஏனென்றால், உங்களது பணம் திரும்ப கிடைப்பதற்கான எந்த நம்பிக்கையும் உங்களுக்கு இல்லை. இந்த ஒரு வழியைத் தவிர. இதன்படி அன்று இரவே துஆவிற்காக எழுதி ஃபேக்ஸ் அனுப்பப்பட்டது. அல்லாஹ் விரைவில் தன் அருளை வழங்குவான் என்று எதிர்பார்த்திருந்தோம். இறைவன் மிகுந்த கண்ணியத்திற்குரியவனாவான். அவனுக்கு தன் கலீஃபாவிடம் எல்லை இல்லா அன்பு இருக்கிறது. இறைவன் அருள் புரிந்தான். இறுதியில் அவர் இரண்டு நாட்கள் கழித்து மிகவும் மகிழ்ச்சியுடன் நமது மிஷன் ஹவுஸ்க்கு வந்தார். கலீஃபா ஸாஹிபுக்கு நாம் இரவு ஃபேக்ஸ் அனுப்பியதன் பின்னர் அடுத்த நாள் எனது அலுவலகத்திலிருந்து அழைப்பு வந்தது. நீங்கள் வந்து உங்கள் வேலையில் சேர்ந்து கொள்ளுங்கள் என்று சொன்னது மட்டுமின்றி உங்கள் பணமும் திரும்ப தரப்படும் என்று நம்பிக்கையும் அளித்தனர் என்றார். நான் அல்ஹ்மதுலில்லாஹ் என்றேன். இப்போது அவர் அஹ்மதிய்யத்திற்கு மிகவும் நெருக்கமாக வந்துவிட்டார். அல்லாஹ் அவருக்கு நேர்வழிக்கான ஏற்பாட்டைச் செய்வானாக. ஆமீன்.

8. ஜெர்மனியிலிருந்து அப்ரார் அஹ்மது ஸாஹிப் எழுதுகிறார்: நான் ஜெர்மனிக்கு வந்து பார்கிங் (ஃபாஸ்ட் ஃபுட் ரெஸ்டாரென்ட்)-ல் வேலை பார்த்து வந்தேன். ஒருநாள் ஜமாஅத் பத்திரிகையில் பன்றி இறைச்சி மற்றும் மது பானங்கள் போன்றவற்றில் வேலை செய்பவர்களிடமிருந்து சந்தா வாங்கக் கூடாது என்று ஹுஸூர் கூறிய மேற்கோளை வாசித்தேன். அதை வாசித்த உடன் நான் திகைத்துப் போனேன். இரவு முழுவதும் நிம்மதி இழந்தவாறு நஃபில் தொழுகையில் கழித்தேன். இறைவா! நீ என் நிலைமையை நன்கறிவாய் என்று துஆ செய்தேன். அத்துடன் ஹுஸூர் அவர்களிடத்தில் துஆவிற்காகவும், கடிதங்கள் எழுதி வந்தேன். இந்த சின்ன ஊரில் எனக்கு யார் வேலை கொடுப்பார்கள்? என்று எண்ணினேன். ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களும் என்னைக் குறித்து பேச ஆரம்பித்தார்கள். இவர் நம்மிடம் வஸிய்யத்தைப் பற்றி பேசுகின்றார். இப்போது தன்னுடைய வஸிய்யத்தை எப்படி காப்பாற்ற போகிறார்? என்றனர். அப்போது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடமிருந்து கடிதம் வந்தது. அல்லாஹ் நிச்சயமாக அருளுக்குரிய வேலையை உங்களுக்கு வழங்குவான். அதிகமாக துஆ செய்யுங்கள் என்று எழுதியிருந்தார்கள். எனவே உடனே எழுந்தேன். வேலை செய்து வந்த இடத்தில் இன்று எனது கடைசி நாளாகும். இனி நான் வேலைக்கு வர மாட்டேன் என்று கூறி எனது ராஜினாமா கடிதம் கொடுத்தேன். அங்கிருந்தவர்கள் என்னை அச்சுறுத்தினர். பணம் கிடைக்காது மிகவும் சிரமம் ஏற்படும் என்றனர். ஆனால், நான் அங்கிருந்து ராஜினாமா செய்துவிட்டு வீட்டிற்கு திரும்பிவிட்டேன். வீட்டிற்கு வந்ததும் எனது லெட்டர் பாக்ஸை திறந்து பார்த்தேன். அதில் ஒரு தபால் வந்திருந்தது. நாளை முதல் வேலைக்கு வாருங்கள் என்ற அழைப்பு இருந்தது. முதல் நாள் வேலை போனது. அடுத்த நாளே புதிய வேலை கிடைத்துவிட்டதை எண்ணி இறைவனுக்கு நன்றி தெரிவித்து சிரம்பணிந்தேன். இப்போது அல்லாஹ் எனக்கு வாகனமும் தந்துவிட்டான். செகரட்டரி வஸாய என்ற அடிப்படையில் புதிய வஸிய்யத்திற்கான இலக்கையும் பூர்த்தி செய்வதற்கான நல்வாய்ப்பும் கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ்

மதிப்பிற்குரியவர்களே! இந்த சம்பவங்களை கேட்ட பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வரிகள் தான் நமது மனதுக்குள் எழுகின்றன:

இறைவன் தன் வல்லமையின் மூலம் உண்மையில் தன் இருப்பை வெளிப்படுத்துகின்றான். மறைவான அந்த இறைவனின் முகம் இதுவேயாகும்.

இதை நான் உறுதியாக நிறைவேற்றிய தீருவேன் என்று எதைக் குறித்து அவன் சொல்கின்றானோ அது நிச்சயம் நிறைவேறியே தீரும். இறைத் தன்மை இதுவேயாகும்.

சாத்தியமில்லாததைக் கூட இது சாத்தியமாக்கி விடுகின்றது. தத்துவவாதிகளே! துஆவின் சக்தியை சற்று சிந்தித்துப் பாருங்களேன்!

பெற்றோரை விட மேலாக நமக்காக வேதனையுடன் துஆ செய்கின்ற ஒருவரைக் கொண்ட ஜமாஅத் இருக்கின்றதென்றால் அது அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் ஒன்றுதான். இரவில் அனைவரும் தூங்கிவிடும்போது அவர் கண் விழித்திருக்கின்றார். உலகில் வாழும் அனைத்து மனிதர்களுக்காகவும் தன் இறைவனின் சந்நிதியில் மன்றாடுகின்றார். நம்மவர்கள் மட்டுமல்லாது அந்நியரும் கூட இதை உணராமல் இல்லை.

மதிப்பிற்குரியவர்களே! இப்போது நான் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லா) அவர்கள் துஆ செய்யுமாறு அறிவித்து, அன்னார் வழங்கிய அறிவுரைகளைக் கொண்ட சில மேற்கோள்களை எடுத்துரைக்கின்றேன்:

21 மே 2004 -ல் அவர்கள் ஆற்றிய குத்பா உரையில் இவ்வாறு கூறினார்கள்:

அந்த இறைவன் உண்மையான வாக்குறுதிகளின் இறைவன் ஆவான். இன்றும் அவன் தன் அன்பிற்குரிய மஸீஹின் அன்பிற்குரிய ஜமாஅத்தின் மீது தன் கரத்தை வைத்துள்ளான். அவன் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டான். அவன் எவ்வாறு முந்தைய கிலாஃபத்தின் காலகட்டங்களில் தன் வாக்குறுதிகளை பூர்த்தி செய்து வந்தானோ அவ்வாறே இன்றும் தன் மஸீஹிடம் செய்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றான். இதற்கு முன்னர் எவ்வாறு தன் கருணை மற்றும் அருட்களை வழங்கிக் கொண்டிருந்தானோ அவ்வாறு இன்றும் தன் அருட்களை பொழிந்து கொண்டே இருக்கின்றான். இன்ஷாஅல்லாஹ். இன்னும் பொழிந்து கொண்டே இருப்பான்.

ஆகவே, துஆ செய்த வண்ணம் அவன் பால் குனிந்தவர்களாக அவனது அருட்களை வேண்டியவர்களாக எப்போதும் அவனது சன்னிதியில் சிரம்பணிந்தவர்களாக இருங்கள். எப்போதும் இந்த உறுதி வாய்ந்த பிணைப்பை பற்றி பிடித்திருங்கள். இவ்வாறு இருந்தால் யாராலும் உங்களது முடியைக் கூட பறிக்க முடியாது. அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நற்பேறை நல்குவானாக. (21 மே. 2004 குத்பா ஜுமுஆ)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறுகின்றார்கள்:

எங்கெல்லாம் அஹ்மதிகள் அநீதிக்கு இலக்காகின்றார்களோ அங்குள்ள அஹ்மதிகள் தெரிந்து கொள்ளுங்கள். இது ஷைத்தானுடன் நடக்கும் இறுதிப் போராகும். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக நீங்கள் இந்தப் படையில் இணைந்துள்ளீர்கள். இந்தப் படையை இக்காலத்தின் இமாம் உருவாக்கியுள்ளார்கள். எனவே உங்கள் நம்பிக்கைகளை உறுதியாக்கியவாறு அல்லாஹ்விடம் உறுதித் தன்மை மற்றும் நிலையான உறுதிப்பாட்டை வேண்டியவாறு எப்போதும், எந்நேரமும் பொறுமையையும், மனதைரியத்தையும் காட்டுங்கள். அல்லாஹ்வின் முன் இன்னும் அதிகமாக குனியுங்கள். இறுதி வெற்றியானது இன்ஷா அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய ஜமாஅத்துக்கே உரியது. அந்த ஷய்த்தானிய தீய சக்திகளை தோல்வியுறச் செய்வதற்காகவே இறைவன் இந்த ஜமாஅத்தை உருவாக்கியுள்ளான் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால், ஒன்றை நாம் எப்போதும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். வெளிப்புற ஷய்த்தானை தோற்கடிப்பதற்கு நாம் உட்புற ஷய்த்தானை வீழ்த்தியாக வேண்டும். ஏனெனில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் நாம் சேர்ந்ததன் காரணமாக நமது வெற்றி

வெளிப்படையான காரணிகளை வைத்து பெறப்படுவதல்ல. மாறாக, துஆவினால் பெறப்படுவதாகும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நாம் நம்மை இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப வழி நடப்பவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்காக நஃப்ஸின் ஜிஹாதும் அவசியமாகும். (ஜுமுஆ பேருரை, 06, 2009)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனும் அவனது அடியாரும் ஒருவொருக்கொருவர் ஐக்கியமாகிவிடும் அளவிற்கு நெருங்கிவிட்டால் அந்நிலையில் செய்யப்படும் துஆவானது பிறரால் கற்பனைக் கூட செய்ய முடியாத வியக்க வைக்கும் அற்புதங்களை எல்லாம் காட்டுகின்றது. ஆகவே இந்நிலையை ஏற்படுத்துவது அவசியமாகும். இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதாகும். பொதுவாக உலகில் நாம் இதை பார்க்க முடிகிறது. அதாவது, துன்பத்தின் போது தூய மனதுடன் ஒருவர் அல்லாஹ்வின் முன் குனிந்தால் உலகின் அனைத்து விஷயங்களிலிருந்தும் தொடர்பு துண்டித்து இருப்பதால் உலகின் பால் எந்த கவனமும் இருப்பதில்லை. கஷ்டத்தில் மூழ்கியிருப்பார். சிக்கல்களில் அகப்பட்டு இருப்பார். இந்த நிலையில் அல்லாஹ்வின் முன் மட்டுமே குனிந்தவாறு இருப்பார். அப்போது அல்லாஹ் மட்டுமே முன்னால் இருப்பான். கஷ்டங்கள் அவனிடத்தில் ஒரு குறிப்பிட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கும். எனவே அப்படிப்பட்ட மக்கள் பெரும்பாலும் துஆ செய்யும்போது அவர்கள் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதை காண்கின்றனர்.

ஆகவே, மனிதன் எந்நேரமும் இறைவனின் கருணையை முன்னிறுத்தியவாறு அவனுக்கு மிக அருகில் நெருங்கிச் செல்ல முயற்சி செய்து வந்தால், ஒரு வேலையை முடித்த பின்னர் ஒரு துன்பம் அகன்ற பின்னர் அவனுக்கு அருகில் செல்கின்ற முயற்சியை கைவிடாமல் இருந்தால் நிரந்தரமாக அல்லாஹ்விடம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற காட்சிகளை கண்டு கொண்டே இருப்பான். ஆகவே அல்லாஹ்வின் அருட்கொடைகள் எப்போதும் நம் மீது பொழிந்து கொண்டே இருப்பதற்கு எந்நேரமும் இறைவனுக்கு அருகிலேயே இருந்து வர முயற்சி செய்து கொண்டிருப்பது முக்கியமானதாகும். அப்படிப்பட்ட நிலையில் அந்த அடியார் துஆ செய்தால், அனைத்துவித உலகியல் காரணிகளையும் உலகில் உள்ள அனைத்து பொருட்களையும் அவரது தேவைகளை நிறைவேற்றுகின்ற பணியில் இயக்கிவிடுகின்றான். வானம் மற்றும் பூமி ஆகியவற்றின் அனைத்து வழிவகைகளையும் தன் அடியாருக்கு உதவி செய்வதற்காக இயக்கிவிடுகின்றான். சில நேரம் அடியாரின் துஆவை ஏற்றுக் கொள்வதற்காக மேகங்களிலிந்து மழையை பொழியச் செய்கின்றான். சில நேரம் எதிரிக்காக தன் அடியார் செய்த சாபத்தை ஏற்றுக் கொண்டு பஞ்சம் மற்றும் சோதனைகளை உருவாக்குகின்றான். துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக நம்பிக்கை கொள்பவரின் உள்ளத்தில் ஏற்பட வேண்டிய அந்த குறிப்பிட்ட நிலைதான் ஒவ்வோர் அஹ்மதியின் உள்ளத்திலும் ஏற்பட வேண்டும். (ஜுமுஆ பேருரை, 22 டிசம்பர் 2006)

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) கூறுகின்றார்கள்:

இன்று நாம் நிலைத்திருக்க வேண்டுமென்பதற்காகவோ, நம் குடும்பம் நிலைத்திருக்க வேண்டுமென்பதற்காகவோ அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவோ மட்டும் துஆவின் பால் கவனம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டாம். மாறாக, முஸ்லிம் சமுதாயத்திற்காகவும், அதற்கும் மேலாக முழு மனித குலத்தின் நல்வாழ்வுக்காகவும், துஆவின் பால் கவனம் செலுத்த வேண்டும். இன்று இதன் தேவை மிக அதிகமாக உள்ளது. ஆகவே ஒவ்வோர் அஹ்மதியும் இந்நாட்களில் (இந்நாட்களில் என்று நான் கூறியது எப்போதும் என்ற பொருளில்) இன்றைய நாட்களில் குறிப்பாக நிலைமை வேகமாக மோசமாகிக் கொண்டிருக்கின்றது. மிக அதிகமாக நாம் இறைவன் முன்னிலையில் குனிந்து துஆக்கள் செய்ய வேண்டும். நிம்மதி இழந்தவரைப் போன்று அவனை கூப்பிடுங்கள். வேதனையுடன் அவனை அழையுங்கள். இன்று முஸ்லிம் சமுதாயம் கடந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் மேலும் முஸ்லிம் நாடுகள் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கெல்லாம் துஆவைத் தவிர வேறு தீர்வு கிடையாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது துஆ எனும் இந்த பாதுகாப்பு அரணுக்குள் இன்று அஹ்மதிகளைத் தவிர வேறு யாருமில்லை. முஸ்லிம் சமுதாயத்திற்கு அல்லாஹ் அக மற்றும் புற குழப்பங்களிலிருந்து பாதுகாப்பு வழங்க வேண்டி துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம் சமுதாயத்திற்கு இன்றிலிருந்து 1400 வருடங்களுக்குப் முன் வழங்கிய தூதுச் செய்தியை புரிந்து கொள்ளும் நற்பேறை வழங்குவானாக. அல்லாஹ் இந்த உலகத்திலிருந்து அநீதியை அழித்துவிடுவதற்காகவும் துஆ செய்யுங்கள். மனிதன் தன்னை படைத்த இறைவன் பால் திரும்பிச் செல்வதற்காகவும் துஆ செய்யுங்கள். அந்த இறைவனை அடையாளம் கண்டு தனது பிடிவாதம் மற்றும் அகந்தை எனும் வலையை விட்டு வெளியேற துஆ செய்யுங்கள். இறைவனின் கோபத்தையும் அதிருப்தியையும் அழைக்கக் கூடாது. மாறாக, அவன் பக்கம் குனிய வேண்டும். அல்லாஹ்வின் இந்த தூதுச் செய்தியை புரிந்து கொள்ள வேண்டும். நான் உங்கள் துஆக்களை ஏற்றுக் கொள்வதற்காக நீங்கள் என் பக்கம் வாருங்கள். தூய மனதுடன் என்னை அழையுங்கள். உண்மையில் தற்காலிகமானதும், சில நாட்களுக்கே உரியதுமாகிய இந்த உலக வாழ்க்கையே அனைத்தும் என்று நீங்கள் கருதிவிடாதீர்கள்.

ஆகவே எல்லாமென நீங்கள் கருதியுள்ள இந்த உலகத்தை உங்களுக்காக அமைதிப் பூங்காவாக ஆக்குகிறேன் என்ற இறைவனின் செய்தியை புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு நீங்கள் உங்களது நல்ல செயல்களின் காரணமாக தனது நிரந்தர சொர்க்கத்திற்கு வாரிசாகுங்கள் என்ற இறைவனின் தூதுச் செய்தியை புரிந்து கொள்ள வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று, இந்த உலகத்திற்காக மனித இனத்திற்காக துஆ செய்யுங்கள். உலகம் தன் பிடிவாதம் மற்றும் அகந்தையின் காரணமாக மிக வேகமாக அழிவின் ஆழ்குழியின் பால் சென்றுக் கொண்டிருக்கின்றது. தன்னை படைத்த இறைவனை மறந்துவிட்டது. இதன் விளைவாக அல்லாஹ்வின் கோபத்தை அழைத்துக் கொண்டிருக்கின்றது. அநீதி எந்தளவுக்கு அதிகரித்துவிட்டதென்றால் அதற்கே நீதி என்று பெயர் சூட்டப்படுகின்றது. அல்லாஹ்வே! இந்த மக்கள் மீது கருணை புரிவாயாக!

முன்னரும் நான் கூறியிருக்கின்றேன். உங்களுக்காகவும், ஜமாஅத்திற்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் மற்றும் பகைவர்களை தோல்வியுறச் செய்வானாக! ஆமீன். எப்போதுமே இறைவனின் ஜமாஅத்துடன் நடந்து வருவதைப் போன்று வழக்கமான எதிர்ப்புகளை சந்தித்துதான் ஆக வேண்டும். இது இவ்வாறு நடந்து கொண்டேதான் இருக்கும். இவ்வாறு தான் முன்னேற்றங்களும் ஏற்படுகின்றன. பிறரிடம் ஆதாரம் இல்லை என்றால் அவர்கள் கடுமைகளை காட்டுவார்கள். இது உண்மைக்கான ஓர் ஆதாரமாகும். ஆகவே, இந்த எதிர்ப்புகளைப் பார்த்து அஹ்மதிகள் பயப்படுவதுமில்லை. இனி பயப்படபோவதுமில்லை. இன்ஷா அல்லாஹ்.

இதுவே ஈமானில் முன்னேற்றமும் ஜமாஅத்தின் வளர்ச்சிக்கு காரணமாகவும் அமைகிறது. இந்த எதிர்ப்புகள் எப்போதும் உரமாக வேலை செய்கின்றன. ஆனால், இந்த எதிர்ப்பின் காரணமாக எதிரிகளுக்கு ஏற்படப் போகின்ற தீய விளைவுகளை பார்க்கின்றபோது மனித நேயத்தின் அடிப்படையில் நாம் அப்படிப்பட்ட மக்களுக்காகவும் துஆ செய்கின்றோம். அல்லாஹ்

அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் தங்கள் முடிவை எட்டுவதற்கு முன்னதாக அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்பட்டவர்களாக அதிலிருந்து பாதுகாப்பாக இருக்கட்டுமாக. நமது குறைகள் மற்றும் பிழைகளின் காரணமாக நமக்காக நிர்ணயிக்கப்பட்ட அல்லாஹ்வின் அருட்களிலிருந்து நாம் பேரிழந்தவர்களாக ஆகிவிடக் கூடாது. இதற்காகவும் துஆ செய்து வாருங்கள். எதிரியின் ஒவ்வொரு தீங்கும் ஒவ்வொரு முயற்சியும் நமது ஈமானில் உறுதிப்பாடு மற்றும் நன்மையை கொண்டு வருவதற்காக அமையட்டுமாக. நம்மில் ஒவ்வொருவரும் உறுதியைக் காட்டுபவராக இருக்க வேண்டும். நமது நல்ல விருப்பங்கள் யாவும் எப்போதும் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்கட்டும். இதன் காரணமாக நாம் அல்லாஹ்வின் அருளைப் பெறக்கூடியவர்களாக இருப்போம். நமக்கு தெரிந்த அல்லது தெரியாத இறைவனின் நல்ல பண்புகளின் பாதுகாப்பின் கீழ் அல்லாஹ் நம்மை வைத்தருளச் செய்வானாக. தன்னுடைய படைப்பின் ஒவ்வொரு தீமையிலிருந்தும் நம்மை பாதுகாப்பானாக. ஆமீன். (ஜுமுஆ பேருரை 11, ஆகஸ்ட் 2006)

* * * * *

## 2-ம் பக்கத்தொடர்ச்சி...

அழிந்து விட்டாலும் அழிந்து போகட்டும்;அதனால் எந்த கவலையுமில்லை என்பது ஒருபோதும் இறைவனின் எண்ணமாக இருக்கவில்லை.

(ஷஹாதத்துல் குர்ஆன். ரூஹானீ கஸாயீன் தொகுதி 6. பக்கம் 353)

ஏற்கனவே கூறப்பட்டது போன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தில் 115 ஆண்டுகளாக கிலாஃபத் நிலைபெற்றுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த கிலாஃபத்துடன், மேலும் எந்த ஜமாஅத்துடன் இணைந்திருக்கும்படி வலியுறுத்திக் கூறியிருந்தார்களோ அது இந்தக் கிலாஃபத்தும், இந்த ஜமாஅத்துமே ஆகும். அதிலிந்து வெளியில் இருப்பது அறிவீனமான மரணம் ஆகும். முஸ்லிம்களுக்கு இந்த ஹதீஸ் மிகவும் சிந்திக்கத்தக்கதாகும். அதில் அந்த ஜமாஅத்துடன் இணைந்து இருந்து முஸ்லிம்கள் தங்களது வாழ்க்கையை கழிக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். முழு உலகிலும் ஜமாஅத் என்று கூறுவதற்கு தகுதி படைத்த ஒரே ஜமாஅத் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே ஆகும். எனவே முஸ்லிம்கள் இந்த ஜமாஅத்துடன் இணைந்திட வேண்டும். மேலும் ஜமாஅத்திலிருந்து விலகிச் சென்ற அந்த ஆட்டைப் போன்று வாழ்க்கையை கழிக்கக் கூடாது. அதாவது, மந்தையிலிருந்து விலகிச் சென்ற மற்றும் எந்த மேய்ப்பரும் இல்லாத ஓர் ஆடு எவ்வாறு எல்லா நேரமும் ஆபத்தில் இருக்குமோ அது போன்றதே ஜமாஅத்திலிருந்து விலகி இருக்கும் நபரின் உதாரணம் ஆகும். ஜமாஅத்துடன் இணைந்திருப்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் அவசியமானது என்று கூறியுள்ளார்கள். அதுதொடர்பாக ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது:

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ :
سَمِعْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ :
مَنْ خَلَعَ يَدًا مِنْ طَاعَةٍ لَقِيَ اللهَ يَوْمَ الْقِيَامَةِ
وَلَا حُجَّةَ لَهُ ، وَمَنْ مَاتَ وَلَيْسَ فِيْ عُنُقِهِ بَيْعَةٌ
مَاتَ مِيْتَةً جَاهِلِيَّةً ، وَفِيْ رِوَايَةٍ : مَنْ مَاتَ
وَهُوَ مُفَارِقٌ لِلْجَمَاعَةِ فَإِنَّهُ يَمُوْتُ مِيْتَةً جَاهِلِيَّةً

பொருள்: ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: எவர் அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதிலிருந்து தனது கரத்தை விலக்கிக் கொண்டாரோ அவர் (கியாமத் நாளன்று) அல்லாஹ்வை இந்த நிலையில் சந்திப்பார். அதாவது, அந்நிலையில் அவரிடம் அதற்கான எந்த சான்றும் இருக்காது. எந்த காரணமும் இருக்காது. எந்த நபர் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்யாத நிலையில் மரணிப்பாரோ அவர் அறிவீனமான மற்றும் வழிகேடான மரணத்தை அடைவார். மேலும், எவர் ஜமாஅத்திலிருந்து விலகியிருந்த நிலையில் மரணிப்பாரோ அவரும் என்று மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

காலத்தின் இமாமிடம் பைஅத் செய்யாமல் இருப்பதும், ஜமாஅத்திலிருந்து விலகியிருப்பதும் இரண்டுமே உண்மையில் ஒரே விஷயமே ஆகும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رضي الله عنه عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ :
مَنْ رَاٰى مِنْ اَمِيْرِهٖ شَيْئًا يَكْرَهُهُ فَلْيَصْبِرْ عَلَيْهِ فَإِنَّهُ مَنْ فَارَقَ
الْجَمَاعَةَ شِبْرًا فَيَمُوْتُ مِيْتَةً جَاهِلِيَّةً

பொருள்: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எந்த நபர் தனது தலைவர் அல்லது அமீரிடம் தான் விரும்பாத விஷயத்தை பார்ப்பாரோ அவர் பொறுமையை மேற்கொள்ளட்டும். ஏனெனில், எந்த நபர் ஜமாஅத்திலிருந்து ஒரு அங்குலம் கூட விலகிச் செல்வாரோ அவர் அறிவீனமான மரணத்தை அடைவார்.

எனவே இமாமுடன் இணைந்து இருப்பதற்கும், ஜமாஅத்துடன் இணைந்து இருப்பதற்கும் எந்த அளவிற்கு நமது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள் என்று மேற்கண்ட ஹதீஸ்களிலிருந்து தெரிய வருகிறது எந்த அளவிற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது என்றால், உங்களுடன் அநீதியுடன் நடந்து கொள்ளப்பட்டாலோ அல்லது வரம்பு மீறப்பட்டாலோ அந்நிலையிலும் ஜமாஅத்துடன் இணைந்திருக்க வேண்டும். மேலும் ஜமாஅத்தை விட்டு விலகி தனித்திருக்கக் கூடாது.

அஹ்மதிய்யா கிலாஃபத்துடனுடம், அஹ்மதிய்யா ஜமாஅத்துடனும் நமது முஸ்லிம் சகோதரர்கள் இணைந்து தங்களுடைய மறுமையை சீர்படுத்திக் கொள்ளக்கூடியவர்களாக ஆகுவதற்கு அல்லாஹ் அவர்களுக்கு நற்பேறு வழங்குவானாக. ஆமீன். எந்த அஹ்மதிகள் அதிருப்தி கொண்டு ஜமாஅத் அமைப்பிலிருந்து விலகிச் செல்கின்றனரோ அந்த அஹ்மதிகளுக்கு இந்த ஹதீஸில் படிப்பினை உள்ளது. அத்தகைய நபர்கள் தமது இம்மை மற்றும் மறுமையை வீணாக்கிக் கொள்கின்றனர். அல்லாஹ் எல்லா நிலையிலும் ஜமாஅத் அமைப்புடன் இணைந்து இருப்பதற்கும் கிலாஃபத்திற்கு உள்ளத்தாலும், உயிராலும் கட்டுப்படுவதற்கும் நமக்கு நற்பேறு வழங்குவானாக. ஆமீன்.

(மன்ஸூர் அஹ்மத் மஸ்ரூர்)

* * * * *

## 21-ம் பக்கத்தொடர்ச்சி...

அரணிலிருந்து பயன் பெறுவதற்காக நாம் அனைவரும் தத்தமது இடங்களில் சிறிய சிறிய அமைதியின் ஊஞ்சலை ஏற்படுத்த வேண்டும். ஹுஸூர் அவர்கள் தன்னுடைய குத்பாக்களிலும், உரைகளிலும் நமக்கு தனிப்பட்ட ரீதியிலும் ஒட்டுமொத்தமாகவும் அல்லாஹ்வினுடைய கடமைகளை செலுத்துவதின் பக்கமும், அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கான உரிமைகளை செலுத்துவது இறைவன் மீது நம்பிக்கை கொள்வது, துஆவின் பக்கம் சிறப்பான கவனம் செலுத்துவது, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது தனக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது, தன்னுடைய வீடுகளில் நல்ல முறையில் நடந்து கொள்வது எதிர்காலத்தில் வரக்கூடிய நம்முடைய சந்ததிகளுக்கு சிறந்த முறையில் தர்பிய்யத் வழங்கியவாறு ஒவ்வொரு நற்செயல்களை செய்ய வேண்டும் என்பதன் பக்கமும் மீண்டும், மீண்டும் கவனமூட்டுகின்றார்கள். நாம் அனைவரும் உண்மையான எண்ணத்துடன் இந்த அறிவுரைகளின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்தால் எல்லாம் வல்ல அல்லாஹ் நிச்சயமாக நம்முடைய முயற்சிகளின் மீது அன்பின் பார்வையை செலுத்தியவாறு நமக்கு அதன்படி செயல்படுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவான். மேலும் நாம் அனைவரும் தத்தமது வட்டத்திற்குள் தத்தமது குழுமத்தில் உண்மையான அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான தூதுவராக ஆகிவிடுவோம். எந்த சமூகத்தில் ஒரு தனி மனிதனின் அதாவது தன்னுடைய பொறுப்புகளை அறிந்து புரிந்து உயரிய நற்பண்புளை மேற்கொண்டவாறு அடித்தளம் இடப்படுகிறதோ அந்த சமூகம் நற்பண்புகளின் மேன்மையை அடைந்தவாறு உண்மையான புரட்சிக்கான பாசறையாக திகழும். அந்த சமூகம் சுயமே பாதுகாப்பிற்கான அரணாக ஆகிவிடுகிறது. அதில் வசிக்கின்ற ஒவ்வொரு நபரும் கொடிய விலங்குகளிலிருந்து பாதுகாப்பாக கருதப்படுவார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு என்றும் அழியாத கிலாஃபத்தின் அருளுக்கு நன்றி செலுத்துவதற்கும் காலத்தின் கலீஃபாவிற்கு உண்மையான முறையில் கட்டுப்படுபவர்களாக திகழ்வதற்கும் நற்பேறை வழங்குவானாக. ஆமீன்.

கிலாஃபத்திற்காக நம்முடைய உயிர் அர்ப்பணம் ஆகட்டும்! இது ஆன்மிக நோய்களுக்கான மருந்தாக உள்ளது.

உள்ளத்தின் இருள் இதன் மூலம் அகன்றுவிட்டது. இதுவே இருள்களை அகற்றுவதில் நேர்வழிக்கான விளக்கமாக உள்ளது.

(கிலாஃபத்) அமைதி, ஈமான் மற்றும் நம்பிக்கையின் அரண் ஆகும். பாதுகாப்பிற்கான வேலி, உறுதிவாய்ந்த கயிறாகும்.

தமிழாக்கம் :
மவ்லவி அபுல்ஹஸன் ஆபித்

* * * * *

## கிலாஃபத் பாதுகாப்பிற்கான அரண்

(மவ்லவி கே. தாரீக் அஹ்மத், சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத், இன்சார்ஜ் நூருல் இஸ்லாம் காதியான்)

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي جَاعِلٌ فِي الْأَرْضِ خَلِيفَةً قَالُوا أَتَجْعَلُ فِيهَا مَنْ يُفْسِدُ فِيهَا وَيَسْفِكُ الدِّمَاءَ وَنَحْنُ نُسَبِّحُ بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ قَالَ إِنِّي أَعْلَمُ مَا لَا تَعْلَمُونَ

பொருள்: மேலும் உம் இறைவன் வானவர்களிடம், நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன் என்று கூறிய ( அந்த நேரத்தை மனிதனே! நீ நினைத்துப் பார். அப்)போது, அதில் குழப்பம் செய்து இரத்தம் சிந்தக்கூடியவர்களையும் படைக்கப்போகிறாயா? நாங்கள் உன்னைப் புகழ்ந்து உன் தூய்மையை(யும்) எடுத்துரைக்கின்றோம். மேலும் உமது எல்லா மேன்மைகளையும் ஒப்புக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறினார்கள். (அதற்கு அல்லாஹ்வாகிய) அவன் நீங்கள் அறியாததை நிச்சயமாக நான் அறிவேன் என்று கூறினான். (திருக்குர்ஆன் 2: 31)

உண்மையான உள்ளத்துடன் என் பக்கம் வாருங்கள். அதில்தான் நன்மை உள்ளது.

அனைத்து பக்கமும் கொடிய விலங்குகள் இருக்கின்றன. நானே பாதுகாப்பிற்கான அரண் ஆவேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் இக்காலத்தின் உறுதிவாய்ந்த கோட்டையாக இருக்கின்றேன். எனக்குள்ளே நுழைகின்றவர் திருடர்களிலிருந்தும் கொள்ளைக் காரர்களிடமிருந்தும் கொடிய விலங்குகளிடமிருந்தும் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்கிறார். ஆனால், எனது சுவர்களிலிருந்து விலகியிருக்க விரும்புகின்றவர்களுக்கு எல்லா திசைகளில் இருந்தும் மரணம் காத்துக் கொண்டிருக்கின்றது. உயிரற்ற அவரது சடலம் கூட நிம்மதியாக இருக்க முடியாது. (இஸ்லாத்தின் வெற்றி, பக்கம் 56)

எனது கட்டுரையின் தலைப்பு கிலாஃபத் பாதுகாப்பிற்கான அரண் என்பதாகும்.

ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் ஆரம்ப காலகட்ட கிலாஃபத்தில் உண்மையான படைப்பாளனாகிய இறைவனுக்கும் வானவர்களுக்கும் இடையில் நடந்த இந்த உரையாடலானது ஒரு விஷயத்தை மிகவும் தெளிவாக்குகின்றது. அது கலீஃபா போன்ற அமைதி நிறைந்த மனிதருக்கு எதிராக இவ்வாறான கொலை செய்தல், இரத்தம் சிந்துதல் ஆகிய குழப்பத்தின் மேகம் எந்த அளவிற்கு சூழ்ந்து விட்டது என்றால், வானவர்களும் அதன் உண்மை நிலையை புரியவில்லை. இந்த அவமரியாதையின் புயலை உருவாக்கியவன் யார்? மேலும் இந்த கொடுமை மற்றும் அநீதியிலிருந்து உலகை காப்பாற்றக்கூடிய அந்த பாதுகாப்பிற்கான அரண் எது? "நிச்சயமாக நீங்கள் அறியாததை நான் அறிவேன்" என்ற இதற்கான அல்லாஹ்வின் சுருக்கமான இந்த பதிலானது வானவர்களை மவுனமாக்கிவிட்டது.

உலக வரலாறு இன்றும் இதற்கு சாட்சி பகர்கின்றது. அதாவது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நீதியானது கிலாஃபத் பாதுகாப்பிற்கான அரண் என்ற கருத்தை தன்னுடைய வல்லமை மிக்க வெற்றியின் அற்புதம் மற்றும் வியப்பிற்குள்ளாக்கும் காட்சிகளின் மூலம் எவ்வாறு மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி விட்டது என்றால், அதன் பிறகு ஜின்கள் என்ன! மனிதர்கள் என்ன! வானவர்கள் என்ன! அனைவரும் தம்முடைய குறை மதியை ஒப்புக் கொண்டவாறு சிரம் பணிய வேண்டியது ஆயிற்று. இந்த தலைப்பானது ஒரு தொன்மையான கதை அல்ல. மாறாக, என்றென்றும் ஓடிக் கொண்டிருக்கின்ற கரையே இல்லாத ஒரு நீரோட்டம் போன்றதாகும். அல்ஹம்துலில்லாஹ். நாம் எப்படிப்பட்ட அந்த நற்பேறு பெற்ற ஜமாஅத்தை சார்ந்தவர்களாக இருக்கின்றோம் என்றால், கிலாஃபத்தின் அருட்கள் மற்றும் அதன் நன்மைகள் ஆகியவை கிலாஃபத் பாதுகாப்பிற்கான அரணாக திகழ்கிறது என்பதற்கு ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவங்களை கண்ணால் பார்த்த சாட்சிகளாக இருக்கின்றோம். மேலும், ஒவ்வொரு நொடியும் அதன் அடையாளங்களை நாம் பார்த்துக் கொண்டே இருக்கின்றோம். எண்ணிலடங்கா மற்றும் எண்ணற்ற அவனுடைய கருணைகள் நம் மீது உள்ளன. அதை எண்ணக் கூடிய எந்த ஒரு நாவும் இல்லை.

கிலாஃபத் என்ற அமைப்பு மிகவும் ஓர் அருளுக்குரிய அமைப்பாகும். அதன் மூலம் நபித்துவ சூரியன் வெளிப்படையாக மறையும் போது எல்லாம் வல்ல அல்லாஹ் நபித்துவ சந்திரனை உதிக்கச் செய்கின்றான். மேலும் ஒரு நபியின் மரணத்திற்குப் பிறகு புதிதாக அதிகப்படியான ஜமாஅத்தின் மீது ஒரு கஷ்டமான சுமையின் வடிவில் ஏற்படுகின்ற அந்த அதிர்ச்சி மற்றும் திடீர் அச்சத்தினால் ஏற்படுகின்ற தாக்கத்திலிருந்தும் அது பாதுகாக்கின்றது. கிலாஃபத் அமைப்பு எப்படிப்பட்ட அருளுக்குரிய விண்ணின் வழிகாட்டுதலின் அடிப்படையில் நிறுவப்பட்ட அமைப்பாகும் என்றால் எல்லாம் வல்ல அல்லாஹ் மூஃமின்களின் ஜமாஅத்திற்கு அவர்களின் ஆன்மிக வாழ்வில் முன்னேற்றம் மற்றும் அதை நிலைபெறச் செய்வதற்காக வழங்கியதாகும். இது ஈமான் மற்றும் நற்செயல்களின் அடிப்படை நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு மகத்துவமான அருட்கொடையாகும். இறைவனால் வழங்கப்பட்ட இந்த நன்கொடையின் தகுதியானது அல்லாஹ்வின் ஒரு கயிறை போன்றதாகும். இறைவனின் இந்த கயிற்றை உறுதியாக பற்றி பிடிப்பதில் தான் மூஃமின்களின் ஜமாஅத்தினர்களுக்கு அவர்களின் ஈமானின் அங்கீகாரமும் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான ஆன்மிக முன்னேற்றத்திற்கான உத்தரவாதமும் இருக்கின்றது.

இன்று நாம் பார்க்கின்றோம். உலகை அபாயங்கள் மற்றும் துன்பங்கள் சூழ்ந்துள்ளன. தற்போதைய நிலையை அன்றே கோடிட்டு காட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வேதனை நிறைந்த சொற்களில் வெளிப்படுத்தி உள்ளார்கள்:

ஐரோப்பாவே! நீயும் அமைதியில் இல்லை. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை! மேலும் தீவுகளில் வசிக்கின்றவர்களே! எந்த ஒரு செயற்கை இறைவனாலும் உங்களுக்கு உதவி செய்ய முடியாது. நான் நகரங்கள் வீழ்ந்து கொண்டிருப்பதைக் காண்கிறேன். மக்கள் வசிக்கின்ற பகுதியை பாழடைந்த இடமாக காண்கிறேன். அந்த ஏக இறைவன் ஒரு காலகட்டம் வரை அமைதியாக இருந்தான். மேலும் அவனுடைய கண்களுக்கு முன்னால் அருவருப்பான விஷயங்கள் நடந்தன. ஆயினும் அவன் மௌனமாக இருந்தான். ஆனால் தற்போது அவன் தன்னுடைய அச்சத்திற்குரிய முகத்தை காண்பிப்பான். காதுள்ளவர்களே! இதை கேளுங்கள்! அந்த நேரம் மிக தொலைவில் இல்லை. நான் இறைவனுடைய அமானிதத்தின் கீழ் அனைவரையும் ஒன்றுசேர்ப்பதற்கு முயற்சி செய்தேன். ஆனால், எழுதப்பட்ட இறை நியதி பூர்த்தியாக வேண்டும் என்பதும் அவசியமாகும்.

நான் உண்மையையே கூறுகின்றேன். இந்த நாட்டிற்கான தீய நேரம் மிகவும் அருகில் வந்து கொண்டே இருக்கின்றது. நூஹின் கால கட்டம் உங்கள் கண்களுக்கு முன்னால் வந்து நிற்கும். லூத்தின் காலத்தில் நடந்த அந்த சம்பவத்தை நீங்கள் சுயமே உங்கள் கண்ணால் காண்பீர்கள். ஆனால், இறைவன் தண்டிப்பதில் பொறுமையை மேற்கொள்கின்றான். உங்கள் மீது கருணை காட்டப்பட வேண்டும் என்றால் நீங்கள் தவ்பா செய்யுங்கள். எவர் இறைவனை விட்டு விடுவாரோ அவர் ஒரு புழுவைப் போன்றவர் ஆவார். மனிதர் அல்ல. மேலும் எவர் அந்த இறைவனுக்கு அஞ்சுவதில்லையோ அவர் மரணித்தவர் போன்றவர் ஆவார். உயிருள்ளவர் அல்ல. (ஹக்கீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின், தொகுதி 22, பக்கம் 268 -269)

இன்று மக்களின் நிலையானது நீங்கள் நெருப்பு கிடங்கின் ஓரத்தில் இருந்தீர்கள் என்பதற்கு ஒப்பாக இருக்கின்றது. உலகம் தற்போது மிகப் பெரிய அழிவின் விளிம்பில் நிற்கிறது. இன்று உலகில் ஒரு விதமான பதட்டமான அச்சமான சுற்றுச் சூழல் மற்றும் போருக்கான கார்மேகம் சூழ்ந்துள்ளது. மனித இனத்திற்கு தற்போது பிற உலக தேவைகளுடன் சாந்தி, சமாதானம், அமைதி, நன்மை மற்றும் பாதுகாப்பின் தேவை எந்த அளவிற்கு இருக்கின்றது என்றால், இதற்கு முன்னர் எப்போதும் அவர்களுக்கு அதற்கான தேவை இருந்ததில்லை. மூன்றாம் உலகப் போரின் அபாயங்கள் தோன்றிவிட்டன. இத்தகைய சூழ்நிலையில் உலகில் மனித குலத்தின் மீது கருணை புரிதல், மாசற்ற தொண்டு புரிதல், அதன் நலன் மற்றும் பாதுகாப்பிற்காக துஆக்கள் செய்கின்ற ஒரு புனிதமான விண்ணின் அமைப்பே அஹ்மதிய்யா கிலாஃபத் ஆகும். இன்று உலகில் மக்கள் மத்தியில் அமைதியை

நிலை நிறுத்துவதில் எந்த அளவிற்கு அஹ்மதிய்யா கிலாஃபத் முயற்சிகள் செய்கின்றதோ அதற்கு நிகரான முன்மாதிரி வேறெங்கும் காணமுடியாது. நம்முடைய அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மட்டும் தான் உலகை மூன்றாம் உலகப்போர் தொடர்பாக நீண்ட நாட்களாக தொடர்ந்து எச்சரித்துக் கொண்டே இருக்கின்றார்கள். சாந்தி, சமாதானம் மற்றும் அமைதியை நிலைபெற செய்வற்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற ஒரே உலகளாவிய வழிகாட்டி இவர்தான். நாம் அவரை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதே நம்முடைய நற்பேறு ஆகும். ஆனால், அன்னாரை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மீதும் அவர் அனுதாபம் காட்டுகின்றார். அவர்களுக்கான நன்மையை நாடுகின்றார். ஏனெனில், இக்காலத்தில் அஹ்மதிய்யா கிலாஃபத் மட்டுமே பாதுகாப்பிற்கான அரணாக உள்ளது.

இன்று மார்க்கமின்மை உச்சத்தில் இருக்கின்றது. மக்களும் தங்களை படைத்தவனை மறந்துவிட்டார்கள். இதன் காரணமாக தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்த அமைதியின்மைக்கும் நிம்மதியின்மைக்கும் இலக்காகிக் கொண்டே செல்கின்றார்கள். நம்முடைய அன்பிற்குரிய இமாம் உலகை உண்மையான பாதுகாப்பின் அரணான இறைவனை அடையாளம் காணுவதன் பக்கம் கவனமூட்டுகின்றார்கள். ஹுஸுர் அவர்கள் எண்ணற்ற வடிவங்களில் திருக்குர்ஆன் மற்றும் வரலாற்றுச் சான்றுகளின் மூலம் இவ்விஷயத்தை நிரூபித்து காட்டியுள்ளார்கள். அதாவது உண்மையான மற்றும் உறுதிவாய்ந்த நிலையான அமைதியை நிலைபெறச் செய்வதற்கு எல்லாம் வல்ல இறைவனின் இருப்பை அறிந்து கொண்டு இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை செலுத்துவதும் படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை செலுத்துவதும் மேலும் நீதியை நிலை பெறச் செய்வதும் தான் அதனுடைய நிபந்தனையாகும்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜெர்மனியில் நடந்த 2022 ஆம் ஆண்டு மாநாட்டில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உண்மையான அமைதியை உலகின் நிலை பெறச் செய்வதற்கு அனைத்து மக்களும் அமைதியாக வாழ வேண்டும் என்று விரும்பக்கூடிய ஓர் இறைவன் இருக்கின்றான் என்கிற இந்த கோட்பாட்டின் படி செயல்பட வேண்டும். எதுவரை ஒரு மேலான உன்னதமான இருப்பை (இறைனை) நாம் ஏற்றுக் கொள்ளவில்லையோ மேலும் எதுவரை அந்த இறைவனின் நேசத்தை உள்ளத்தில் ஏற்படுத்தவில்லையோ அதுவரை உண்மையான அமைதியானது நிலைபெற முடியாது. இஸ்லாம் மட்டும்தான் எல்லாம் வல்ல அல்லாஹ் அமைதியை வழங்கக் கூடியவன் என்கின்ற இந்தக் கோட்பாட்டை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலம் சமர்பித்துள்ளது. மக்களுக்கிடையில் உண்மையான சகோதரத்துவம் ஏற்படாத வரை அமைதியை நிலைபெற செய்ய முடியாது. மேலும் ஒரே இறைவனை ஏற்றுக் கொள்ளாமல் உண்மையான சகோதரத்துவமானது நிலைபெறாது.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பல நாட்டு தலைவர்களுக்கு அமைதியை நிலை பெற செய்வது தொடர்பாக தன்னுடைய கடிதத்தின் மூலம் கவனமூட்டினார்கள்.

மார்ச் 8, 2012 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்: உலகில் தற்போது நிலவும் நிலையில்லா சூழ்நிலையின் ஒளியில் உலகின் பெரும் வல்லரசாக திகழும் அமெரிக்காவின் அதிபர் என்ற முறையில் தங்களுக்கு நான் கடிதம் எழுதுவது அவசியம் என்ற வகையிலும், தங்களின் அதிகாரத்தால் எடுக்கின்ற முடிவுகள் உங்களின் நாட்டையும் பெருமளவு உலகத்தையும் பாதிக்கும் என்ற காரணத்தாலும் இதை எழுதுகின்றேன்.....

உங்களுக்கும் மற்ற அனைத்து உலகத் தலைவர்களுக்கும் எனது வேண்டுகோள் என்னவென்றால் உலகில் அமைதியை நிலைநாட்ட உங்களது பங்கை ஆற்ற வேண்டும் என்பதே ஆகும். எல்லாம் வல்ல அல்லாஹ் தங்களுக்கும் எல்லா உலகத் தலைவர்களுக்கும் இந்த செய்தியை புரிந்து கொள்வதற்கும் அதன்படி அமல் செய்வதற்கான நற்பேறையும் வழங்குவானாக.

ஸய்யிதுனா ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் York University, Ontario Canada -வில் நிகழ்த்திய தம்முடைய உரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: உண்மையாகவே நாம் அமைதி நிலை பெற வேண்டும் என விரும்பினால் நாம் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். நாம் நீதி மற்றும் சமத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தமக்காக எதை விரும்புகின்றீர்களோ மற்றவருக்காகவும் அதையே விரும்புங்கள் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு அழகாக கூறியுள்ளார்கள். நாம் நம்முடைய நலனுக்காக நம்முடைய பயனுக்காக மட்டுமல்லாமல் தொலைநோக்குப் பார்வையுடன் உலகின் நலனுக்காகவும் பலனுக்காகவும் பணிபுரிய வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் இதுவே உண்மையான அமைதியை நிலைபெற செய்வதற்கான வழிமுறைகள் ஆகும். (அக்டோபர் 28, 2016 York University, Ontario Canada)

கிலாஃபத்தின் நிழலின் கீழ் பாதுகாப்பான அரணுக்குள் வருவதற்கான ஓர் உதாரணம் என்னவென்றால் கொரானா பரவியதற்கு பிறகு உலகில் ஜமாஅத்தான இறை வணக்கங்களை அதிகமாக செய்கின்ற மார்க்க அமைப்புகள் தடுமாற்றத்திற்கு இலக்காகி குழப்பத்தில் தென்பட்டார்கள். முஸ்லிம் அமைப்புகளில் பள்ளிவாசலுக்கு பதிலாக வீடுகளில் ஐந்து நேர தொழுகைகள் மற்றும் ஜுமுஆ தொழுகை தொழுவது தொடர்பான விவாதங்கள் ஆரம்பித்துவிட்டன. சில இடங்களில அதற்கு நேர்மாற்றமான நிலை உருவாகிவிட்டது. சில மக்கள் அதிக பிரசங்கித்தனமாக இவ்வாறு நடந்து கொண்டார்கள். சலுகை இருந்தும் கூட பள்ளிவாசலுக்கு சென்று எந்த ஒரு பாதுகாப்பும் முன்னேற்பாடும் இல்லாமல் ஜமாஅத்துடன் தொழுவதை அவசியம் என்று கருதினார்கள். அதன் விளைவாக இழப்பை சந்தித்தார்கள். மேலும் சிலர் பாதுகாப்பு என்ற பெயரில் தொழுகையை முற்றிலுமாக விட்டுவிட்டார்கள். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய இமாம் மார்ச் 27,2020 அன்று தம்முடைய அலுவலகத்திலிருந்து ஒளிபரப்பப்பட்ட சிறப்பு தூதுச் செய்தியில் உலகம் முழுவதிலும் உள்ள அஹ்மதிகளுக்கு தொற்று நோயின் நிலைமையை கருத்தில் கொண்டவாறு வீட்டிலிருந்தே ஐவேளை தொழுகைகள் மற்றும் ஜுமுஆ நடத்தும்படி வலியுறுத்தி கூறினார்கள். அதன்படி காலத்தின் கலீஃபாவின் கரம் மற்றும் தோள்களான இந்த இயக்கமானது செயல்பட ஆரம்பித்து அதன் மூலமாக அஹ்மதிகளின் வீடுகளில் இறை வணக்கங்கள் நடத்தும் முறை கற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் விளைவாக ஒவ்வொரு அஹ்மதி வீடும் எந்த ஒரு காலதாமதமும் இன்றி தொழுகைகளை நடத்த தொடங்கிவிட்டது. ஆகவே எங்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளாதவர்கள் தடுமாற்றத்திற்கு இலக்காகி கொண்டிருந்தார்களோ அங்கு கிலாஃபத்தின் அருளின் மூலமாக அச்சமோ அஹ்மதிகளுக்கு மத்தியில் நிலவவில்லை. மேலும் கடமையை செலுத்துவதிலும் எந்த ஒரு தொய்வும் ஏற்படவில்லை. அவ்வாறு எப்படி நடக்காமல் இருக்க முடியும்? அவர்களோ பாதுகாப்பிற்கான அரணில் அல்லவா இருந்தார்கள்!

எனவே கிலபாஃத் அமைப்பானது எப்படிப்பட்ட அமைப்பு என்றால் ஒருபுறம் அடித்தளமானது ஈமானின் உறுதி வாய்ந்த சிகரத்தின் மீது நிலை பெற்றுள்ளது. மறுபுறம் அதனுடைய கதிர்கள் அர்ஷினுடைய ரப்புல் ஆலமீனை தொட்டுக் கொண்டிருக்கின்றது. அங்கு இறைவனின் உதவி, வெற்றி, பாதுகாப்பு மற்றும் உத்தரவாதத்திற்கான காட்சிகள் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துஆக்களின் பலனாலும் அன்னாரின் அமைதி நிறைந்த மற்றும் தைரியத்தை வெளிப்படுத்தக்கூடிய சொற்களின் மூலமாகவும் ஜமாஅத் உறுப்பினர்களின் உள்ளமானது திருப்தி அடைகின்றது. மேலும், அவர்களுக்கு அமைதி மற்றும் பாதுகாப்பின் உத்தரவாதமாக திகழ்கிறது. ஹுஸுர் அவர்களின் Private Secretary தாமதிப்பிற்குரிய முனீர் ஜாவீத் ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

மே 4, 2006 அன்று வியாழக்கிழமையாக இருந்தது. ஹுஸுர் அவர்கள் தொலை கிழக்கு நாடுகளான ஃபிஜியில் உள்ள தீவான நாந்தியில் இருந்தார்கள். இரவு 2.30 மணியளவில் இலண்டன், ரப்வா மற்றும் உலகில் உள்ள பல நாடுகளிலிருந்து தொலைபேசி அழைப்பு வரத் தொடங்கியது. அதில் தற்போது டிவியில் ஃபிஜி அருகில் உள்ள தீவான டோங்கோவை சுனாமி தாக்க உள்ளது என்றும் மேலும், அந்த சுனாமியின் வேகமும் தீவிரமும் இந்தோனேஷியாவில் லட்சக்கணக்கான மக்களை மூழ்கடித்த சுனாமியை காட்டிலும் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்றும் செய்தி தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது என்று கூறப்பட்டது. அதன் பிறகு, டிவியில் இந்த சுனாமி தன்னுடைய ஆற்றலிலும், வேகத்திலும் தீவிர வலுப்பெற்று அதிகரித்தக் கொண்டே இருக்கின்றது. மேலும் காலை நேரத்திற்குள் நான்தி ஃபிஜி தீவினுடைய அனைத்து இடங்களும் மூழ்கடிக்கப்படும்

என்ற செய்தி வந்து கொண்டே இருந்தது. காலை 4.30 மணியளவில் ஹுஸூர் அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்காக வருகை தந்தார்கள். அப்போது ஹுஸூர் அவர்களிடம் இந்த புயல் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஃபோன் மூலமாக இங்குள்ள நிலைமை தொடர்பாக மக்கள் பாதுகாப்பாகவும், நலமாகவும் இருக்கின்றார்களா? என்று கேட்டறிந்த செய்தியும் ஹுஸூர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. ஹுஸூர் அவர்கள் நீண்ட ஸஜ்தாவுடன் கூடிய ஃபஜ்ர் தொழுகையை தொழ வைத்தார்கள். இறை சன்னிதியில் மன்றாடல்களை எடுத்து வைத்தார்கள். தொழுகையை முடித்த பிறகு மஸீஹுடைய கலீஃபா அவர்கள், ஜமாஅத் சகோதரர்களை நோக்கி கவலைப்படாதீர்கள்;அல்லாஹ் அருள் செய்துவிடுவான்: எதுவும் நடக்காது என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்கள். அதன் பிறகு டிவியில் இவ்வாறான செய்திகள் வரத் தொடங்கிவிட்டன. அந்த சுனாமி வலு இழந்துவிட்டது. மேலும் மெல்ல மெல்ல அதனுடைய ஆற்றல் குறைந்து கொண்டே செல்கிறது. இரண்டரை மணிநேரம் கழித்து அந்த புயலின் உரு முற்றிலும் அழிந்து விட்டது என்ற செய்தி வந்தது. அப்போது இந்த உலகம் ஒரு அற்புதமான காட்சியைக் கண்டது. எந்த சுனாமியானது சில மணிநேரங்களில் லட்சக்கணக்கான மக்களை மூழ்கடித்தவாறு அந்த அனைத்து நகரத்தையும், உலக வரைபடத்திலிருந்தே அழித்து விடக்கூடியதாக இருந்ததோ காலத்தின் கலீஃபாவின் துஆவின் மூலமாக சில மணி நேரங்களில் அந்த சுனாமியே தடம் இல்லாமல் அழிந்துவிட்டது. அன்றைய தினம் ஃபிஜியில் வெளிவந்த நாளிதழ்களில் சுனாமி விலகிச் சென்றது எந்த ஒரு அற்புதத்திற்கும் குறைவானது அல்ல என்ற செய்தி வெளியானது.

கிலாஃபத் தொடர்பாக ஸூரா அன்நூர் வசனம் 56-ல் கிலாஃபத்தினுடைய எந்தெந்த அருட்கொடைகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளதோ அதில் அவர்களின் அச்சத்திற்கு பிறகு நிச்சயமாக அதற்கு பதிலாக அவர்கள் அமைதியின் நிலைமைக்கு மாற்றப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதாவது இதுவும் அல்லாஹ்வின் ஒரு வாக்குறுதியாக இருக்கிறது. இந்த மகத்துவம் வாய்ந்த அருட்கொடைகளினால் நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்திற்கு மூன்றாவதாக இந்த பரிசும் கிடைக்கவிருக்கின்றது. எப்பொழுதெல்லாம் அவர்கள் ஏதவாது ஒரு காரணத்தினால் அச்சமான நிலையைக் கடந்து செல்ல நேரிடுமோ அப்போது அல்லாஹ் அந்த நிலையை அமைதியில் மாற்றி விடுவான். எனவே இது தொடர்பான ஹாலந்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இவ்வாறு உள்ளது:

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் டிசம்பர் 9, 2011 ஆம் தேதி அன்று ஆற்றிய தமது ஜூமுஆ பேருரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: கடந்த நாட்களில் நான் ஐரோப்பிய சுற்றுப் பயணத்திலிருந்து திரும்பி வரும் சமயத்தில் ஒரு ஜூமுஆ உரையை ஹாலந்தில் நிகழ்த்தினேன். அப்போது நான் அங்குள்ள அரசியல்வாதியும், ஒரு கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான Geert Wilders என்பவருக்கு எனது குத்பாவில் இந்த தூதுச் செய்தியை கூறினேன். அதாவது நீங்கள் இஸ்லாத்திற்கு எதிராகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் அநீதி இழைப்பதில் வரம்பு மீறி உள்ளீர்கள். கீழ்த்தரமாக பேசியுள்ளீர்கள். எதிர்ப்பின் உச்சத்தை அடைந்து விட்டீர்கள். இவ்வாறான செயல்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். அவ்வாறு இல்லை என்றால் அறிவிக்கப்படாமல் வரும் இறைவனின் தண்டனைக்கு அஞ்சுங்கள். அது தன்னுடைய குறித்த நேரத்தில் உங்களைப் போன்றவர்களை அழித்து விடும். அந்த இறைவன் உங்களைப் போன்றவர்களை அழிப்பதற்குரிய ஆற்றல் உள்ளவன் ஆவான். மேலும் எங்களிடம் எந்தவிதமான உலக சக்தியும், ஆற்றலும் இல்லைதான். ஆயினும் நாங்கள் உங்களைப் போன்றவர்களை துஆக்களின் மூலமே எதிர்கொள்கின்றோம் என்ற இந்த வாசகத்தையும் கூறினேன். இந்த குத்பாவின் சுருக்கத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பத்திரிகை வெளியீட்டுக்கான பதிப்பை நமது பத்திரிகை பிரிவு பொறுப்பாளர் என்னிடம் கொண்டு வந்தார். அப்போது அதில் மற்ற எல்லா விஷயங்களையும் எழுதியிருந்தார். ஆனால், அவர் இந்த குறிப்பிட்ட வாக்கியத்தை எழுதவில்லை. அப்போது நான் அவரிடம் நம்மிடம் உலக ஆயுதம் எதுவும் இல்லை என்ற இந்த வரிகளையும் கண்டிப்பாக எழுதுங்கள் எனக் கூறினேன்.

இதையே தான் நான் குத்பாவிலும் கூறியிருந்தேன். மேலும் நீங்களும் உங்களைப் போன்ற அனைவரும் அழிந்து விடுவதற்காக நாங்கள் துஆ செய்கின்றோம். உண்மை என்னவென்றால், நமது அனைத்து எதிரிகளையும் பகைவர்களையும் எதிர்கொள்ளும் போது அவர்களை தர்க்கரீதியிலான முறையில் எதிர்கொள்கின்றோம் அல்லது எல்லாவற்றிற்கும் மேலாக நாம் துஆக்களின் மூலம் அவர்களை எதிர்கொள்கின்றோம்.

எவ்வாறு இருப்பினும், இந்த அச்சக வெளியீட்டினை Geert Wilders என்ற அரசியல்வாதியும் படித்தார். மேலும், அவர் தனது அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினார். அதில் உள்துறை அமைச்சரிடம் சில கேள்விகளை கேட்டார். இந்த விஷயம் அங்குள்ள அச்சகத்திலும் வெளிவந்தது. அங்குள்ள ஜமாஅத்தினர் எனக்கு கடிதம் எழுதினார்கள். இவ்வாறு அவர் சில கேள்விகளை முன்வைத்துள்ளார். இதன் காரணமாக ஜமாஅத் சகோதரர்களிடம் ஒரு விதமான பதற்றம் நிலவுகிறது என எழுதி இருந்தார். அப்போது நான் அவர்களிடம் கூறினேன். உள்துறை அலுவலகம் கேட்டால் பயப்பட வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. கவலைப்படவும் வேண்டாம். தெளிவாக நமது கொள்கைகளை எடுத்துக் கூறுங்கள். அந்த மனிதர் தான் அனைத்து பிரச்சனைகளுக்கும் வித்திட்டார். அவர் தகாத செயல்களை செய்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து தவறான படங்களை தயாரித்தார். மிகவும் மோசமான வார்த்தைகளை உபயோகப்படுத்தினார். இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தினார். நாங்கள் அதற்கான பதிலைத் தான் கொடுத்துள்ளோம். மேலும் நாம் இவ்வாறு கூறினோம். இறைவன் தனது நபியின் தன்மானத்தை பாதுகாக்க கூடியவன் ஆவான். அவன் அதற்காக பிடிக்கவும் செய்வான். எனவே இறைவனுக்கு அஞ்சி நடக்கவும்.

எவ்வாறு இருப்பினும் அவர் தனது அரசாங்கத்திடம் கேட்ட கேள்விகளுக்கு அந்த அரசாங்கம் சில நாட்களுக்குப் பிறகு பதில் அளித்தது. அது அங்குள்ள பத்திரிகையிலும் வெளிவந்தது. அவர் கேட்ட முதல் கேள்வி WORLD Muslim Leader Sends Warning to Dutch Politician Wilders.

உலக முஸ்லிம் தலைவர் நெதர்லாந்து அரசியல்வாதி கீர்ட் வில்டர்ஸுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் என்ற கட்டுரையைப் பற்றி உள்துறை அமைச்சராகிய நீங்கள் அறிவீர்களா? அதற்கு உள்துறை அமைச்சர் ஆம்! நான் அறிவேன். இந்த கட்டுரையை நான் படித்தேன் என கூறினார்.

அவரது அடுத்த கேள்வி மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் இவ்வாறு கூறியுள்ளார்: கவனமாக கேளுங்கள்! உங்களுடைய கட்சியும், உங்களைப் போன்ற ஒவ்வொருவரும் இறுதியில் அழிக்கப்படுவீர்கள். இது வில்டர்ஸ் உள்துறை அமைச்சருக்கு எழுதியதாகும். தொடர்ந்து எழுகிறார். இந்த குழப்பம் நிறைந்த கூற்றின் அடிப்படையில் இந்த இஸ்லாமிய அமைப்பின் மீது உள்துறை அமைச்சகம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? உள்துறை அமைச்சர் இதற்கு இவ்வாறு பதில் கூறினார். பத்திரிகை வெளியீட்டின் அடிப்படையில் அவர்கள் இதுபோன்ற மக்கள் மற்றும் பிரிவுகள் எவ்வித குழப்பமோ வன்முறையோ அல்லது மதச்சார்பற்ற செயல்கள் மூலமாகவோ அழிக்கப்படுவதில்லை. மாறாக, துஆவின் மூலமாக மட்டுமே அழிக்கப்படுவார்கள் என்றுதான் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது கூறியுள்ளார்கள். அந்தக் கூற்றில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது குழப்பம் ஏற்பட காரணமாக இருக்கக்கூடிய எந்த ஒரு விஷயமும் இல்லை. எனவே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான எந்த ஒரு காரணத்தையும் நான் காணவில்லை.

அவர் கேட்ட மூன்றாவது கேள்வி ஹாலந்தில் உள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கும் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மற்றும் மஸ்ரூர் அஹ்மதுடன் என்ன தொடர்பு உள்ளது? அதற்கு அந்த டச் அமைச்சர் இவ்வாறு பதில் கூறினார்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஹாலந்து உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஒரு கிளையாகும்.

ஆக, கிலாஃபத் எப்படிப்பட்ட கோட்டை என்றால் அதனுடைய கதிர்கள் அச்சத்தின் பிடியிலிருந்து எட்டாத உச்சத்தில் இருக்கும். அந்த அச்சமானது நயவஞ்சகத்தின் அச்சமாக இருக்கட்டும் அல்லது எதிரிகளின் அச்சமாக இருக்கட்டும்.

போரின் அச்சமாக இருக்கட்டும் அல்லது அரசியல் அமைப்பின் அச்சமாக இருக்கட்டும் அல்லது எந்த ஒரு பிரிவினரின் அச்சமாக இருக்கட்டும் அல்லது அரசாங்கத்தின் தரப்பிலிருந்து ஏற்படுத்தக்கூடிய அச்சமாக இருக்கட்டும். எல்லா நிலையிலும் கிலாஃபத் பாதுகாப்பிற்கான அரணின் அடையாளமாக திகழ்கிறது. பெரிய, பெரிய அரசாங்கமும் கிலாஃபத்திற்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது.

மாறாக எந்த அரசாங்கம் கிலாஃபத்துடன் மோதியதோ அது தூள் தூளாக நொறுங்கிவிட்டது என்பதற்கு வரலாறு சாட்சி பகர்கின்றது.

**கிலாஃபத் எப்படிப்பட்ட உயிருள்ள மரம் என்றால் எவர் கிலாஃபத்துடன் தொடர்புடையவராக இருப்பாரோ அது கடிதங்கள் மூலமாக இருந்தாலும் சரி அல்லது ஹுஸூர் அவர்களுக்காக துஆக்கள் செய்து ஹுஸூர் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட நபராக இருந்தாலும் சரி. அவரை எல்லாம் வல்ல அல்லாஹ் பாதுகாப்பிற்கான அரணில் வைக்கின்றான்.**

Ivory Coast-ஐச்சேர்ந்த ஒரு வாலிப விமானி ஒரு வருட படிப்பிற்காக பெல்ஜியம் வந்திருந்தார். அங்கு ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான பாக்கியம் கிடைத்தது. அப்போது அந்த வாலிபர் தான் விமானியாக தேர்ந்தெடுக்கப்பட்டதே ஹுஸூர் அன்வர் அவர்களின் துஆவினால் தான் எனக் கூறினார். அந்த சம்பவம் இதுவாகும். அந்த வாலிபர் சில வருடங்களுக்கு முன்பு ஐவரிகோஸ்டில் நடந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ளார். அங்கு அவருடைய நண்பர் இவரிடம் நான் ஒரு விளம்பரத்தை பார்த்தேன். அதில் ஐவரிகோஸ்ட் அரசாங்கம் தம் மக்களை பணியில் அமர்வதற்கான போட்டிகளை நடத்துகிறது. ஆனால். அதற்கான கோப்புகளை சமர்பிக்க வேண்டிய கடைசி தேதி கடந்துவிட்டது என்று கூறினார். அந்த வாலிபர் கூறுகின்றார்: அதற்கான கடைசி தேதி கடந்துவிட்ட நிலையிலும் நான் ஹுஸூர் அவர்களுக்காக துஆவிற்காக கடிதம் எழுதினேன். அத்துடன் என்னுடைய கோப்புகளையும் அந்த பணிக்காக சமர்ப்பித்துவிட்டேன். சில நாட்களுக்குப் பிறகு அங்கிருந்து இவ்வாறு பதில் வந்தது. நீங்கள் காலதாமதமாக கோப்புகளை சமர்ப்பித்துள்ளீர்கள் என்றாலும் நாம் உங்களுக்கு போட்டியில் கலந்து கொள்வதற்கான அனுமதியை வழங்குகின்றோம். அதன்பிறகு அந்த வாலிபர் போட்டிக்கான தேர்வை எழுதினார். ஓராயிரம் போட்டியாளர்களில் பதினைந்து நபர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டார்கள். அதில் அந்த வாலிபரின் பெயரும் இடம் பெற்று இருந்தது. அந்த வாலிபர் இவை அனைத்தும் ஹுஸூர் அவர்களின் துஆவினாலேயே நடந்தது எனக் கூறினார். (அல்ஃபஸ்ல், இன்டர்நேஷனல், அக்டோபர் 25, 2019, பக்கம் 20)

ஜெர்மனியிலிருந்து ஒரு சிறுவன் இந்த விஷயத்தை வெளிப்படுத்தினார். அவர் கூறுகின்றார்: நான் என்னுடைய அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களிடம் துஆவிற்காக விண்ணப்பித்திருந்தேன். எல்லாம் வல்ல அல்லாஹ் என்னுடைய குடும்பத்தாரை அனைத்து விதமான பிரச்சனைகளிலிந்தும் வெளியேற்றுவானாக. எவருக்கும் எந்த ஒரு தொந்தரவும் ஏற்படக்கூடாது. அவர் கூறுகின்றார்: அந்த நேரம் என்னுடைய ஒரு மாமா தனியாக பாகிஸ்தானில் வசித்து வந்தார். அனைத்து உறவினர்களும் வெளியூரில் உள்ளார்கள். மேலும் அவர் பெரிய பிரச்சனைகளில் சிக்கிக் கொண்டார். அறிந்தவர்கள் யாரும் அருகில் இல்லாத காரணத்தினால் எந்நேரமும் கவலையிலேயே இருந்தார். நான் அப்போது ஹுஸூருக்கு அன்னாருக்காக துஆவிற்கான ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதன் பிறகு அங்குள்ள நிலைமைகள் வியப்பூட்டும் வண்ணம் மாறியது. சில நாட்களுக்குள் மாமாவிற்கு நார்வேயிலிருந்து திருமண வரன் வந்தது. அந்த வரன் முடிவு செய்யப்பட்டது. மாமா அல்லாஹ்வின் அருளினால் நார்வே வந்துவிட்டார்கள். தற்போது அங்கு தம்முடைய மனைவி. மக்கள் மற்றும் குடும்பத்தாருடன் மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை கழிக்கின்றார்கள். இதுவே கிலாஃபத்தின் அருட்கள் ஆகும். அது உள்ளத்திற்கு அமைதியை ஏற்படுத்துவதற்கான காரணிகளாக திகழ்கின்றது.

கனடாவின் டுர்ஹம் (Durham) ஜமாஅத்தைச் சார்ந்த பெண்மணி ஒரு முரப்பி ஸாஹிப் அவர்களுக்கு தம்முடைய சம்பவத்தை கூறினார்கள். அந்த சம்பவம் மிகவும் சுவாரஸ்யமானது. அந்த பெண்மணி கூறுகின்றார்: சில வருடங்களுக்கு முன்னர் எங்களுடைய குடும்ப வாழ்க்கையில் நிறைய ஏற்றத் தாழ்வு இருந்தது. பரஸ்பரம் எங்களுக்கிடையே மிகுந்த கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் காரணத்தினால் இந்த நபருடன் இனி வாழக்கூடாது என்று நான் பிரிந்து விட வேண்டும் என முடிவு எடுத்துவிட்டேன். அச்சமயம் ஹுஸூர் அவர்களின் கனடாவின் சுற்றுப் பயணம் துவங்கிவிட்டது. ஹுஸூர் கனடாவிற்கும் வருகை தந்தார்கள். நானும் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்காக சென்றிருந்தேன். அப்போது இந்த அனைத்து சூழ்நிலை மற்றும் நிலைமைகளையும் எடுத்துக் கூறினேன். மேலும் குழந்தைகளுக்காக துஆவிற்கான விண்ணப்பமும் செய்திருந்தேன். மேலும் ஹுஸூர் அவர்களிடம் நான் கணவனை விட்டு பிரிவதற்கு முடிவெடுத்துவிட்டேன் என்பதையும் கூறிவிட்டேன். அதற்கு. உங்களுடைய கணவர் என்ன கூறுகின்றார்? என்று ஹுஸூர் அவர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த பெண்மணி அவர் சமாதானத்தையே விரும்புகின்றார். ஆனால் நான் தற்போது இறுதி முடிவு எடுத்துவிட்டேன். எந்த ஒரு சமாதனமும். மறுபரிசீலனையும் செய்ய முடியாது என பதிலளித்தார். அப்போது, உங்கள் கணவர் சமாதானத்தை விரும்பும்போது நீங்களும் சமாதானம் செய்து கொள்ளுங்கள். எல்லாம் சரியாகிவிடும். இன்ஷாஅல்லாஹ் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். அந்த பெண்மணி கூறுகின்றார்: இது மிகுவும் வியப்பாக உள்ளது. நான் முடிவெடுத்துவிட்டேன். எல்லாம் முடிந்துவிட்டது என்று கூறினேன். அதற்கு ஹுஸூர் அவர்கள் இல்லை சமாதானம் செய்து கொள்ளுங்கள். எல்லாம் சரியாகிவிடும் இன்ஷாஅல்லாஹ் என்று கூறினார்கள். தற்போது நான் ஹுஸூர் அவர்களின் கூற்றிற்கு ஏற்ப அவர்களை சந்தித்துவிட்டு வெளியேறியதும் என்னுடைய கணவனுக்கு ஃபோன் செய்து அவருடன் சமாதானம் ஆகிவிட்டேன். எல்லாம் வல்ல அல்லாஹ் ஹுஸூர் அவர்களின் இந்த வார்த்தைகளில் எப்படிப்பட்ட மன நிறைவை வழங்கி இருந்தான் என்றால் அந்த சமாதானத்திற்கு பிறகு எங்களுடைய வாழ்க்கையே மாறிவிட்டது. தற்போது எங்களுக்கிடையில் ஒரு விதமான அன்பு, பாசம் மற்றும் நேசத்தினால் நிறைந்த தொடர்பிற்கான அடித்தளம் ஏற்பட்டுவிட்டது. தினமும் எங்களுக்கு திருமணம் நடக்கின்றது போன்று நாங்கள் உணர்கின்றோம். கிலாஃபத்தின் இந்த அருள்களிலிந்து விலகி இருக்கின்ற அந்த மக்கள் இதை புரிய வேண்டும். அதாவது இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு புரிய வைக்கக்கூடிய அவர்களுக்காக துஆக்கள் செய்யக்கூடிய, அவர்களுக்கு மனநிறைவான வார்த்தைகளை கூறக்கூடிய ஒருவர் இல்லாதபோது அஹ்மதிகளிடம் அவர்களின் கலீஃபா இருக்கின்றார். அவர் ஒரு மகத்துவம் வாய்ந்த அருட்கொடையை போன்று இருக்கின்றார். மேலும், இது இஸ்லாம் அஹ்மதிய்யத்தினுடைய உண்மையான கிலாஃபத்தின் அருட்கொடையாகும். மேலும் இந்த அருட்கொடைதான் உள்ளம் அமைதி அடைவதற்கான காரணமாக இருக்கின்றது.

வாசகர்களே! ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகின் எண்ணற்ற நாடுகளிலுள்ள சபைகளுக்கு சென்று இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகள் மூலம் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உரையை நிகழ்த்தியுள்ளார்கள். அதன் காரணமாகத்தான் அன்னாருக்கு அமைதியின் தூதுவர் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. எண்ணற்ற மக்கள் இதை ஆமோதிக்கின்றார்கள். ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து ஒலித்த இஸ்லாத்தின் அறிமுக குரல் எங்களுடைய உள்ளத்தில் குடிகொண்டுவிட்டது. எங்களுடைய உள்ளமும் மூளையும் இஸ்லாத்தின் போதனையால் நிரம்பிவிட்டது. இது தொடர்பான ஒரு சம்பவத்தை நான் கூறுகின்றேன்:

2012 ஆம் ஆண்டு ஹுஸூர் அவர்கள் European Parliment Brussels-ல் உரை நிகழ்த்தினார்கள். அச்சந்தர்ப்பத்தில் Geneva Switzerland - லிருந்து Bishop Dr Amen Howard அவர்களும் ஹுஸூர் அவர்களின் உரையை கேட்க வருகை தந்திருந்தார். அவர் தன்னுடைய கருத்துகளை எந்த வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தினார்களோ அதை நாம் கூர்ந்து கேட்க வேண்டும். அவர் இவ்வாறு கூறினார்:

இந்த நபர் மந்திரவாதி இல்லை. ஆனால், இவருடைய வார்த்தைகள் மாய சக்தியை கொண்டுள்ளதாக இருக்கின்றது. அவரின் தொனி இலகுவானது. ஆனால், அவருடைய நாவிலிருந்து வெளிவருகின்ற வார்த்தைகள் அசாதாரண ஆற்றல், கம்பீரம் மற்றும் தாக்கத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இதுபோன்ற தைரியமான ஒரு மனிதரை நான் என்னுடைய வாழ்நாளில் கண்டதே இல்லை. உங்களைப் போன்ற வெறும் மூன்று மனிதர்கள் இந்த உலகிற்கு கிடைத்துவிட்டால் சமாதானம் தொடர்பான இவ்வுலகில் வியப்பூட்டும். புரட்சியை மாதங்களில் அல்ல. மாறாக, தினங்களுக்குள்ளேயே ஏற்படுத்த முடியும். மேலும், இந்த உலகம் அமைதி மற்றும் சகோதரத்துவத்தின் மையப்புள்ளி ஆக மாறிவிடும். ( Ahmadiyya Gazette Canada மே 2018, பக்கம் 20)

கிலாஃபத்தின் மகத்துவம் வாய்ந்த அருட்களில் சிலவற்றையே கூறுவது சாத்தியமாகும். கிலாஃபத்தின் எதிர்பாராத அருட்களுக்கு நன்றி செலுத்துதல் மற்றும் இந்த மகத்துவம் வாய்ந்த பாதுகாப்பிற்கான

இதன் தொடர்ச்சி : 17ஆம் பக்கம்

## பிள்ளைகளின் தர்பிய்யத்தும் அஹ்மதி தாய்மார்களின் பொறுப்புகளும் இறைநேசம் தொழுகை திலாவத் கிலாஃபத்தின் மீதான நேசம் உயர்ந்த ஒழுக்கம்

(மதிப்பிற்குரிய டாக்டர் மன்ஸூர் ஆலாதீன் ஸாஹிபா, ஸத்ர் லஜ்னா இமாயில்லாஹ் காதியான்)
காதியான் ஆண்டு மாநாடு - 2022 (பெண்களின் கூட்டத்தில் ஆற்றிய உரை)

رَبَّنَا هَبْ لَنَا مِنْ أَزْوَاجِنَا وَ ذُرِّيّٰتِنَا قُرَّةَ أَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ إِمَامًا

மதிப்பிற்குரிய கூட்டத்தின் தலைவி அவர்களே மற்றும் அன்பிற்குரிய சகோதரிகளே! எனது சொற்பொழிவின் தலைப்பு பிள்ளைகளின் தர்பிய்யத்தும் அஹ்மதி தாய்மார்களின் பொறுப்புகளும்- இறைநேசம், தொழுகை, திலாவத், கிலாஃபத்தின் மீதான நேசம், உயர்ந்த ஒழுக்கம் என்பதாகும்.

எங்கள் இறைவா! எங்களுக்கு எங்களது வாழ்க்கைத் துணைகள், மற்றும் எங்களது பிள்ளைகளிடமிருந்து எங்களின் கண்களுக்கு குளிர்ச்சியை வழங்குவாயாக! மேலும் எங்களை இறையச்சமுடையவர்களுக்கு இமாமாக ஆக்குவாயாக! என்பது நீங்கள் செவிமடுத்த இறை வசனத்தின் பொருள் ஆகும்.

அன்பிற்குரிய சகோதரிகளே! இக்காலத்தின் இமாமை அறிந்து அவர் மீது நம்பிக்கை கொள்ளும் நல்வாய்ப்பை கொடுத்த இறைவனுக்கு நாம் எந்த அளவுக்கு நன்றி செலுத்தினாலும் அது குறைவுதான். இன்றிலிருந்து நூறு வருடத்திற்கு முன்பு நாலாபுறமும் இருள் சூழ்ந்திருந்த காலத்தில் இஸ்லாத்தின் கப்பல் சுழலில் சிக்கி தவித்தபோது இறைவன் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை உலகிற்கு அனுப்பினான். அன்னார் (அலை) அல்லாஹ்வின் உதவியால், கடும் எதிர்ப்பு எனும் புயலை எதிர்த்து இஸ்லாம் என்ற கப்பலை மூழ்கிவிடாமல் காப்பாற்றி இறைவனின் மார்க்கத்திற்காக தங்கள் செல்வத்தையும், கண்ணியத்தையும், பிள்ளைகளையும் தியாகம் செய்யக்கூடிய ஒரு ஜமாஅத்தை நிறுவினார்கள். இக்காலத்தில் இஸ்லாத்திற்கு கடுமையாக தொண்டாற்றக்கூடிய ஒரு ஜமாஅத் இருக்கின்றது என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே ஆகும் என்பதை எதிரிகளும் கூட இந்த ஜமாஅத்தைக் குறித்து அறிந்து வைத்து இருக்கின்றனர்.

அன்பிற்குரிய சகோதரிகளே! எந்த ஒரு சமுதாயத்தின் வெற்றியின் ரகசியமும் பெண்களின் ஞானத்திலும், தைரியத்திலும் உயர்ந்த நற்பண்புகளிலும் உள்ளது என்பது உண்மையாகும். இதற்கு உலக வரலாறு சான்று பகர்கின்றது. இதைப் போன்றே ஏதாவது ஒரு சமுதாயத்தின் வீழ்ச்சியின் காரணத்தை தேடினால் அதிலும் பெண்களின் பங்களிப்பு தெரிய வரும். ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த உண்மையை முன்னிறுத்தியவாறு ஜமாஅத் பெண்களின் மார்க்கம் மற்றும் ஞானத்தின் மேம்பாட்டிற்காக லஜ்னா இமாயில்லாஹ்வை நிறுவினார்கள். அன்னாரின் உள்ளத்தில் பெண்களின் தர்பிய்யத்திற்காக அதிக துடிப்பு இருந்தது. ஜமாஅத்தின் பெண்கள் சீர்திருத்தப்படும் வரை ஜமாஅத் வளர்ச்சி அடைய முடியாது என்பதை அன்னருடைய தொலைநோக்குப் பார்வை கவனித்துவிட்டது.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: பெண்களின் அசல் பொறுப்பு குழந்தைகளுக்கு கல்வி மற்றும் தர்பிய்யத் வழங்குதல் ஆகும். இந்த பொறுப்பு ஜிஹாதைக் காட்டிலும் குறைந்தது அல்ல. குழந்தைகளின் தர்பிய்யத் நன்றாக இருந்தால், சமுதாயத்தின் அடித்தளம் வலுப் பெற்று சமுதாயம் வளர்ச்சியடையும். அவர்களின் தர்பிய்யத் சரியில்லையென்றால் நிச்சயமாக ஒருநாள் சமுதாயம் அழிந்துவிடும். எனவே, ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம் மற்றும் அழிவு அந்த சமுதாயத்தின் பெண்களைப் பொருத்து உள்ளது. இன்றைய தாய்மார்கள் பெண் ஸஹாபிகளைப் போன்று தங்கள் பிள்ளைகளுக்குப் தர்பிய்யத் அளித்தால் அவர்களின் குழந்தைகளும், பெண் ஸஹாபிகளின் பிள்ளைகளைப் போன்று சமுதாயத்திற்காக அர்ப்பணம் ஆகக் கூடிய போர்வீரர்களாக இருக்க முடியாதா? இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அதற்கு பெண்களே பொறுப்பாவார்கள். (இறைவன் நாடாது இருக்கட்டுமாக)

(அஸ்ஸுஹார் பக்: 327)

பிள்ளைகளின் தர்பிய்யத்திற்கு பெற்றோர்களின் துஆ மிகவும் முக்கியமானது ஆகும். இறைவன் குழந்தைகளின் பிறப்பிலிருந்து இறப்பு வரை குழந்தைகளுக்காக துஆ செய்யுமாறு கட்டளை வழங்கியுள்ளான். இறைவன் குழந்தை பிறப்பதற்கு முன்னர் நல்ல மற்றும் நேர்மையான குழந்தைகளுக்காக துஆ செய்வதற்கு கற்பித்துள்ளான்.

رَبِّ هَبْ لِيْ مِنْ لَّدُنْكَ ذُرِّيَّةً طَيِّبَةً اِنَّكَ سَمِيْعُ الدُّعَآءِ

இறைவா! நீ! எனக்கு உன்னிடமிருந்து தூய்மையான சந்ததியைத் தந்தருள்வாயாக. நிச்சயமாக நீ பிரார்த்தனையை ஏற்றுக் கொள்பவனாவாய். (ஆலி இம்ரான்: 39)

அடுத்து. குழந்தைகளை நல்லவர்களாகவும், கண்களுக்கு குளிர்ச்சியளிக்கக் கூடியவர்களாகவும் ஆக்குவதற்கு துஆ கற்றுத் தரப்பட்டுள்ளது.

رَبَّنَا هَبْ لَنَا مِنْ أَزْوَاجِنَا وَ ذُرِّيّٰتِنَا قُرَّةَ أَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ إِمَامًا

எங்கள் இறைவா! எங்கள் மனைவிமார்களையும், எங்கள் சந்ததிகளையும் எங்கள் கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக! மேலும் எங்களை இறையச்சம் உடையவர்களுக்கு முதன்மையானவர்களாக ஆக்குவாயாக. (அல்ஃபுர்கான்: 75)

எனவே தாய்மார்கள் தங்களுடைய முழு முயற்சியையும் துஆவில் ஈடுபடுத்துவது அவர்களின் தலையாய கடமையாகும். குழந்தை பிறப்பதற்கு முன்பிருந்தே துஆவை உங்களுடைய போர்வையாகவும், விரிப்பாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இறைவா! நீ அருளிய இந்தப் பிள்ளைகளை சரியாக வளர்ப்பதற்கும் நல்ல தர்பிய்யத் வழங்குவதற்கும் நாங்கள் ஆற்றல் அற்றவர்கள் ஆவோம். அவர்களை உன்னுடைய மார்க்கத்தின் தியாகிகளாக ஆக்குவதற்கும், மேலும் இந்தப் பிள்ளைகள் எங்களுடைய கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக்கூடியவர்களாக ஆக்குவதற்கும் உன்னுடைய திருப்தியைப் பெறக் கூடியவர்களாக ஆக்குவதற்கும் நீ எங்களுக்கு நற்பேறை வழங்குவாயாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிள்ளைகளின் தர்பியத்திற்காக துஆவின் மீது அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்கள். குழந்தைகளுக்கு உடல் சார்ந்த தண்டனை வழங்குவது மற்றும் அதிகமாக ஏசிபேசுவதை அன்னார் (அலை) வெறுத்து வந்தார்கள். மேலும் பிள்ளைகளுக்காக துஆ செய்வதை உங்களுடைய வழக்கமாக்கிக் கொள்ளுங்கள் என்று எப்பொழுதும் கூறி வந்தார்கள். அன்னாருடைய செயல் வடிவிலான முன்னுதாரணம் நம்முன் இருக்கின்றது.

அன்னார் (அலை) அவர்கள் தம்முடைய குழந்தைகளுக்காக துஆ செய்தவாறு உருது கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இவர்களை நல்லோராக ஆக்குவாயாக. இவர்களுக்கு மார்க்கம் மற்றும் செல்வத்தின் நற்பேறை வழங்குவாயாக.

இவர்களுக்கு நீயே பாதுகாவலனாக இரு. இவர்கள் மீது உன்னுடைய கருணை இருக்கட்டுமாக.

இவர்களுக்கு நேர்வழி, நீண்ட ஆயுள் மற்றும் கண்ணியத்தை வழங்குவாயாக.

இந்த நாளை நீ அருளுக்குரியதாக ஆக்குவாயாக. என்னை பார்க்கின்ற இறைவன் தூயவன் ஆவான்.

ஷைய்த்தானிடமிருந்து அகற்று. உன்னுடைய நெருக்கத்தை வழங்கு.

ஆன்மாவில் ஒளியையும், உள்ளத்தில் மகிழ்ச்சியையும் நிரப்புவாயாக.

இந்த நாளை அருளுக்குரியதாக ஆக்குவாயாக. என்னை பார்க்கின்ற இறைவன் தூயவன் ஆவான்.

துஆ செய்வதோடு மட்டுமின்றி நல்ல விஷயங்களின் பக்கமும் பிள்ளைகளுக்கு வலியுறுத்துங்கள். மேலும் அறிவுரை செய்வதுடன் உங்களுடைய செயல் முன்மாதிரியை காட்டுவதும் மிகவும் அவசியம் ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: أَكْرِمُوْا أَوْلَادَكُمْ

உங்கள் பிள்ளைகளுக்கு மரியாதை கொடுங்கள். அதனால் அவர்களின் சுயமரியாதை வளரும் என்ற தத்துவம் இதில்

விவரிக்கப்பட்டுள்ளது. நாம் நம்முடைய பிள்ளைகளை மதித்தவாறு அன்புடன் அவர்களுக்கு நல்ல விஷயத்தின் பக்கம் கவனமூட்டும்போது அவர்களும் நம்மை தங்களுடைய நன்மையை நாடக்கூடியவர்களாக புரிந்து கொள்வார்கள். மேலும் பெற்றோர்களுக்கு கீழ்படிந்து நடப்பார்கள்.

ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்கள் என்னுடைய பிள்ளைகள் பொய் பேசமாட்டார்கள் என்று கூறிவந்தார்கள். மேலும், இந்த நம்பிக்கையே எங்களை பொய்யிலிருந்து விலக்கி வைத்தது. இன்னும்கூறப்போனல், (பொய்யை) அதிகமாக வெறுக்க செய்தது.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு ஜமாஅத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகளின் தர்பிய்யத்தைக் குறித்து எந்த அளவிற்கு கவலை இருந்தது என்றால், அன்னார் (ரலி) பெண்களிடம் இதைக் குறித்து எண்ணற்ற உரைகளை நிகழ்த்தினார்கள். அவை நமக்கு கலங்கரை விளக்கமாகும். மீண்டும், மீண்டும் படிப்பது அதன்படி செயல்படுவது நம்முடைய கடமையாகும்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: சமுதாயத்தில் சொர்க்கம் என்பது தாய்மார்களால் தான் உருவாகும். அன்னையின் காலடியில் சொர்க்கம் உள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இது மிகவும் நுட்பமான சொற்றொடர் ஆகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு தாய்மார்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார்கள்! பொதுவாக, தாய்க்கு கீழ்படிதல் மற்றும் கட்டுப்படுதலில் சொர்க்கம் உள்ளது என்று மக்கள் இதற்கு பொருள் கொள்கின்றனர். அதுவும் சரியானதுதான். ஆனால் அதன் உண்மையான பொருள் என்னவென்றால் தாய்மார்கள் சரியாக இருக்கும்போதுதான் மேலும், பிள்ளைகளுக்கு சரியான தர்பித்தை வழங்கும்போதுதான் சமுதாயத்தில் உண்மையான சொர்க்கம் உருவாகும். தாய்மார்கள் நல்லவர்கள் இல்லை என்றால் பிள்ளைகளும் ஒருபோதும் நல்லவர்களாக இருக்க மாட்டார்கள். எந்த சமுதாயத்தின் குழந்தைகள் நல்லவர்களாக இல்லையோ அந்த சமுதாயத்தில் சொர்க்கம் இருக்காது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே எப்பொழுதும் கவலையுடன் பிள்ளைகளுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். பெண்கள் தமது வீட்டில் (பிள்ளைகளுக்காக) நேரத்தை செலவிடுங்கள். நிர்பந்தமான சூழலை தவிர்த்து, குழந்தைகளுக்கு தர்பிய்யத் வயது இருக்கும் வரை வேலைகளுக்கு செல்வது அவசியம் இல்லை. சில தாய்மார்கள் பிள்ளைகளுக்காக தியாகங்கள் செய்கின்றனர். இன்னும் கூறுவதாயின் ப்ரொஃபஷனலிஸ்ட் மருத்துவர்கள், நன்றாக படித்தவர்கள் இருக்கின்றனர். ஆனால், குழந்தைகளுக்காக வீட்டில் இருக்கின்றனர். தாய் அருகிலேயே இருக்க வேண்டும் என்ற தேவை ஏற்படாத நிலையை குழந்தை அடைந்தவுடன் நன்றாக தர்பிய்யத் ஆனவுடன் பின்னர் அவர்கள் வேலைக்கு செல்கின்றனர். ஆக, எவ்வாறு இருப்பினும் இதற்காக பெண்கள்தான் தியாகம் செய்ய வேண்டும். பெண்கள் தியாகம் செய்வதால் தான் தாய்மார்களின் காலடியில் சொர்க்கம் உள்ளது என்ற அந்தஸ்தை இறைவன் அவர்களுக்கு வழங்கியுள்ளான். பெண்களில் தியாக மனப்பான்மை மிகவும் அதிகமாக இருக்கின்றது. எந்தப் பெண்கள் இறைவனுக்காக தங்களுடைய விருப்பத்தை தியாகம் செய்கின்றார்களோ அவர்களுடைய காலடியில் சொர்க்கம் உள்ளது. (அல்ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிகை, 15 மே, 2015)

ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 2004 ஆம் ஆண்டு நைஜீரியாவில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் தம்முடைய உரையில் அஹ்மதிப் பெண்களிடம் கூறினார்கள்: இஸ்லாமிய சமுதாயத்தில் பெண்களுக்கு ஓர் உயர்ந்த அந்தஸ்து உள்ளது என்பதை பெண்கள் நினைவிற் கொள்ளுங்கள். அவர்கள் தங்களுடைய இந்த உயர் அந்தஸ்தை அறியவில்லையென்றால், அவர்களுடைய பிள்ளைகள் எதிர்காலத்தில் ஈமானில் நிலைத்திருப்பார்கள் என்ற விஷயத்திற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. சமுதாயத்தில் இருக்கக்கூடிய தங்களுடைய அந்தஸ்தை பெண்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறில்லையென்றால், அவர்கள் தங்களுடைய கணவன்மார்களுக்கு கீழ்படியாதவர்களாகவும் வருங்கால சந்ததிகளின் உரிமைகளை செலுத்தாதவர்களாகவும் கருதப்படுவார்கள்.

மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் தங்களை படைத்த இறைவனுக்கு துரோகம் செய்து கொண்டிருப்பார்கள். எனவே ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

மேலும் இறைவன் எங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் வருங்கால சந்ததிகளை இஸ்லாத்தின் போதனைப்படி வளர்ப்பதற்கு தகுதி பெற்றவர்களாக நாங்கள் ஆக வேண்டும் என்றும் எப்போதும் நீங்கள் துஆ செய்து வாருங்கள்.

எனது உரையின் ஒரு பகுதியான குழந்தைகளின் தர்பியத்தில் ஒரு தாயின் பொறுப்புகளின் சில அம்சங்களை நான் முன்வைக்கின்றேன்:

**இறைநேசம்**

குழந்தைகளின் தர்பிய்யத் விவகாரத்தில் எல்லாவற்றையும்விட முதலாவதாக இறைவன் மீதான அன்பையும் அவனுடனான முழுமையான தொடர்பையும் உருவாக்க வேண்டும். ஆக, ஒரு தாய் தன்னுடைய பிறப்பின் நோக்கத்தை புரிந்தவாறு இறைவன் முன் குனிய கூடியவளாகவும், தன்னுடைய பிள்ளைகளும் அவ்வாறு செய்வதற்கு தர்பிய்யத் வழங்கக்கூடியவளாகவும் இருப்பது அவசியம் ஆகும். பிள்ளையின் உள்ளத்தில் தொடக்கத்திலிருந்தே இறை நேசத்தை உருவாக்குங்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குழந்தைகளுக்கு முதன் முதலில் கற்றுக் கொடுக்க வேண்டிய விஷயம் லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா ஆகும் என்று கூறியுள்ளார்கள். குழந்தையின் காதில் முதல் பாடமாக இறைவனுடைய கண்ணியத்தையும், மகத்துவத்தையும் எடுத்துரைக்க வேண்டும். பிறந்த குழந்தையின் தர்பிய்யத் எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லாவற்றையும் விட முதலில் குழந்தையின் காதில் பாங்கு கொடுப்பதற்கு கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: சிறுவயதிலிருந்தே இறைவனின் நேசத்தை உள்ளத்தில் உருவாக்குங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இபாதுர் ரஹ்மானாக (ரஹ்மானின் அடியார்களாக) ஆக்குங்கள். சிறுவயதிலிருந்தே இறைவனுடைய நேசத்தை உள்ளத்தில் உருவாக்குங்கள். சிறிய விஷயங்களை புரியத் தொடங்கினால் அப்போது ஏதாவது ஒரு பொருளைக் கொடுக்கும்போது இதை இறைவன் உங்களுக்கு கொடுத்துள்ளான் என்று கூறுங்கள். நன்றி செலுத்தும் பழக்கத்தை உருவாக்குங்கள். பின்னர் மெது மெதுவாக நீங்கள் எந்த விஷயத்தை வேண்டினாலும் இறைவனிடம் வேண்டுங்கள் என்று புரிய வையுங்கள். ( 2003 ஆம் ஆண்டு பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு)

ஒரு தாயின் கடமைகளில் இரண்டாவது முக்கியமான கடமை குழந்தைகளின் உள்ளத்தில் தொழுகையை நிறைவேற்றுவதன் மீதான அன்பை உருவாக்க வேண்டும்.

எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே! தர்பிய்யத் செயலிலிருந்து தொடங்குகின்றது என்பது உண்மைதான். உதாரணமாக, நாம் கடமையாக்கப்பட்டுள்ளதை பேணி நடந்தால் தடுக்கப்பட்டதிலிருந்து தவிர்ந்து கொண்டால் நிச்சயமாக நம்முடைய பிள்ளைகளும் அவ்வாறே செய்வார்கள். நாம் தொழுவதற்காக பள்ளிவாயிலுக்குச் சென்றால் நம்முடைய குழந்தைகளும் ஓடி வந்து நம்முடன் இணைந்து கொள்வார்கள். தாய்மார்கள் வீட்டில் தொழுதால் சிறிய குழந்தைகள் அவர்களை பின்பற்றியவாறு ஸஜ்தா செய்வார்கள். ஆனால், நாம் சுயமே தொழாமல் குழந்தைகளை தொழுமாறு வலியுறுத்தினால் மேலும், குழந்தை தொழுகையாளியாக வேண்டும் என்ற விருப்பம் கொண்டால் அது ஒரு வீணான எண்ணமாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

தொழுகை மனித வாழ்வின் உயிராகும். தொழுகை இல்லை என்றால் இறைவனுடன் எந்த தொடர்பும் இருக்காது. எனவே இதனை பழக்கப்படுத்துவதற்கும் சிறு வயதிலிருந்து தர்பிய்யத் கொடுப்பது அவசியமாகும். திடீரென்று குழந்தைகளிடம் இந்த பழக்கம் உருவாகாது. இதற்கான வழிமுறையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 18-25 May 2023 Issue No. 20 & 21

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

தந்துள்ளார்கள். அதாவது குழந்தைகளின் 7 வயதிலிருந்து அவர்களுடன் தொழுங்கள். மேலும் அன்புடன் இவ்வாறு செய்யுங்கள். எந்த கடினமும் காட்டத் தேவையில்லை. அடிக்கவும் தேவையில்லை. அதன் பிறகு, பத்து வயது வரை குழந்தை அன்புடனும், பாசத்துடனும் கற்றுக் கொண்டால் பத்து முதல் பன்னிரெண்டு வயது வரை அவர்கள் மீது சற்று கண்டிப்பு காட்டுங்கள். ஏனெனில், அந்த வயதில் சில லேசான தண்டனைகளையும் சில கடுமையான வார்த்தைகளையும் குழந்தைகளின் தர்பிய்த்திற்காக பயன்படுத்துவது அவசியம் ஆகும். (ஜுமுஆ பேருரை, 11 பிப்ரவரி, 2000)

ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் நுஸ்ரத் ஜஹான் ஸாஹிபா (ரலி) அவர்கள் தொழுகையை மிகவும் பேணி வந்தார்கள். தொழுவது மட்டுமல்லாமல் குறித்த நேரத்தில் தொழுதும் வந்தார்கள். மற்றவர்களுக்கும் இதன் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். தொழுகை நேரம் வந்தவுடன் உளு செய்துவிட்டு பாங்கிற்காக காத்திருப்பார்கள். பாங்கிற்கு பிறகு அக்கம் பக்கம் உள்ள குழந்தைகளிடம் நான் தொழ போகின்றேன் நீங்களும் தொழுங்கள் என்று கூறுவார்கள். இவ்வாறே தனது செயல் முன்மாதிரியின் மூலம் அறிவுரை கூறிவந்தார்கள். பாருங்கள்! இதுவே அறிவுரை வழங்குவதற்கான சிறந்த வழிமுறையாகும்.

சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு தொழுகையின் பொருளை கற்றுக் கொடுப்பது தாய், தந்தையின் கடமையாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறை வணக்கம் என்பது அன்புடன் தொடர்புடையதாகும். சடங்கு, சம்பிரதாயமாக பொருளை கற்பிப்பதன் விளைவாக எவருக்காவது இறை வணக்கம் வருமா? ஒருபோதும் வராது. இறைவணக்கத்தில் அன்பு கொண்ட மற்றும் தொழுகையை விரும்பக்கூடிய பெற்றோர்கள் குழந்தையுடன் தனிப்பட்ட தொடர்பை உருவாக்கி பொருளை கற்பிக்கும்போது குழந்தை தனது பெற்றோரின் கண்களைப் பார்த்து அவர்களின் இதயத்தின் அரவணைப்பை உணர்கிறது. அவர்களின் உணர்வினால் குழந்தைகளிடத்திலும் ஓர் உணர்வு ஏற்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் தொழுகையை கற்பித்தால் அந்த கற்பித்தல் வேறு வகையாக இருக்கும்.

ஒவ்வொரு அஹ்மதிக்கும் தொழுகை விஷயத்தில் பணியாற்ற தேவையுள்ளது. கடின உழைப்பின் தேவையுள்ளது. தங்களுடைய ஆன்மாவை இணைக்க தேவையுள்ளது. தன்னுடைய முழு இருப்பையும் இதில் நுழைக்க தேவை உள்ளது. அப்பொழுதுதான் இறைவன் பார்வையில் தொழுகையை நிறைவேற்றக்கூடிய சந்ததிகளாக இருக்கக்கூடிய சந்ததிகளை உருவாக்க முடியும். ( ஜுமுஆ பேருரை. நவம்பர் 8. 1985)

### கிலாஃபத்துடனான அன்பு

அதுபோன்று குழந்தைகளின் தர்பிய்யத்தில் ஒரு முக்கியமான அம்சம் கிலாஃபத் மீதான அன்பின் உணர்வை நம்மிலும் நம் குழந்தைகளிலும் உருவாக்குவதாகும். இன்று பூமியில் வாழும் அனைத்து மக்களிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே கிலாஃபத் அமைப்புடன் தொடர்பு கொண்டு ஈடேற்றத்தில் பங்கு வகிக்கின்றது.மேலும், அதனுடைய அருட்களிலிருந்து அருளை பெற்று வருகிறது. இந்த அருட்கள் தலைமுறை தலைமுறையாக நம்மில் தொடர வேண்டுமென்றால் முழு உண்மையுடன் காலத்தின் கலீஃபாவிற்கு கீழ்ப்படிய வேண்டிய தேவை உள்ளது. மேலும் நாம் எழுவதும், அமர்வதும், அனைத்தும் காலத்தின் இமாமுடைய வழிகாட்டலின் படி இருக்க வேண்டும் என்ற பெரிய பொறுப்பு நமக்கு உள்ளது. இதுவே கிலாஃபத்தின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், அதனுடைய அருட்களைப் பெறுவதற்கும் வழிமுறையாகும். இதற்காக ஹுஸூர் அன்வர் அவர்களுடைய அனைத்து குத்பாக்களையும், மேலும் நிகழ்ச்சிகளையும் கேட்க வேண்டும். மேலும், தொடர்ச்சியாக ஹுஸூர் அவர்களுக்கு கடிதம் எழுதி வர வேண்டும். உங்களுடைய குழந்தைகளிடம் இந்தப் பழக்கத்தை உருவாக்குங்கள். எந்த ஒரு முக்கியமான முடிவை எடுப்பதற்கு முன்னரும் நமது அன்பிற்குரிய காலத்தின் கலீஃபாவிற்கு கண்டிப்பாக வழிகாட்டலைப் பெறுங்கள் என்று பிள்ளைகளிடம் வலியுறுத்துங்கள். கலீஃபாவை சந்திப்பதற்கான விருப்பம் இருந்தால் உங்களுக்கு சந்திக்க வாய்ப்பு கிடைத்தால் அதற்கு முன்னுரிமை வழங்குங்கள். mta உடன் பிள்ளைகளை இணைத்து வையுங்கள்.நீங்களும் அவர்களுடன் சேர்ந்து நிகழ்ச்சிகளைப் பாருங்கள்.மேலும் உங்களிடமும், உங்கள் பிள்ளைகளிடமும் ஹுஸூர் அன்வர் அவர்களுக்காக துஆ செய்யும் பழக்கத்தை உருவாக்குங்கள். இதனால் ஹுஸூர் அன்வருடன் இருக்கின்ற நன்றியுணர்வு மற்றும் அன்பின் தொடர்பு உறுதி வாய்ந்ததாக ஆகிக் கொண்டே செல்லும். இன்ஷாஅல்லாஹ்.

கிலாஃபத்துடனான அன்பு தொடர்பாக 2005 தன்ஸானியா ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின்போது ஓர் உரையில் ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: மேலும், உகாண்டாவில் நாங்கள் காரில் இருந்து இறங்கும்போது இரண்டரை வயது குழந்தையை தூக்கிக் கொண்டு ஒரு பெண் ஓடிக் கொண்டிருந்தார். அவரது கண்ணில் ஓர் உத்திரவாதம் இருந்தது. கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் இருந்த உறவு தென்பட்டது. நன்றியுணர்வின் உறவு தெள்ளத் தெளிவாக தெரிந்தது. குழந்தை என்னை கவனிக்கவில்லை. பார்!பார்! என்று அவர் தனது குழந்தையின் முகத்தை என்னை நோக்கி அடிக்கடி திருப்பிக் கொண்டிருந்தார். கூட்ட நெரிசலையும் அவர் பொருட்படுத்தவில்லை. இறுதியாக குழந்தையின் பார்வை என் மீது விழுந்தபோது குழந்தை சிரித்துக் கொண்டே கையை அசைத்தது. அப்பொழுதுதான் தாய்க்கு நிம்மதி வந்தது. குழந்தையின் முகத்தில் பல வருடங்களாக என்னை தெரியும் என்பது போல பொலிவும் சிரிப்பும் தோன்றியது. இப்படிப்பட்ட தாய்மார்களின் மடியில் கிலாஃபத்தை நேசிக்கக் கூடிய குழந்தைகள் வளர்ந்து வரும் வரை அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு எந்த ஆபத்தும் இல்லை.

தமிழாக்கம் :
மவ்லவி ஸாஹிர் ஹுஸைன்

* * * * *

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad